

# ஞானச்சுடர்

மார்கழி

2012



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள்வழி



**சொற்கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா**
**உட்கோட்ட மின்மை பெறின்.**

**பொருள் :** ஒருவனுடைய மனம் கோணலில்லாமல் இருக்கு மானால் அதன் சார்பாகிய சொல்லால் கோணலில்லா திருப்பது நடுவுநிலைமையாகும். (119)

**வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோற் செயின்.**

**பொருள் :** பிறர் பொருளையும் தம் பொருள்போலப் பாதுகாத்து வாணிகம் செய்கின்றவர்களுக்கு வியாபாரம் வளரும். (120)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### திருவாய்மொழி

குறள் வெண்பா



நித்திரையை நீக்கி நினைவாக நிற்பவர்க்குக்
கர்த்தனருள் மேவுமெனக் காண் 13

தத்துவங்க ளாறாறும் தாமல்ல வென்றுகண்டார்
பத்தர்க்குப் பத்தரவர் பார் 14

அண்டபிண்ட மெல்லா மனைத்துஞ் சிவரூபம்
கண்டுதொண்டு செய்வாய் கதி 15

மண்டலம் மூன்றும் மருவிநின்ற மெய்ப்பொருளைக்
கண்டு களிப்பாரைக் காண் 16

காணுகின்ற கண்ணிற் கலந்த பெருமானே
நான்நீ அவனென் றறி 17

முத்திக்கு வித்தை முனையிலிட்டுச் சீராட்டும்
பத்தர்களைக் கண்டு பணி 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு- 2 சுடர்- 180

## பொருளடக்கம்

2012 மார்கழி


| | | |
|---|---|---|
| துதியும் அர்ச்சனையும் | சு. சிவராசா | 01 -04 |
| இறைவனுக்கு களியமுது... | மு. சிவலிங்கம் | 05 -07 |
| திருவண்டப்பகுதி | சு. அருளம்பலவனார் | 08 -09 |
| வாழ்வியலோடு... | ஆ. இராசரத்தினம் | 10 -12 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 13 -15 |
| தமிழினத்திற்கு... | சிவ. சண்முகவடிவேல் | 16 -18 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | - | 19 -21 |
| சமய வாழ்வு... | இரா. செல்வவடிவேல் | 22 -25 |
| சிறுவர் கதைகள் | - | 26 -28 |
| தனிப்பெருந் தமிழ்த்.... | கனக. நாகேஸ்வரன் | 29 -30 |
| அன்னதானக்... | செ. ரவிசாந் | -31 |
| சைவ சமய வினா விடை | ஆறுமுகநாவலர் | 32 -33 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 34 -35 |
| கும்பாபிஷேக மகிமை | செல்வி செ. ஜடா | 36 -37 |
| நித்திய அன்னப்பணி | - | 38 -39 |
| சந்நிதிக் கந்தர் சதகம் | சி. ஜனகா | 40 -41 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக் குருக்கள் | 42 -43 |
| உரைசான்ற நூல்களை... | முருகவே பரமநாதன் | 44 -45 |
| திருமந்திரக் கதைகள் | கே.வி. குணசேகரம் | 46 -47 |
| ஆழ்கடல்... | க. தெய்வேந்திரம் | -48 |
| தங்கம்மா அப்பாக்குட்டி | - | 49 -51 |
| திருவாசக விழா | - | -52 |
| அனுமனின் பெருமை | செல்வி யோ. ஜிந்துஷா | 53 -55 |
| கந்தபுராணம்... | செல்வி பா. வேலுப்பிள்ளை | 56 -57 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 58 -60 |



அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மதிப்பீட்டுரை:-

கார்த்திகைமாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை செ. பரமேஸ்வரன் அதிபர் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது உரையில் ஆச்சிரமமானது பல்வேறு சேவைகள், பணிகளைச் செய்து வருவதுடன் ஞானச்சுடர் எனும் மலரை வெளியிட்டு மக்களின் அறிவுப் பசியைப் போக்கி வருகின்றது என்று கூறினார்.


அடுத்து அவர் தனது உரையில் ஆச்சிரமமானது பசித்துவரும் அன்பர்களின் பசிப்பிணியைப் போக்குவதற்கென நித்திய அன்னப்பணியை ஆற்றி வருகின்றது என்று சபையோருக்கு கூறினார்.

மேலும் இம்மலரானது அழகான அட்டைப் படத்துடனும், கட்டுரைகள், கவிதைகள், பாடல்கள், பொன்மொழிகள் எனப் பல்வேறு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவருகின்றது. அத்துடன் ஞானச்சுடர் உலகம் தழுவிய நிலையில் இருக்கின்றதோடு பிற மதத்தவர் மத்தியிலும் திகழ்கின்றது என்று கூறினார். தொடர்ந்து கூறுகையில் வாரந்த நிகழ்வு என்று அட்டையில் பிரசுரிக்கப்பட்ட விடயத்தின்மூலம் ஆச்சிரமத்தில் வெள்ளிதோறும் நடாத்தப்படும் நிகழ்வில் இலைமறை காயாக உள்ளவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பத்தினைக் காணலாம் என்றதோடு ஒரு மனிதனை முழு மனிதனாக்குவதற்குத் தேவையான விடயங்கள் அனைத்தையும் ஆச்சிரமமானது கிரமம் தவறாது செய்து வருகின்றது. ஆகவே நாம் அனைவரும் ஆச்சிரமத்தைப் போற்றி வணங்குவோம் என்று கூறினார்.

மேலும் இச்சுடரில் உள்ள ஆக்கங்களை சிறுவர்முதல் பெரியோர்வரை அனைவரும் படித்து இன்புறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இச்சுடரில் உள்ள ஒவ்வொரு விடயமும் மனித வாழ்க்கைக்குத் தேவையான விழுமியக் கருத்துக்களைக் கூறுவனவாக உள்ளன. இக்கருத்துக்களைப் படித்து வாழ்க்கையில் நல் இன்பங்களைப் பெற்று உய்வோமாக என்று கூறினார். புதிய ஆண்டில் (2013) வெளிவரும் ஞானச்சுடர் மலரானது புதுப்பொலிவுடன் பல்வேறு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு இப்பூமியில் திகழும் என்று கூறி தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்




முன்னாள் இந்து கலாச்சார அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் அமரத்துவம் அடைந்து நான்கு வருடங்கள் ஓடி மறைந்திருக்கிறது. ஒவ்வொரு வருடமும் தைமாதம் 1ஆம் தேதி உணர்வுபூர்வமாக நினைவு கூரப்படும் மாமனிதராக உயர்ந்து நிற்கிறார். அவர் ஒரு சமயப்பற்றாளர். சமூகப் பணியாளர். இவர் இந்து கலாச்சார அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் அனைத்து சைவக் கோயில்களுக்கும் தாமாகவே முன்வந்து அனைத்து உதவிகளையும் செய்தவர். செல்வச்சந்நிதி ஆலயத்தின் புதிய சித்தரத் தேர் உருவாக்கத்தில் பெரும் பங்கு கொண்டதுடன், சந்நிதியான் வடக்கு வீதியில் அமைந்துள்ள பூங்காவன மண்டபத்தினையும் அமைத்துக் கொடுத்ததும் அனைவரும் அறிந்ததாகும்.

மிகவும் நெருக்கடியான கால கட்டத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் தேவைகளை அறிந்து, அவர் செய்த பல்வேறு உதவிகளும் எம்மால் மறக்க முடியாதவை. இதற்கு அமைவாக, ஆச்சிரமத்தின் புதிய வைத்திய சேவைக் கட்டிடத்தினை அமரர் மகேஸ்வரன் நினைவாக 01.01.2010ஆம் ஆண்டு நிறுவி அன்னார் ஆச்சிரமத்துக்கு ஆற்றிய பணிகளை நன்றியோடு நினைவு கூருகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செல்வச் சந்நிதிசேர் மயில்வாகனனே!



செந்தமிழ்ச் சொல் மலரெடுத்து
சிறந்த கவிதை தான் தொடுத்து
செம்மனத்தைப் பொன்மனமாய்
சீறடியில் புனைவேன்
வந்தனையே பொருளாக
ஆற்றுப்படை யோடு
வளமிக்க அநுபூதி
அலங்காரமும் இசைப்பேன்
பந்தமின்றி கந்தா என்பேன்
பாலமுருகா என்பேன்
பற்றுடனே சந்நிதியான்
பாத மலர் தொழுவேன்
எந்தையே என்தாயே
என்னைக்கை விடாதே
எழில் மிக்க செல்வச்சந்நிதி
ஈச மயில் வாகனனே

திருமுருகா என்று நான்
செல்வச்சந் நிதி வந்தேன்
சிந்தனையில் சிந்தித்து
வந்தனை செய்தேனே
ஒரு முருகா என நினைப்பேன்
ஓயாது பாடுவேன்
உள்ளமே கோயிலாய்
உனை இருத்திப் பூசிப்பேன்
அருள் முருகா வென் றெனது
ஐம்புல வேடரை அடக்கி
அகமே தகளியாக
அன்பு திரி மாட்டி
உருகுவேன் உணர் வென்னும்
நெய்யிட்டு ஒன்றாய்
ஒளிவிளக் கேற்றியதில்
உனைக் காண்பேன் ஐயா

-வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அ. தபேசன்**
(இரசாயனவியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
**மு. சுஸ்ருதன்**
(சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்)
**வே. சம்பந்தநாதன்**
(கிராமசேவகர், புன்னாலைக்கட்டுவன்)
**த. வயித்திலிங்கம்**
(திருநெல்வேலி)
**சங்கரப்பிள்ளை இரத்தினம்**
(கிருஸ்ணா மில், சாரையடி)
**செல்வி நற்குணம் விஜிதா**
(கூவில், புலோலி தெற்கு)
**செ. சின்னத்துரை**
(ஆசிரியர், மகாத்மாலேன், நெல்லியடி)
**சி. வீரசிங்கம்**
(நீதிமன்ற பதிவாளர், கரவெட்டி)
**செ. சுரேந்திரா**
(சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், அல்வாய்)
**சி. சந்திரசேகரம்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**K. ஸ்கந்தபாபு**
(**H.N.B.** கிளை, நெல்லியடி)
**க. நடராசா**
(ஓட்டுமடம், யாழ்ப்பாணம்)
**மா. மகாலிங்கம்**
(பழைய பொலிஸ் ரேசன் வீதி, ஆனைக்கோட்டை)
**சி. வேலாயுதம்**
(கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை)
**திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்**
(சுழிபுரம் மேற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிருபைநாதன் அஜந்தன்**
(இணுவில் மேற்கு)
**பரமநாதன் மயூரன்**
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
**கணேசராஜா நிர்மலராஜன்**
(சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்)
**திருமதி த. தவேந்திரன்**
(ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி)
**க. செல்லத்துரை**
(விஷ்ணு ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ்)
**சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள்**
(நீர்வேலி)
**அ. பஞ்சாடீகேசசர்மா**
(ஆவரங்கால்)
**A.T. சிவனேசபிள்ளை**
(ஞானத்தில்லை, இடைக்காடு)
**சிதம்பரி சிவபாதம்**
(மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை)
**இ. வசந்தகுமார்**
(மானிப்பாய் வடக்கு)
**ச. சசிகரன்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**S. சுப்பிரமணியம்**
(A.G.A. லேன், நெடியகாடு)
**சி. சிவனேசன்**
(கவிஞர் செல்லையா வீதி, அல்வாய்)
**திருமதி சிவநாயகி கந்தசாமி**
(வசந்தகம், இமையாணன்)
**நா. விக்னேஸ்வரன்**
(கோகுலம், சுதுமலை)
**தி. சிவபாதசுந்தரம்**
(உயரப்புலம், ஆனைக்கோட்டை)
**ந. சிவராஜா**
(குமரக்கோட்டம், கோண்டாவில்)
**சு. ஸ்ரீஸ்கந்தராசா**
(பலாலி வீதி, திருநெல்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. இரத்தினசபாபதி**
(கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
**ஸ்ரீரஜனி அமரசிங்கம்**
(பொதுநூலகம், அச்சுவேலி)
**S.R. சரவணபவன்**
(பிள்ளையார் கோயிலடி, தாவடி)
**க. வாமதேவன்**
(பஜனைச்சபை, வழக்கம்பரை)
**திருமதி ச. செல்வறஞ்சனா**
(சுண்ணாகம் கிழக்கு)
**S. மனோகரன்**
(மாதா கோயிலடி, கோப்பாய்)
**சு. இலங்கநாயகம்**
(கைதடி தென்கிழக்கு, கைதடி)
**நடராஜா சறோஜா**
(குடும்பநலசேவை உத்தியோகத்தர், தெல்லிப்பழை)
**த. சுகந்தன்**
(நீர்வேலி வடக்கு, நீர்வேலி)
**கந்தையா காங்கேசன்**
(பண்ணாலை, தெல்லிப்பழை)
**சி. சரவணப்பெருமாள்**
(மாணிக்கவளவு, கரணவாய்)
**வே. கிருஷ்ணபிள்ளை**
(C.T.B., நெசவுசாலையடி, கரணவாய்)
**S. நவரெட்ணம்**
(கெருடாவில் வடக்கு, தொண்டைமானாறு)
**S. சத்தியமூர்த்தி**
(காட்டுவளவு, வல்வெட்டித்துறை)
**சு. சிவலிங்கம்**
(குகன்குடிசை, பொலிகண்டி)
**பா. பாலச்சந்திரன்**
(சண்முகபவனம், மயிலணி)
**செ. அரியானந்தம்**
(வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு)
**N. குணரெட்ணம்**
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**V. சிவனேசன்**

(கமலை, மானிப்பாய் வீதி)

**க. முருகானந்தன்**

(கட்டுடைச்சந்தி, மானிப்பாய்)

**செ. உலகநாதபிள்ளை**

(வியாபாரிமூலை, பருத்தித்துறை)

**தம்பன் இரத்தினசிங்கம்**

(நாவற்காடு)

**நமசிவாயம்பிள்ளை சிவனருட்காந்தி**

(மானாங்கானை, வல்வெட்டித்துறை)

**திருமதி இ. தம்பிராசா**

(குணயாவளவு, ஈவினை)

**இ. நடராசா**

(தாவடிச்சந்தி, கொக்குவில்)

**R. நந்தகோபால்**

(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)

**சி. சிவசுப்பிரமணியம்**

(ஆனந்தநிலையம், கரவெட்டி)

**இ. ஈஸ்வரகுமாரன்**

(ஐயனார் கோயிலடி, யாழ்ப்பாணம்)

**திருமதி கமலா குணரெத்தினம்**

(வட்டுக்கோட்டை)

**திருமதி சத்தியவாணி நந்தகுமார்**

(நவாலி, மானிப்பாய்)

**கந்தையா செல்வக்குமார்**

(புத்தூர் கிழக்கு, புத்தூர்)

**ஞானச்சுடர் வாசகர்களுக்கு எமது புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரிற் கலந்துள்ளோன் என்று உரைப்பாருமுளர்.

அவ்வயின் அன்னதொன்று அறிந்தோன் என்றது அவ்வீணையினிடத்து அத்தன்மைத்தாகிய இன்னிசையில் ஒப்பற்றதாகிய பிரசவோசையினை அறிந்தவன் என்றவாறு. பிரசவோசை வேத சுரங்கள் நான்கினுள் ஒன்று. அது சாமகானத்திற் புலப்படுமென்ப (ஏழிசையா யிசைப்பயனாய்" எனச் சுந்தரர் தேவாரத்தும் 51:10) வருதல் காண்க. அவ்வயின் என்னும் சுட்டு வீணையினையும் அன்னது என்னும் சுட்டு இன்னிசையினையும் குறித்து நின்றன.

பரமன்- மேலானவன். "அடியார் பந்தனை விண்டற நல்கும் பரமன்" (வார்த்5) "பால்திரு நீற்றெம் பரமனை" (எண்ணப்6) என அடிகள் அருளியமை காண்க.

பிரமன் மால்காணாமை இறைவன் அழலுருவாய் நின்ற காலத்தென்க. "அலரவனும் மாலவனு மறியாமே யழலுருவாய், நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதா னென்னேடீ" (சாழல்6) என அடிகள் அருளியமை காண்க.

"அடியும்முடி, பிரமன் மாலும் அறியாமை நின்ற
பெரியோன்" (ஞான 253:10)

"பிரமனு மாலுமேலை முடியோடு பாதம் அறியாமைநின்ற
பெரியோன்" (நாவு 14:2)

எனத் தேவாரத்து வருவனவும் ஈண்டு அறியற்பாலன.

அற்புதன் என்றது இறைவனது சர்வவல்லமை முதலான குணவிசேடங்களைக் குறித்தது.

அநேகன் என்றது "ஒன்றாய் இருதிறனாய், ஓரைந்தாய் ஐயைந்தாய் அன்றாதியின் மீட்டுமைந்தாய் அளப்பிலவாய்" அமைந்த அருளுருவங்களையும், "மண்ணீரனல் வளிவானொடு வெண்ணீர்மதி வெங்கதிர் உயிர் எண்ணீடுரு" என்னும் அட்ட மூர்த்தங்களையும் குறிக்கும். தான் ஒருவனாயினும் உயிர்களுக்கு அருள்செய்ய வேண்டிய பல திருவுருவங்களைக் கொள்ளுதலின் "அநேகன்" என்றார் எனினுமாம்.

பழையோனாகிய இறைவன் ஆகம அளவையைக் கடந்தோனாதலின் "சொற்பதங் கடந்த தொல்லோன்" என்றார். என்றது வாக்குக்கெட்டாதவன் என்றவாறு.

"அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு
மவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படிய நிந்நிறத்த னிவ்வண்ணத்தன்
இவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே"
(தே 311:10)

என அப்பரடிகள் அருளியவாறுங் காண்க. பதம்- அளவை; தரம். தொல்லோன்- பழையோன். "சுற்றம்பல மின்மை காட்டித் தன்றொல்கழறந்த தொல்லோன்" (346) என்றார் திருக்கோவையாரினும்.

சித்தம்- மனம். சேட்சியன்- தூரத்தின்கணுள்ளவன்; என்றது மனத்தினால் சிந்தித்தறிய முடியாதவன் என்றவாறு. இதனால் இறைவன் மனாதீதன் என்பது புலப்படுத்தியவாறு. "மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே" என்றார் சிவபுராணத்தும். இறைவனுக்கு "அப்பிரமேயன்" என்னும் பெயருண்மையின் காட்சி முதலிய அளவைகளால் அறியப்படாதவன் என்பது போதரும்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியலோடு வகைசேரும் இதிகாசம்


திரு ஆ. இராசரத்தினம் அவர்கள்

முக்காலமும் உணர்ந்த விசுவாமித்திர முனிவர் முன்செல்ல இராமனும் தம்பி இலக்குமனும் பின்தொடர்ந்து மிதிலை நகர் வருகிறார்கள். அவதாரச் செயலைச் சிறிது சிறிதாக முடித்துப் பின் மிதிலை நோக்கி வருகிறார்கள். இராம இலக்குமணர் முனிவருக்குச் செய்த உதவிக்கு நன்றிக்கடன் செய்யவோ!

காட்டில் பாலைவனத்தில் காலத்தைக் கழித்தவர்களுக்கு மிதிலை நகர் மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இராமன் மிதிலையை அடைந்தபோது மிதிலை மாநகரிலுள்ள கோபுர வாயிற்கொடி உட்புறமாக அசைந்துகொண்டிருந்த தன்மையைக் கவிஞன் புனைந்துரைக்கும் கால் அக்கொடி அசைந்து கொண்டிருந்த தன்மை அம்மாநகர் இராமனை நோக்கி "நீவரின் மங்கலம் உண்டாகும்" ஏனெனின் உனது உயிரான சீதாபிராட்டி எங்கள் மாதவத்தால் தனது இருப்பிடமாகிய செந்தாமரையை விட்டு நீங்கி இவ்விடம் எழுந்திருக்கிறாள். அதனால், விரைந்து வா வா என்று கைகளால் அழைப்பது போன்றிருந்தது என்னும் கருத்தை வெளிப்படுத்தி,

"மையறு மலரில் நீங்கி யான் செய் மாதவத்தின் வந்து
செய்யவளிருந்தானென்று செழுமணிக் கொடிகளென்னும்
கைகளை நீட்டி யந்தக் கடி நகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாவென்றழைப்பது போன்றதம்மா"



தனது உயிரான இராமன் முன்பே அவதாரம் செய்ததினால் அவரைத் தேடித் தன் இருப்பிடமாகிய செந்தாமரையைவிட்டு நீங்கி வந்ததை "மையறு மலரின் நீங்கி" என்றார். மேலும் இராமனுடைய அவதாரம் இராவணனை வதஞ் செய்வதற்கே. ஆகவே இராவணன் யாதேனும் பிழை செய்தாலே அவனை வதஞ் செய்தல் நீதியாகும். அதனால் சீதாபிராட்டியை இராவணன் கவர்ந்து போகும் குற்றத்தைச் செய்வதற்குச் சீதாபிராட்டி மண்ணுலகத்தில் செந்தாமரையை நீங்கி வரவேண்டிய நியதி உண்டு. அதனால் "மையறு மலரின் நீங்கி..." என்றார். இராமாயணத்தில் முக்கிய பாத்திரம் சீதாபிராட்டியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு விசுவாமித்திரர் தசரதனின் அரண்மனை சென்றபோது "என்ன மாதவஞ் செய்தது இச் சிறுகுடில்" என்று புகழ்ந்தான். மேலும் விதுரன் குடிசைமீது மகாபரமாத்மா-கிருஸ்ணர் எழுந்தருளிய போதும் "என்ன தவம் செய்தது இச்சிறுகுடில்" என்றார். இங்கும் சீதை எழுந்தருளுவதற்கும் மிதிலை மாநகர் செய் பெரிய தவப் பயனே. தவமும் தவமுடையவர்க்கே. அதனால் "யாம் செய்த மா தவத்தின் வந்து" என்றார்.

திருமண விழாவுக்கு வரும் விருந்தாளிகளை மணமக்களின் பெற்றோர்கள் வணக்கஞ் செய்து வீட்டினுள் (மண்டபத்தினுள்) அழைத்துச் செல்வது கைகளே. அதனால் "செழுமணிக் கொடிகள் என்னும் கைகளை நீட்டி ஒல்லை வாவென்றழைப்பது போல என்றார்.

இங்கு இராமனைக் கமலச் செங்கண் ஐயன் என்றும் சீதையைச் செய்யவள் என்றும் சிறப்பித்துப் பின் இருவரும் மாறிமாறி இதயம் புக்கபொழுது "வரிசிலை அண்ணல்" என்றும் "வாள்கண் நங்கை" என்றும் உவமிக்கின்றார். பின்புவெற்றிபெற உதவியது வரிசிலை என்பதாம்.

இனி கோவலன் கண்ணகியுடன் மதுரை மாநகர் சென்றபோது அந்நகரின் கீழ்த்திசைக் கோபுரத்தின் கொடி குடதிசையில் நின்றும் வந்த காற்றால் அசைந்து கொண்டிருந்த தன்மை அம்மதுரை நகர் கோவலனை நோக்கி நீ இங்கு வராதே வந்தாற் தீங்கு வரும். வராதே வராதே என்று மறுத்துக் காட்டியது போன்றிருந்தது என்னும் கருத்தமைய

"போரிழந் தெடுத்த வாரெயினெடுங் கொடி
வாரா வென்பன போன்மறித்துக் கைகாட்ட"

என்று அழகாக அமைத்துள்ளார்.

ஆகவே கொடிகளின் அசைவை உற்று நோக்குங்கால் உள்நோக்கி அசைவது மங்கலம் உண்டென்றும், மறுத்துக் காட்டியது. அதாவது வெளிநோக்கி அசைவது அமங்கலம். தீமை வருமென்பது மறைமுகமாகக் காட்டப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் கோவலனுக்கு உண்டான தீமையையும் இராமனுக்கு உண்டான நன்மையையும் கொடியின்மீது ஏற்றி இடத்திற் கேற்பப் புனைந்தருளிய இரு பெருங் கவிஞர்களுடைய மதிநுட்பம் போற்றுதற்குரியது.

இதனாலேயே வரகவி சுப்பிரமணிய பாரதி அவர்கள் "யாமறிந்த புலவர்களிலே கம்பரைப்போல், வள்ளுவரைப் போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை. உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை" என்று சத்தியஞ் செய்கிறார்.

மாவிலை தூக்குதல், தோரணம் கட்டல் முறையில் சில வேறுபட்ட கருத்துக்கள் இருப்பதால் முன்கூறிய பாடல்களால் அதன் ஐயம் தீர்ப்பதே எமது நோக்கமேயன்றிக் கம்பன், இளங்கோவின் காவியக் கடலில் நீந்தும் அனுபவம் சிறிதும் அற்றோன் என்பதை முதற்கண் கூற விரும்புகின்றேன்.

செழுமணிக் கொடிகளென்னும் கைகளை நீட்டி அந்தக்கடி நகர் கமலச் செங்கண் ஐயனை ஒல்லை வாவென்றழைப்பது போன்றது என்று கம்பன் அழகாக வர்ணித்தார். கொடிகளின் அசைவை உற்று நோக்குங்கால் உள்நோக்கி அசைவது மங்கலம் உண்டாம் என்றும், மறுத்து அசைவது வெளிநோக்கி அசைவது அமங்கலம் (தீமை) என்பதை முன்கூட்டியே மறைமுகமாகக் காட்டிய கவிஞன் திறனை தாம் உய்த்துணர வேண்டும்.

அதனால் ஆலயங்களில் நடைபெறும் உற்சவ விழாக்களிலும் திருமண வைபவங்களிலும் வீடுகளில் சுபகாரியம் நடைபெறும் காலங்களிலும் மாவிலைத் தோரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலையின் காம்பு நுனியை முன்புறமாக வளைத்து இலையின் முன்பகுதியில் காம்பைக் குத்தித் தொங்கவிட வேண்டும். (அதாவது காம்பின் நுனி உள்நோக்கி நிற்கும்) இது மாவிலை தலை குனிந்து வரவேற்கும் பாணியில் இருக்க வேண்டும்.

தென்னங் குருத்துத் தோரணம் நுனி கீழ் நோக்கி இருத்தல் வேண்டும். அதாவது தேவர்களின் ஆசீர்வாதம் பெறுதல். (வானவர் பூமழை பொழிந்தனர்) மங்கல காரியத்துக்குரிய தோரணத்தில் 5 அல்லது 7 குருத்துக்கள் இருக்கவேண்டும்.

அபரக் கிரியையில் தோரணம் மேல் நோக்கி அமைய வேண்டும். இலையின் காம்பு நுனி பின்புறமாக மடித்து குத்துதல் வேண்டும். அதாவது காம்புநுனி வெளிநோக்கி நிற்கும். தோரணத்தில் 3 குருத்துக்கள் மட்டுமே காணப்படும். மேல்நோக்கிச் செல்லுதல் இறைவன் திருவடியை அடைதல். பிரேதத்தின் கால்ப்பக்கம் வெளியேறும் பக்கம் அமைதல். (மீண்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமல்)

துணைநூல்: 1. கவிச்சக்கரவர்த்தி கம்பனே
2. அகில இலங்கை மாமன்ற வெளியீடு கையேடு.

## சந்நிதிக் கந்தன் கீர்த்தனமாலை – 38

–இராசையா. குகதாசன்–

### பல்லவி (மங்களம்)

சந்நிதி முருகனுக்கு ஜெயமங்களம் – வாழப்
பன்நிதி அருளினர்க்கு சுபமங்களம்

### அநுபல்லவி

பொன்நிதி வழங்குனர்க்கு பொலிமங்களம் – அள்ளி
நன்நிதி கொடுத்தவர்க்கும் நனிமங்களம் (செல்வச்)

### சரணம்

பன்னிரு தடந்தோட்கு சொன்முறை மங்களம்
என்நிதி யெனுமாறு முகவர்க்கும் மங்களம்
கொன்னுறு வடிவேற்கும் கோடிமுறை மங்களம்
சொன்நிதி வெல்கொடிக்குங் குடத்திற்கும் மங்களம்
உன்நிதி மஞ்சைக்கும் தெய்விக்கும் மங்களம்
மன்நிதி யெனும்மாது வள்ளிக்கும் மங்களம்
சந்நிதி யாச்சிரம சுவாமிக்கும் மங்களம்
பன்னிரு மாலைபாடு பக்தருக்கும் மங்களம் (செல்வச்)



பிறர் உனக்கு உதவியதை மறக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துதியும் அர்ச்சனையும்

திரு சு. சிவராசா அவர்கள்

இந்துசமயத்தின் வழிபாட்டு முறைகளில் இரண்டு வழிபாட்டு முறைகள் விஷேடமாக காணப்படுகின்றன. ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறை எனவும், ஆகமம் சாராத வழிபாட்டு முறை எனவும் அவை வகைப்படுத்தப்படுகிறது.

முறைப்படுத்தப்பட்ட ஒரு பாவனா தர்மத்தை பின்பற்றி செய்யப்படுவது ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறையாகும். பக்திநெறியில் நின்று பாமரனும் கூட செய்வது ஆகமம் சாராத வழிபாட்டுமுறை ஆகும்.

"ஆகமங்கள் தேவையில்லை ஆலயங்கள் தேவையில்லை. தாயின் இதயம் போதும் மனிதா சஞ்சலம் ஏதுமில்லை" இந்த திரைப்பாடலும் இதே கருத்தையே சொல்லுகின்றது. ஆலய பூசைகளில் முதலில் சொல்லப்படுவது விநாயக மந்திரம் அல்லது துதி ஆகும்.

வடமொழியிற் சொல்லப்படும் இதன் பொருள் வருமாறு, சுக்லாம் பரதரம் விஷ்ணும், சசிவர்ணம் சதுர்ப்புயம் பிரசன்ன வதனம் த்யாயே சர்வ விக்னோப சாந்தகே.

வெள்ளைநிற ஆடை அணிந்தவரும் உலகங்கள் எங்கும் சர்வவியாபியும் சந்திரனைப்போல குளிர்ந்த அருள் ஒளியை உடையவரும் நான்கு திருக்கரங்களை உடையவரும் யானை முகத்தை உடையவருமான விநாயகப் பெருமானை துதி செய்து சகல விக்கினங்களிலும் இருந்து விடுதலை பெற்று அமைதி அடைவோம்.

இவ்வாறு விநாயகரை துதித்து மூலமூர்த்திக்கு பூசை ஆரம்பிக்கப் படுகிறது. பூசை என்றால் பூக்களை இறைவனின் பாதங்களில் தூவி அவருடைய நாமங்களையும் புகழையும் சொல்லி போற்றுவதாகும். இதுவே அர்ச்சனை என்று சொல்லப்பட்டாலும் நடைமுறையில் ஒருவர் பெயர், நட்சத்திரம் முதலியவற்றை பூசகரிடம் சொல்லி, அவர் ஊடாக இறைவனிடம் தமக்கு வேண்டிய சித்திகளைத் தருமாறு விண்ணப்பித்தல் என்ற பொருளிலேயே வழங்கி வருகிறது. இங்கு பூசைவேறு, அர்ச்சனை வேறு என்ற ஒரு மயக்கமான நிலை இருப்பதை அவதானிக்கலாம்.



"மற்றுநீ வன்மைபேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை; நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டேஆகும்; ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு என்றார் தூமறை பாடும் வாயார்"

நம்பியாரூரர் ஆகிய சுந்தரரை தடுத்தாட்கொண்டபோது இறைவனை "பித்தனே" என்று கடிந்து கொண்டார். அதன் பின்னர் திருவெண்ணெய் நல்லூர் பெருமான்மீது சுந்தரர் திருப்பாடல் பாடியதாகச் சொல்லவந்த சேக்கிழார், "அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டே ஆகும்" என்று இறைவனே திருவாய் மலர்ந்தான் என்பதாகப் பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளினார். சம்பந்தர் பாடியது தமிழ்மாலை என்றும், அப்பர் பாடியது தேவாரம் என்றும், சுந்தரர் பாடியது திருப்பாடல் என்றும் சொல்லுகிற ஒரு மரபும் இருந்து வருகிறது.

இறைவன்மீது பக்தி செய்து பூசிக்கும்போது புலன், மனம், மொழி என்பன ஒன்றித்த நிலையில் இருக்கவேண்டும். பல திருமுறைப் பாடல்களில் இது அழுத்தம் திருத்தமாக சொல்லப்பட்டிருக்கிறது.

"மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப் பிணை தழுவிய நமச்சிவாயப் பத்து
ஏத்த வல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே"

புலன்கள் இறைவனின் காட்சியில் திளைத்திருக்கவும், மனம் அவன் திருவடியையே சிந்தனை மலர்தூவி நிற்கவும், வாக்கினால் ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரிக்கவும் செய்யப்படுவதாகவே வழிபாடு இருக்க வேண்டும் என்பதே இத்திருப்பாடலின் கருத்தாகும்.

வழிபாட்டுமுறை என்பது ஒரு வகையான சடங்கேயாகும். இறைவனோடு வழிபடுபவர் கொள்ளுகிற தொடர்பு முக்கியமானதாகும். ஆகமம் சாராத வழிபாட்டில் இது நெருக்கமாகவும் இறுக்கமாகவும் இருப்பதை அறிய முடிகிறது. கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர் முதலிய ஆலயங்களில் இன்றும் கப்புறாளை என்று அழைக்கப்படும் பூசாரியின் வழிபாடு பிரபல்யமானது. இவை மூன்றும் முருகன் ஆலயங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் கந்தசஷ்டி காலத்தில் எங்கும் கந்தபுராணம் படிக்கப்பட இங்கு திருச்செந்தூர்ப் புராணம் படிக்கப்படுவதன்மூலம் ஒருவகையான ஒற்றுமையைக் காட்டுகிறது.

ஒழுங்கைக்கு ஒழுங்கையும் வீதிக்கு வீதியும் என்றில்லாமல் சில வீடுகளிலும், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் வைரவ சுவாமியை வைத்து வழிபடுகிறார்கள். இது அந்நியர் வருகையாலும் பரசமய ஆக்கிரமிப்பாலும் ஏற்பட்ட ஆபத்துக்களை சமாளித்துக்கொள்ள எடுக்கப்பட்ட உத்தி ஆகும். மக்கள் இறைவனோடு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார்கள் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. இறைவனைத் தங்கள் குடும்பத்தின் ஒருவராகவே வைத்திருக்கின்ற ஓர் கலாச்சாரம் நம்மிடையே இருந்து வந்ததாயினும் தற்போது அந்நிலைமை மாறி வருகின்றது.

சிவபெருமான் கல்லைப் பிசைந்து கனியாக்கியவாறுபோல தமது கல் மனத்தை கசிய வைத்தான் என்று பாடிய மணிவாசகரின் திருவாசகப் பாடல்களை துதி என்றுமட்டும் சொல்லிவிடமுடியாது. அதற்கு அப்பாலும் உணர்வையும் ஊணையும் ஊடுருவும் வலிமை உடையன.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துன் விரையார்க் கழர்க்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்து உன்னைப் போற்றிசய சயபோற்றி என்றும்
கைதான் நெகிழவிடேல் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே

இவ்வாறு இறை அனுபவத்தின் உச்சத்தை தொட்டுக்காட்டும் திருவாசகப் பாடல்களுக்கு உருகாத மனங்கள் வேறு எந்த வாசகத்திற்கும் உருகாது என்பது நம் முன்னோர் துணிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகரின் நிலையையும் தாண்டி ஒருபடி மேலே சென்று இறைவனை அனுபவித்தவர்கள் சித்தர்கள் ஆவார்.

பதினெண் சித்தர்களைப் பற்றி எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். பூசைகளையும் புனஸ்காரங்களையும் கேலி செய்து கொண்டே கோயில்களை சுற்றிச்சுற்றி திரிந்தார்கள். சித்தர்களின் பரம்பரையில் நமது நாட்டிலும் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். யோகர் சுவாமிகளையும் செல்லப்பா சுவாமிகளையும் அறியாதவர் உண்டோ.

வறுமைப் பிணிக்கு மருந் தொன்றி ருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே

பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகம் தஞ்சமடி

சிவானுபவ நிலையில் நின்று குருலிங்க சங்கமத்தில் கலந்து சிவயோக சுவாமிகள் தந்த பாமாலை நற்சிந்தனை பாடல்கள் ஆகும். இதை பொருள் உணர்ந்து சொல்லுபவர்கள் செல்வர் சிவ்புரத்திற்கு என்பதில் ஐயமில்லை.

துதியும் அர்ச்சனையும் ஆகிய சரியை வழிபாடு இறைவனை நோக்கி அடியவனை ஆற்றுப்படுத்துகின்ற நான்கு பாதங்களின் ஒன்று ஆகும் எனலாம். "நிறைமொழி மாந்தர் ஆணையில் பிறந்த மறைமொழிதானே மந்திரம் என்பர்" என்பதையும் நாம் இங்கு குறிப்பிட வேண்டும். இந்தவகையில் இறை இன்பத்தை அனுபவித்தவர்கள் எமக்குத் தந்தவை மூன்றாகும். அவை தோத்திரங்கள், சாத்திரங்கள், மந்திரங்கள் எனப்படுகின்றன. துதி, அர்ச்சனை என்ற ஆரம்பப்படியில் இருந்து ஞானநிலையில் சுத்த சைவ சித்தாந்த பேரானந்தப் பெருவாழ்வு அடையும் நிலைக்கு சென்று சேரல் வேண்டும்.

வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடி யினைக்கு
வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமல மடி
உத்தமனார் வேண்டுவது.

சுவாமி விபுலானந்தரின் இந்தப்பாடல் இறைவன் விரும்பி இருக்கும் இடம் அடியார்களின் இதயமே என்று சொல்கிறது. ஔவையும் முருகனும் அடிக்கடி தமிழால் விளையாடிக் கொள்வார்கள். இவ்வுலகில் பெரியது எது என்று முருகன் வினாத் தொடுத்தான். ஔவையின் பதில் பின்வருமாறு அமைகிறது.

உலகம் பெரியது. அதைப் படைத்த பிரமன் இன்னும் பெரியவன். பிரமனோ திருமாலின் உந்தியில் பிறந்தவன் ஆதலால் திருமால் பெரியவன். திருமால் பள்ளிகொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்கடலையும் கலசத்திற்குள் அடக்கியவர் அகத்தியர். அந்தக் கலசமோ மண்ணில் செய்யப்படுவது. மண் பெரிய பூமியின் ஒரு துகளாகும். அந்தப்பூமி ஆதிசேடனுக்கு ஒரு தலைப்பாரம் ஆகும். ஆதிசேடனோ உமையம்மையின் சிறுவிரல் மோதிரம் இன்னும் தொடர்ந்து,

அரவோ உமையவள் சிறு விரல் மோதிரம்
உமையோ இறையவர் ஒரு பாகத்துள் அடக்கம்
இறைவரோ தொண்டர் தம் உள்ளத்துள் அடக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதோ

என்று பாடி முடித்தாள். இவ்வாறு தொண்டர்கள் பெருமை அடைந்தார்கள் என்றால் அவர்கள் இறைவனைத் துதித்து போற்றி வணங்கியதால் அன்றோ. எப்படிப் பார்த்தாலும் துதியும் அர்ச்சனையும் அடியவரை இறைவனோடு நெருக்கமாக வைத்துவிடும் என்பதில் ஐயமில்லை.

## சின்னச் சின்ன ஆசை

வானத்துக்கும் பூமிக்குமாய் வளர்ந்து நிற்க ஆசை
வள்ளலார் பாடல்களைப் பாடிக்களிக்க ஆசை
வள்ளுவர் வாய்மொழிபோல் வாழ்ந்துபார்க்க ஆசை
பாரதியார் பாடல்களின் பண்பைப் பேண ஆசை
பக்தியுடன் பகவான்பாதம் பணிந்துபோற்ற ஆசை
ஒருகுலமாய் மனுக்குலத்தை ஒடுக்கிப்பார்க்க ஆசை
அன்பென்னும் அருந்தேனில் அமிழ்ந்துவிட ஆசை
அறிவுக்கும் எட்டாத அறநெறியில் வாழ ஆசை
குறைவில்லா நிறைவான இறைநிலையில்
என்றும் இணைந்திருக்க ஆசை
ஆசையைத் தந்த ஆறுமுகனே
அணையைப் போட்டு வளர்த்திடுவாய்
வானம்போல விரியவும் தானாய்த்தன்னில் ஒடுங்கவும்
என்னில் கலந்த ஈசனே எனக்குப் பயிற்சி தந்திடு
நின்றும் இருந்தும் கிடந்தும் உந்தன் புகழைப்பாட ஆசை
தித்திக்கும் தமிழோசை எத்திக்கும் ஒலித்திட ஆசை
முத்தாள உன்சக்தியிலே சர்வலோகமும் சங்கமிக்க ஆசை
திருவாசகமாம் குருமொழியில் உருகி நிற்க ஆசை
அடியார்கள் நடுவே என்றும் குடியிருக்க ஆசை
பக்தர்குழாம் நடுவே பாடி மகிழ ஆசை
எல்லாம் வல்ல இறைவனையே எங்கும் காண ஆசை
எள்ளுக்குள் எண்ணெய்போல- பாலிற்குள் நெய்போல
விறகினில் தீபோல மறைந்து நிற்கும் இறைவனை
உறவில் உணர்ந்து உலகில் வாழ
என்றும் எனக்கு ஆசையே.

ஓம் குருவடி சரணம், திருவடி சரணம்.

திருமதி ப. நடராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனுக்குக் களியமுது விருந்தளித்த சேந்தனார்

திரு மு. சிவலிங்கம் அவர்கள்

காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்த வணிகர் குலத்திலகமான பட்டினத்தாரின் நண்பரும் கணக்கப்பிள்ளையுமான சேந்தனார் தமது பணிச் சிறப்பால் பட்டினத்தாரினால் வசீகரிக்கப்பட்டார்.

செல்வச் சீமானான பட்டினத்தாரின் மகன் மருதவாணன் பட்டினத்தாரின் முற்பிறவியின் நியதிக்பேற்ப துறவு பூண்டு முத்திப்பேறடைய வைக்கவெனவே தோன்றியவர். மருதவாணன் கொடுத்துச் சென்ற "காதற்ற ஊசி"யினால் செல்வச் சீமானான பட்டினத்தார் துறவு பூண்டு பரதேசியானார். அச்சமயம் தமது கணக்கப் பிள்ளையான சேந்தனாரை அழைத்துத் தம்முடைமையான சகல சொத்துக்களையும் விரும்பியவர்கள் வேண்டியவாறு எடுத்துச் செல்ல உதவுமாறு ஆணையிட்டுச் சென்றார். இதனால் பட்டினத்தாரின் தேட்டங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

இதனையறிந்த அவ்வூர் அரசன் பட்டினத்தாரின் மிகுதியான முழுச் சொத்தையும் தனதாக்கினான். சேந்தனாரின் சொத்துக்களையும் அரசுடமையாக்கியதுடன் சேந்தனாரையும் அழைத்துச் சென்று சிறையிட்டான். இதனால் பயந்த சேந்தனாரின் மனைவி தமது சிறு குழந்தையையும் எடுத்துக்கொண்டு அயலூர் சென்று கூலி வேலை செய்து காலத்தைப் போக்கினாள்.

சில நாட்கள் செல்லப் பட்டினத்தாரின் சிவாலய தரிசனை வரிசையில் திருவெண்காட்டீசரை வழிபடும் நேரம் வந்தது. ஆலய தரிசனத்துக்காகப் பட்டினத்தார் திருவெண்காட்டுக்கு வந்ததையறிந்த சேந்தனாரின் மனைவி தன் மகனுடன் அவ்வாலயத்துக்கு வந்தாள். பட்டினத்தார் ஆலயதரிசனம் முடித்து வெளியே வந்ததும் அவள் தன் பிள்ளையுடன் பட்டினத்தாரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கியெழுந்து "சுவாமி நாங்கள் சேந்தனாரின் மனைவியும் மகனுமாவர். உங்கள் ஆணைப்படி என் கணவர் உங்கள் சொத்துக்களை யாவரும் எடுக்க உதவியதால் அரசனால் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டுள்ளார். அவரை மீட்டு எங்களை வாழ வையுங்கள்" எனப் பணிந்தாள்.

இதனைக் கேட்டதும் மனம் நெகிழ்ந்து அவர்களை ஆலயத்துக்குள் அழைத்துச் சென்று ஈசனிடம் முறையிட்டுப் பின்வருமாறு பாடினார்.

"மத்தளைதயிருண்டானும் மலர்மிசை மண்ணினாலும்
நித்தமும் தேடிக்காணா நிமலனே நீவின்றேகிச்
செய்த்தளை கயல்பாய நாங்கூர் சேந்தனை வேந்தனிட்ட
கைத்தளை நீக்கி என்முன் காட்டு வெண்காட்டுளானே"

பட்டினத்தாரின் வேண்டுதலை ஏற்ற இறைவன் பிள்ளையாரை அழைத்து "அரசனிட்ட சிறையிலிருந்து அன்பர் சேந்தனாரை விடுதலை செய்" என்றருளினார். பிள்ளையார் யானையுருவிற் சென்று சிறைக்கதவைத் தகர்த்துச் சேந்தனாரைத் தூக்கி வந்து பட்டினத்தாரின் முன்பாக நிறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையில் ஆழ்ந்திருந்த சேந்தனார் யாதும் அறியாத நிலையில் ஒரு நொடிப் பொழுதில் பட்டினத்தாரின் முன்பாக தான் நிற்பதை உணர்ந்தார். பட்டினத்தாரை வணங்கியெழுந்த சேந்தனார் "குருநாதரே என்னை அரசனிட்ட சிறையிலிருந்து விடுவித்ததுபோல பிறவிப் பெருங்கடலிலிருந்தும் விடுவிக்க உதவுங்கள்" எனப் பணிந்தார். சேந்தனாரின் பக்குவ நிலையைக் கண்ட பட்டினத்தார் "சேந்தா உன் குடும்பத்துடன் தில்லைக்குச் சென்று காடுகளில் விறகு வெட்டிச் சேகரித்து அதை விற்று இல்லற தர்மத்தைப் பேணும்போது நாள்தோறும் ஒரு சிவனடியாருக்காவது அமுது வழங்கி வா. உனது எண்ணிய காரியம் கைகூடும்" என்றார். இதைக் கேட்டதும் சேந்தனார், மனைவி மகன் ஆகிய மூவரும் பட்டினத்தாரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி விடை பெற்றனர்.

இறையருளும் குருவருளும் திருவருளாகவே சேந்தனாரின் இனிய வாழ்வுக்கு வகை செய்தன. சேந்தனார் தன் பணியைக் குருவருளின்படி இனிது நிறைவேற்றி வந்தார். ஒரு சமயம் ஒரு வாரகாலமாக அடைமழை நீடித்தது. எவரும் வெளியே செல்ல முடியாத நிலையில் சேந்தனார் ஏற்கனவே வெட்டி வைத்திருந்த சிறு தொகையான விறகை விற்று அதற்கமைவாக அரிசிமாவை வாங்கி வந்தார். சேந்தனாரின் மனைவி அந்த மாவினில் இனிய "களியமுது" தயாரித்ததும் சிவனடியாரை அழைத்து வருமாறு தம் கணவனிடம் கூறினாள். சேந்தனாரும் சிவனடியாரைத் தேடிச் சென்றார். தில்லையெம்பெருமான் தன் பக்தனை மேலும் சோதிக்காது பசியால் வாடிய முதிய சிவனடியாரின் கோலத்தில் சேந்தனார் வரும் பாதையிலுள்ள சத்திரத்தில் காட்சி தந்தார். அவரைக் கண்டதும் சேந்தனார் அவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தமது இல்லத்தில் வந்து அமுது உண்ணுமாறு அழைத்துச் சென்றார்.



சேந்தனார் தமதில்லம் ஏகியதும் சிவனடியாரை வரவேற்று ஆசனம் தந்து இருக்க வைத்துப் பாதபூசை செய்தபின் "களியமுதைப்" படைத்தனர். சிவனடியார் களியமுதுடன் சேந்தனாரின் பக்தியையும் அன்பான பண்பையும் கலந்த திருவமுதாகவே உண்டு மகிழ்ந்தார். நிறைவான அமுதை உண்டபின் மிகுதியைத் தமது சால்வையின் முகப்பில் எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக்கொண்டு சேந்தனாரிடம் விடைபெற்றார். சிவனடியாராக வந்த எம்பெருமான் தில்லையில் திருவம்பலத்தை அடைந்ததும் தம்மிடமிருந்த களியமுதைத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் தந்து அதன் ருசியையும் வியந்தளித்தார். சிவனடியாரை வழியனுப்பிய சேந்தனார் மனைவி மகனுடன் எஞ்சிய களியமுதை உண்டதும் உறங்கினர்.

வழமையாகச் சிதம்பரத்தில் இரவு வேளைப் பூசைமணி கேட்ட பின்பே தாமுண்ணும் வழக்கத்தையுடைய சிவபக்தனான செல்வச் சோழமகாராசா அன்று பூசை மணி கேட்காததால் நெடுநேரம் காத்திருந்த பின் உறங்கிவிட்டார். இதனையறிந்த அம்பலப்பெருமான் சோழனின் கனவிற் தோன்றி "மன்னா கவலையை விடு நமதன்பர் சேந்தன் களியமுது படைத்தான். அதை உண்ணச் சென்றதால் உனது பூசைக்கு வரமுடியவில்லை என்றருளியதும் ஈசனார் மறைந்தார். சோழ மன்னன் தாம் கண்ட கனவின்படி இறைவனை அழைத்து களியமுது படைத்த சேந்தனாரை எப்போது தரிசிப்பேன் என ஆவலுற்றான். பொழுது புலர்ந்ததும் தமது காலை ஆசாரங்களை அனுட்டித்த பின் தில்லைச் சிவனாரின் ஆலயம் ஏகினார். அங்கு அம்பலத்தின் திருமுற்றம் எங்கணும் களியமுது சிதறிக்கிடந்தது. இனிமையான நறுமணம் வீசியது. தாம் கண்ட அடியார்களிடமும் தில்லை வாழ் அந்தணர்களிடமும் தாம் கண்ட கனவு பற்றி விதந்து கூறினார். அங்கிருந்த அனைவரும் சேந்தனாரைத் தரிசிக்க விரும்பினர். சில நாட்கள் சென்றதும் தில்லையில் நடைபெற்ற மார்கழித் திருவாதிரை நன்னாளில் தேர்த்திருவிழாவின்போது தேர் ஓடாது தடைப்பட்டது. அப்போது "நம்மைக் குறித்து சேந்தன் பல்லாண்டு பாடினால் தேர் ஓடும்" என இறைவனின் அசரீரி ஒலித்தது.

திருவாதிரைத் தேரின் தரிசனைக்காக அங்கு வந்த சேந்தனார் தமது மனநிறைவுடன் பக்தி ததும்ப இறைவன் குறிப்பிட்டதைப் பெரும்பேறாக எண்ணி பக்தியுடன் பல்லாண்டு பாடவும் தேர் அசைந்தது. தொடர்ந்து தேர் எதுவித தடையுமின்றி வீதி வலம் வந்து தரிப்பிடத்தை அடைந்தது. யாவரும் சேந்தனாரின் பக்தியையும் பெருமையையும் போற்றித் துதித்தனர். அன்று தொட்டுத் திருவாதிரை திருநாளில் எம்பெருமானுக்குக் களியமுது படைக்கும் வழக்கம் ஏற்பாடானது. சேந்தனாரின் திருத்தொண்டை வியந்த சந்தான ஆச்சாரியார் கொற்றவங்குடி வள்ளலார் பின்வருமாறு பாடினார்.

"அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அமுதை
அவிழ்ந்த மனத்தோடு அளித்தது- அவிழ்ந்தசடை
வேந்தனார்க்கு இன்னமுதம் ஆயிற்றே மெய்ப்பத்தி
சேந்தனார் செய்த திறம்"

எவரும் தேடிக்காணாத எம்பெருமான் உளமாரக் களியமுதுண்டதுடன் தமது தேர் ஓடுவதற்கும் பல்லாண்டு பாட வைத்த பெருமையை தில்லைத் தாண்டவர் சேந்தனார்க்கு அளித்த சிறப்பு வழிகாட்டிய குருவான பட்டினத்தாருக்கும் தம்மை நாடவைத்த சிவ பக்திக்கும் சமர்ப்பணமாகும் எனக் கூறி யாவரும் வியந்தனர்.

"தூய பக்தி அன்பின் உறைவிடமான இறையருளையே வெளிப்படுத்தும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(தொடர்ச்சி...

# திருவண்டப் பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## இணைக்குறளாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

இன்னிசை வீணையி லிசைந்தோன் காண்க
அன்னதொன் றவ்வயி னறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க வநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க .

**பதவுரை:-**

இன் இசை வீணையில் இயைந்தோன் காண்க- இனிய ஓசையினையுடைய வீணை வாசிப்பதில் பொருந்தியிருப்பவன் காண்க. அவ்வயின் அன்னது ஒன்று அறிந்தவன் காண்க; அவ் வீணையிடத்து அத்தன்மைத்தாகிய அரிய இசை ஒன்றினை அறிந்தவன் காண்க. பரமன் காண்க- எல்லாவற்றிற்கும் மேலானவன் காண்க; பழையோன் காண்க- எல்லாப் பொருள்களிலும் பழைமையுடையவன் காண்க; பிரமன் மால் காணா பெரியோன் காண்க- பிரமனும் திருமாலும் காணமுடியாத பெரியோன் காண்க. அற்புதன் காண்க- வியக்கத்தக்க இயல்புகளை உடையவன் காண்க. அநேகன் காண்க- பலவடி வாயிருப்பவன் காண்க. சொல்பதம் கடந்த தொல்லோன் காண்க- சொல்லின் அளவைக் கடந்த பழையோன் காண்க; சித்தமும் செல்லா சேட்சியன் காண்க- மன்மும் சென்று பற்றமுடியாத சேய்மைக்கண் உள்ளவன் காண்க.

இன்னிசை- இனிய ஓசை. மதுரைக் 349நச். இறைவன் வீணை வாசிப்பதில் இயைந்திருத்தலின் "இன்னிசை வீணையில் இயைந்தோன்" என்றார்.

"பண்ணுலாம் பாடல்வீணை பயில்வான்" ஞான 316:8.
"எம்மிறை நல் வீணை வாசிக்குமே" நாவு 113:7.
"பண்ணார்ந்த வீணை பயின்றான் தன்னை" நாவு 257:2.
எனத் தேவாரத்தும்,
"மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன் மருவிடந்
திருவிடை மருதே" 10:7.

எனத் திருவிசைப்பாவிலும் வருவன காண்க. இன்னிசை வீணையில் இயைந்தோன் என்பதற்கு இனிய ஓசையானது வீணையின் கண் நுட்பமாய்க் கலந்திருத்தல்போல அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

-வாரியார் சுவாமிகள்-



22. காளைக்கும ரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம்எய் தியவா
பாளைக்குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச்சுர பூபதி மேருவையே.

## பதவுரை

பாளை குழல்- கமுகின் பாளைபோன்ற நீண்ட கூந்தலை யுடைய, வள்ளி பதம் பணியும்- வள்ளிப்பிராட்டியின் பாதங் களைத் தொழுகின்ற, வேளை- செவ்வேளாகிய முருகப் பெருமானை, சுரபூபதி- தேவர்களுக்குத் தலைவராய, மேருவை- மேருமலை போன்ற பெருமையுடையவரை, காளை குமர ஈசன் எனக் கருதி- காளைப்பருவம் உள்ள குமார மூர்த்தியென்று தியானித்து, தாளை பணிய- அவருடைய திருவடியை வணங்கும்படி, தவம் எய்தியவா- தவத்தினை அடியேன் பெற்ற பேறு ஆச்சரியமானது.

## பொழிப்புரை

கமுகின் பாளை போன்ற கூந்தலையுடைய வள்ளி நாயகியின் பாதத்தைத் தொழுகின்ற செவ்வேளும் தேவர் தலைவரும், மேருமலை போன்றவரும் ஆகிய முருகப்பெருமானை, இளம் பூரணன் என்று தியானித்து, அப்பெருமானுடைய திருவடியை அடியேன் வணங்குகின்ற தவத்தைப் பெற்றேனே, இது மிகவும் ஆச்சரியமானது.

## விரிவுரை

**காளைக் குமரேசன் எனக்கருதி:-**

காளை எனவும், குமரன் எனவும், ஈசன் எனவும் விரித்துரைக்க. குமரன் ஈசன் என்ற வடமொழிச் சொற்கள் புணருங்கால் நிலைமொழியாகிய குமரன் என்ற சொல்லின் ஈற்றிலுள்ள னகர வொற்றுக் கெட்டு வருமொழி முதலிலுள்ள ஈகாரம் ஏகாரமாகித் திரிந்து குமரேசன் என வந்தது. இது வடமொழி குணசந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளை- என்றும் நிலையாயுள்ளது. இது சத்து.

குமர்ன்- உலக மாயையைப் போக்குவது. இது சித்து.

ஈசன்- எப்பொருட்கும் தலைவனாயிருக்கும் தன்மை. இது ஆனந்தம்.

உண்மையறிவின்பமாகிய இது முருகனுடைய சிறப்பியல்பு. இவைகளையறிந்து உள்ளத்தில் நினைத்து தியானித்தால் அநுபூதி எய்தும். திருவடியின்பம் விளையும்.

**தாளைப் பணியத் தவம் எய்தியவா:~**

தாள்- முருகன் திருவடி. தாளைப் பணிதல் என்பது (முருகனடி) திருவருள் நிறைவில் தற்போதமடங்கி நிற்றல்.

சரியை கிரியா யோகங்களைச் செய்தல் மெய்த்தவமாகும்; தவத்தைச் செய்வோரே சிவத்தைச் சார்வார். நித்த அநித்த வேறுபாடுகளை உணர்ந்து அறஞ்செய்தல் வேண்டும். அறத்தால் அன்பு விளையும். அன்பினால் அருள் விளையும், அருளால் தவம் சித்திக்கும். தவத்தால் சிவமாம் பெற்றி கைகூடும்.

அப்பர் பெருமான் முன் செய்த தவத்தின் பயனால் சிவத்தையடைந்தார். இதனைச் சிவபெருமான் திலகவதியார் கனவில் தோன்றி "முன்னமே முனியாகி எனையடையத் தவமுயன்றான்" என்று அருள் புரிந்த திருவாக்கினால் உணர்க.

"எய்தியவா" என்று தவத்தின் பயனைக் குறித்து அதிசயப்படுகின்றார்.

"முன்புசெய் தவத்தீ னீட்டம் முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக் காட்ட" -பெரியபுராணம் (கண்ணப்பர்)

**பாளைக்குழல் வள்ளி பதம் பணியும்:~**

குழலுக்கு உவமை, பாக்கின் பாளை.

வள்ளிநாயகி முருகப்பெருமானுடைய இச்சாசக்தி.

உலக நுகர்வில் இச்சை வைக்கும்படி மாந்தருயிர்கட்கு இச்சையூட்டுவது இச்சாசக்தி. மாந்தர்க்கு இச்சக்தி இச்சையை ஊட்டாவிட்டால் மாந்தர் தங்கள் வாழ்வில் ஐம்புல நுகர்வை இச்சித்தலும், அவ்விச்சையின் வழி ஐம்புல நுகர்வை நுகர்தலும் செய்து, உலக ஐம்புல நுகர்வு நிலையில்லாததென்றும், இன்ப அமைதியைத் தரமாட்டாத தென்றும் அறியும் உலக அனுபவத்தை அறியமாட்டார்கள். அறியாவிடில் அவர்கட்கு அநுபூதி அடைதற்கு இச்சையுண்டாகாது.

எனவே முருகன் வள்ளிபதம் பணிகின்றார் என்பதன் உட்பொருள், இச்சாசக்திக்கு இயைந்து ஒழுகுதல் என்பதாகும்.

உயிரிச்சை யூட்டி உழிதருஞ் சக்தி
உயிரிச்சை வாட்டி ஒழித்திடு ஞானம்
உயிரிச்சை யூட்டி உடனுற வாலே
உயிரிச்சை வாட்டி உயர்பதம் சேருமே.

-திருமந்திரம் (2356)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேளைச்சுரபூபதி மேருவையே:~**

வேள் சுரபூபதி மேரு: வேள்- விருப்பம், நிலவுலகத்தில் வாழும் மாந்தருக்கு உலக நுகர்வில் அவர்களோடு ஒன்றாய் நின்று இச்சையை ஊட்டுகின்ற கருணையைக் குறிக்க "வேள்" என்றும்,

இச்சித்து நுகர்கின்றபோது அவர்கட்கு வேறாய் நிற்கின்றதை "பதி" என்றும், அவர்கள் அறிய உடனாய் நிற்கும் தன்மையை "மேரு" என்றும் குறிப்பிட்டருளினார். இது அவருடைய பொதுவியல்பு எனவுணர்க. (தடஸ்தம்)

இறைவன் ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கும் சித்தாந்தக் கருத்தை உணர்த்தினார். மேருமலை இத்தன்மைத்தென்று அளக்கவும் கிளக்கவும் முடியாதது. முருகனுடைய பெருமையும் அளக்கவோ கிளக்கவோ முடியாதது எனவுணர்க.


**கருத்துரை**

முருகப்பெருமானுடைய திருவடியைப் பணிய அடியேன் என்ன தவஞ்செய்தேனோ?

---

# சந்நிதி வேலனின் சிறப்பு

சந்நிதி வேலனின் மண்ணே
சகலதும் தீர்க்கும் மருந்து
சந்நிதி ஆலயத் தரையில்
சற்றுநீ இருந்து பாரும்
சந்நிதி யானின் அருமை
சகலரும் அறிந்த பெருமை
சந்நிதி கண்ட சிறப்பு
சாற்றவும் எளிதோ கூறு



-வ. யோகானந்தசிவம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்திற்கு ஏற்பட்ட பல சாபக்கேட்டினுள் இவை சில:

திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து உலகத்தில் முன்தோன்றிய மூத்த குடி தமிழினம் என்று என்றும் போற்றுதலுக்கு உரியது.

அக்குடிக்குத் தனியான ஒரு குணம் உண்டு என்று போற்றினார் பாட்டிற்கொரு புலவர் பாரதியார்.

"தமிழன் என்றோர் இனமுண்டு. தனியே அதற்கோர் குணமுண்டு".

தமிழ் இனத்தையும் அதற்குரிய தனியான குணத்தையும் மற்றைய இனங்களோடு கலந்து கூழாக்காமல்- தமிழினத்திற்கோர் நாடு- அந்நாட்டிற்கோர் எல்லை காட்டி அதற்குள் வீரத்தையும் காதலையும் உயிர் நாடியாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் தமிழ் இனம் என்ற செய்தியைத் தொல்காப்பியப் பாயிரம் பறை சாற்றுகின்றது- பரம்பாரனார் வாக்கினால்.

வடக்கின் கண் வேங்கட மலையும் தெற்கின் கண் குமரிமலையுமாகிய அவ்விரண்டினையும் எல்லையாகவுடைய நிலப்பரப்பு தமிழ்கூறும் நல்லுலகம் என வழங்கப்பட்டது.

வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வடவேங்கடமுந் தென்குமரியுமாகியவற்றை
எல்லையாக வுடைய நிலத்து வழங்குந் தமிழ்
மொழியைக் கூறு நல்லாசிரியரது வழக்குஞ்
செய்யுளுமென்று சொல்லப்பட்ட முதலாகிய
வவ்விரண்டிடத்துள்ள வெழுத்தையுஞ் சொல்லையு
பொருளுளையு நாடிச் செந்தமி ழிலக்கண
நிரம்பிய நிலத்தாரொடு பயின்று முந்துநூலைக்
கண் டந்நூலின்க ணவை முறையின்றிக் கிடந்
தா னவ்வ முறையொடு பொருந்தக் கருதி
யம்முந்து நூலிலக்கணங்களையே தொகுத்துக்
கூறினானெனத் திரட்டிக் கூறுதலென்பது
அங்ஙனங் கூறினும் தொல்காப்பிய
னென்னும் படிமையோ னாடிச் சிவாளிய
நிலத்தொடு கண்டெண்ணித் தொகுத்துக்
காட்டித் தன்பெயர் தோற்றிப் பல்புகழ்
நிறுத்தானென்பதே கருத்தாகக் கொள்க.

இது சோழவந்தானூர் அரசர் சண்முகனார் ஒல்காப் புகழ் தொல்காப்பியம் பாயிர விருத்திக் கண்ணழிப்பு. அவ்வடிகள் வருமாறு:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்-

என்று பரம்பாரனார் பாயிரம் பாடிச் செல்லும். இவ்வாறாகக் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழ் இனம். அக்குடி மக்கள் வாழ்வைத் தொடங்கிய அந்நிலமாகிய ஆசிய நிலப்பரப்பிலேயே உலகில் உயிரினம் முதலில் உற்பத்தியானது என்னும் பெருமைக்கு உரியது அத்தமிழ் நிலப்பரப்பு.

இனம் இனத்துக்கோர் மொழி. மொழியில் சமயம் தத்துவம் பண்பாடு நற் பழக்க வழக்கம் நாகரீகம் நடை உடை பாவனை என்று இனத்துக்கெட்டிய செயற்பாடுகளில் ஏனைய இனக் கலாசாரங்கள் வந்து கலக்காமலும் தங்கள் இனக் குணங்கள் ஏனைய இனத்தில் போய்ப் புகுதாமலும் வரம்பு கட்டி எல்லை அமைத்து வந்தாரை வாழ வைத்தது வரலாற்றுக்கு முந்திய தமிழ்க் குடிமக்கள். சேரர் சோழர் பாண்டியர் என்று முடியுடைய மூவேந்தர் மூலமாக ஆண்ட இனம் தமிழினம்.

காலப்போக்கில் ஏற்பட்ட கடல் கோள்களினாலும் பெரும் படை எடுப்புக்களாலும் எறும்பு நடந்து கற்குழியானது போல எத்தனையோ சீரழிவுகள் ஒன்றன்பின் ஒன்றாக மெல்ல நுழைந்து இன்று எது இது எது அது என்று பிரித்தறிய முடியாத நிலைக்குத் தன்வசம் இழந்து ஏனோ தானோ என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அவற்றில் ஒரு சிலவற்றை இங்கு எடுத்துக்காட்டுகின்றோம்.

தமிழ்ன் என்னும் வார்த்தை திராவிடன் என்னும் மொழியால் விழுங்கப்பட்டது. தமிழனைத் திராவிடன் ஆக்கியது யார்? எதற்காக?

பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் செம்பொருள், சிவபரம்பொருள். சிவனை வழிபடுபவன் சைவன். சைவனுடைய சமயம் சைவசமயம். சைவசமயம் என்று ஒன்று இல்லை என்னும்படி இந்து சமயம் மேலோங்கி நிற்கின்றது.

வாதவூர் அடிகளாரும் “தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி” என்றாரே அல்லாமல் தென்னாடுடைய இந்துவே போற்றி எந்நாட்டவர்க்கும் கடவுளே போற்றி” என்றார் அல்ல என்பது சிந்தனைக்குரியது.

திராவிடச் சொல் சமயத்துள் புகுந்து சமய வழக்கிலும் நடைமுறையில் நடக்கின்றது. பெரும்பாலான திருக்கோவில்களில் அர்ச்சகர்கள் பூசையின்போது திராவிட ஸ்தோத்திரம் அவதாரய (பாடுக) என்பார்களே அன்றி திருமுறை அருளிப்பாடு- (ஓதுக) என்னும் வழக்கு அருகிவிட்டது.

தமிழிலே தலைசிறந்த முனிவர்கள் ஆதியில் விளங்கியுள்ளார்கள். அகத்தியர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், நாரதர், துருவாசர், ததீசி போன்ற பெருமுனிவர்கள் இருந் திருக்கிறார்கள். இன்றைய நாளில் எடுத்தவுடன், அப்பெயர்கள் எல்லாம் வடநாட்டவர்களைக் கண்முன் காட்டுகின்றது. இது எதனால் வந்தது.

ஒரு சமயம் கைலாசத்திற்குச் சென்ற திருமாலிடத்தில் சிவபெருமான், வந்த காரணத்தை வினாவுகின்றபோது திருமால் கட்டுரைப்பதைக் கந்தபுராணம் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருநில மேலவர் யாரும் நின்றனைப்
பரமென வுணர்கிலர் மாயைப் பான்மையால்"

"என்றனை யயன்றனை யெண்ணு வார்சிலர்
அன்றியு நின்னுடன் அநேகர் தம்மையும்
ஒன்றென வேநினைந் துரைக்கின் றார்சிலர்"

"நீற்றொடு கண்டிகை நீக்கி வன்மையால்
வீற்றொரு குறிகொடு மேவு வார்சிலர்"

"இறந்தன வரம்புல கெவரும் வேதநூல்
மறந்தனர் பவநெறி மல்கி நாடொறும்
சிறந்தன......"

இவைபோல்வன பல. இதனால் தமிழ் தமிழன் என்பன இலக்கியங்களில் கற்றற்குரிய தொன்றாகின்றது.

---

## சிறந்தது எது?

ஓர் அறிஞன் இருந்தான். தனக்கு எல்லாம் தெரியும் என்ற கர்வம் அவனுக்குத் தலைக்கேறியிருந்தது. மற்றவர்களை முட்டாளாகக் கருதினான்.

ஒருநாள் அவன் ஒரு கிராமத்தின் வழியாகச் சென்று கொண்டிருந்தான். அந்தக் கிராமத்து மக்கள் நல்ல அனுபவ ஞானமுள்ளவர்கள் என்று அறிந்து அவர்களைச் சோதிக்க எண்ணினான்.

மாடு மேய்க்கும் ஓர் இளைஞன் மரக்கிளையின்மேல் அமர்ந்து கொண்டிருந்தான். அறிஞன் அவனிடம், "உன்னிடம் சில கேள்விகள் கேட்கப் போகிறேன்" என்றான்

அவன் இறங்கி வந்து "கேளுங்கள்" என்றான். படித்திருந்தும் நம்மில் யாராவது ஒருவரைப் பார்த்து உன்னிடம் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன் என்று கூறிப் பாருங்கள். அவர் முகம் பயத்தால் சுருங்கிவிடும். ஆனால் அந்த வாலிபன் சற்றும் தயக்கமின்றி "கேளுங்கள்" என்றதும் அறிஞன் அதிர்ச்சியுற்று, "ஏனப்பா, நான் கேள்வி கேட்பதாகச் சொன்னவுடன் உனக்குத் தயக்கமோ அச்சமோ ஏற்படவில்லையா?" என்று கேட்டான்.

வாலிபன், "உலகில் எல்லாம் தெரிந்தவரும் இல்லை; ஒன்றுமே தெரியாதவரும் இல்லை; நீங்கள் கேட்கும் கேள்விக்குப் பதில் தெரிந்தால் சொல்லப்போகிறேன். தெரியாவிட்டால் உங்களிடமிருந்து தெரிந்துகொள்கிறேன். இதில் அச்சமோ தயக்கமோ எதற்கு?" என்றான்.

வாலிபனுடைய கலக்கமற்ற மனநிலை அறிஞனுக்குப் புதிராக இருந்தது. அறிஞன் அவனிடம் கேள்வி கேட்டான். "உலகில் உள்ள ஒளிகளில் சிறந்த ஒளி எது?" வாலிபன், "சூரியஒளி. அதற்கு மேற்பட்ட ஒளி இல்லை" என்றான். அறிஞனும் அதை ஏற்றான்.

"உலகில் சிறந்த நீா எது?" வாலிபன் "கங்கை நீர். சிவன் சிரசிலிருந்தும் விஷ்ணுவின் பாதத்திலிருந்தும் வந்து அதில் மூழ்கியவர்களுக்கு மோட்சம் அளிக்கும் கங்கைநீரைவிடச் சிறந்த நீர் எது இருக்க முடியும்?" அறிஞன் வியந்தான்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் —




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 7. அருளாழி ரமணன் (தொடர்ச்சி...)

தெலுங்கு மொழியிலும் இப்படித்தான். பகவான் தெலுங்கில் ஏதாகிலும் எழுதினால், என் போன்ற தெலுங்கு மொழி பேசுபவரிடம் காண்பித்து சரிபார்க்கச் சொல்வார். ஒருமுறை சுலோகம் ஒன்றைத் தெலுங்கில் மொழிபெயர்த்தபோது என்னிடம் காண்பித்து ஆலோசனை கேட்டார். "பகவானுக்கு நான் என்ன ஆலோசனை சொல்லமுடியும்?" என்று கேட்டேன். இதுவும் "Day by Day" புத்தகத்தில் பதிவாகியுள்ளது. (22.01.46) இப்படி என்போன்ற எளியோரிடமும் ஆலோசனை கேட்பது பகவானின் சௌலப்யம், எளிமை!



"காவிய கண்டர்" ரமண கீதையில் ஹ்ருதய குஹரமத்யே என்ற பாடலை விளக்கும்போது மூன்று மார்க்கங்கள் உள்ளன என்று சொல்லி யிருக்கிறார். ஆனால் பகவானது தெலுங்கு மொழி பெயர்ப்பில் இரண்டு மார்க்கங்களே உள்ளன என்று தெளிவாக உள்ளது. ஒரு வழி, "தன்னைத் தேடுவது", "மூழ்குதல்", மற்றொரு வழி, "மூச்சை அடக்குதல்" மூன்றாவது வழி என்று காவிய கண்டர் நினைத்தார். ஆனால் தெலுங்கில், பகவான் "மூழ்குதலைத்" தனி வழியாக எடுத்துக்கொள்ள வில்லை. அவர் சொல்வது "ஒன்று, தன்னைத் தேடுவதன் மூலம் மூழ்குவது, மற்றொன்று, மூச்சை அடக்குவதன் மூலம் மூழ்குவது (பிராணனைக் கட்டுப்படுத்துவது). பகவான் இரண்டு வழிகளிலும் மூழ்குதலைச் சேர்த்திருக்கிறது.

பேராசிரியர் குர்ரம் சுப்பராமய்யா தன் ஆங்கில மொழிபெயர்ப்பில் மூன்று மார்க்கங் களைக் குறிப்பிட்டுள்ளதை பகவான் ஆங்காங்கு திருத்தி, ஆமோதித்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளதும் சரியே. ஆனால் பகவான் எதை ஆதரிக்கிறார் என்று சொல்வது எளிதல்ல. "ஸ்ரீ ரமண லீலா" (தெலுங்கு மொழியில் கிருஷ்ண பிக்ஷு எழுதிய ரமண சரிதம்) நூலின் ஐந்தாவது பதிப்பைத் திருத்துவதில் பகவானுக்கு உதவி செய்தவர்களில் நானும் ஒருவன். அப்பொழுது பகவான் அனேக நிகழ்ச்சிப் பிழைகளைச் சுட்டிக்காட்டினார். அவற்றை முதல் பதிப்பிலேயே பகவான் ஏன் சுட்டிக்காட்டவில்லை? முதல் நான்கு பதிப்புகள் பிரசுரமாகும்வரை பிழைகளைத் திருத்தாமல் ஏன் வாளாவிருந்தார்? பகவான் சிருஷ்டியில், எல்லாமே மாயையைச் சார்ந்தவைதான். இந்த "உண்மைகள்" சரியா, தவறா என்பதில் பகவானுக்கு அக்கறை இல்லை. சில சமயம் திருத்துவார். சில சமயம் திருத்தமாட்டார். சிவன் போக்கு; அதனால் பகவான் எதையாவது மறுக்கவில்லை யென்றால், அதை ஆமோதித்தார் என்று சொல்லிவிட முடியாது. பகவானை எந்த விதியும் கட்டுப்படுத்த இயலாது. விஷயங்களில் தவறுகளையும், மொழி பெயர்ப்புகளையும் ஏன் சில சமயம் திருத்துகிறார், ஏன் மற்ற சமயங்களில் விட்டுவிடுகிறார் என்பது அவருக்கே வெளிச்சம்.!

மற்றவர் வாழ்க்கையை வருத்தி மகிழாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய சமய நூல்கள் அனேகமாக மூன்றுவித மார்க்கங்களையே குறிப்பிடுகின்றன. அவற்றில் ஊறியவரான நாயனாவும் ஞானமடையும் மார்க்கங்களை மூன்றாகக் குறிப்பிடுகின்றார் என்று நினைக்கிறேன். "தேடுதலை" ஞானமார்க்கமாகவும் சுவாசக் கட்டுப்பாட்டை யோக மார்க்கமாகவும், மூழ்குவதைப் பக்தி மார்க்கமாகவும் எடுத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் அந்நூல்கள் கூட எப்பொழுதும் மூன்று வழிகளை வலியுறுத்துவதாகச் சொல்ல முடியாது. உதாரணமாக கீதையில் கண்ணன் (அத்.3.3) ஞான மார்க்கம், கர்ம மார்க்கம் என்ற இரண்டையே குறிப்பிடுகிறார்.

"பக்தியை ஏன் கிருஷ்ணர் விட்டுவிட்டார்" என்று பண்டிதர்கள் சர்ச்சை செய்வார்கள். "ஞானத்துக்கும், கர்மத்துக்கும் இடையே வருவது பக்தி" என்பர் சிலர். பகவானிடம் இதைக் கேட்டதற்கு, பக்தி தனி மார்க்கமல்ல. ஞானயோகம், கர்ம யோகம் இரண்டிலுமே பக்தி கலந்துள்ளது. பக்தியின்றி ஞானமுமில்லை, கர்மமுமில்லை என்றார் பகவான். வித்வான்கள் கருத்திலும், பகவான் பதிலிலும் உள்ள வித்தியாசத்தைக் கவனித்தாயா? ஞானத்துக்கும் கர்மத்துக்கும் இடையில் பக்தி வந்தால், அதைக் கிருஷ்ணன் மூன்றாகப் பிரித்திருப்பார். ஏன் இரண்டாகப் பகுத்தாரென்றால், பகவான் சொன்னபடி, மற்ற இரண்டு வழிகளுக்குமே பக்தி ஒரு முக்கிய அம்சம். இதுவும் அதுபோலவே; மூழ்குதல் (ஆழ்ந்து அறிதல்) தனிப்பட்ட மார்க்கமல்ல. தேடுதல் (விசாரம்), பிராண பந்தனம் (மூச்சடக்குதல்) இரண்டுக்குமே அது முக்கியமான அங்கம்.

பகவான் ஓர் ஆசாரியரோ, வாய் வேதாந்தியோ அல்ல. அவர் சுத்த ஞானி. அவர் சொற்கள் அறிவுபூர்வமானவை மட்டுமல்ல, நேர் அனுபவத்தில் பிறந்தவை. ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட தத்துவரீதியாக அவர் பேசுவதில்லை. கேட்பவரின் தேவையையும், கிரகிக்கும் சக்தியையும் பொறுத்துத்தான் அவை அமையும். எந்த வேதாந்தக் கட்சியிலோ, தத்துவ வழியிலோ பகவானை பிணித்துவிட முடியாது.

"Day by Day" நூலில் (15.3.46) இந்தக் கருத்தை பகவான் தெளிவாக விளக்கியிருக்கிறார். டாக்டர் மசாலா வாலாவின் நண்பர் ஒருவர், "பகவான் அஜாத தத்துவத்தின் பிரதிநிதி" என்று கடிதத்தில் எழுதியிருந்தார். பகவான் அதைப் பார்த்ததும், அஜாத தத்துவம் மாத்திரமல்லாமல் எல்லா வழிகளையும் தான் ஆமோதிப்பதாக விளக்கினார். அஜாதவாதம் என்பது, ஒன்றான சத்வஸ்துவைத் தவிர, வேறொன்றும் இல்லை. தோற்றமில்லை; அழிவில்லை; பந்தம், மோட்சம் ஆகிய ஒன்றுமில்லை; இத்தத்துவம் உலகத்தின் தோற்றத்தையும், இருப்பையும் மறுக்கின்றது; ஆனால் நாம் உலகத்தைக் காண்கிறோம். அதனால் அஜாத தத்துவத்தை ஒதுக்கிவிட்டு திருஷ்டி- சிருஷ்டி (தோற்றம்- காட்சி) வாதம் சொல்லப்படுகிறது. இதன்படி காணப்படுபவையெல்லாம் காண்பவனைச் சார்ந்தே விளங்கும், காண்பவனின்றி காட்சி என்பதில்லை. (உதாரணம்: கனவு) ஆனால் இந்த வாதத்தையும் சிலர் ஒத்துக்கொள்வதில்லை. அதற்கு எதிராக எத்தனையோ வாதங்களை எழுப்புகின்றனர். அவர்களுக்காகவே, சிருஷ்டி- திருஷ்டி வாதம் கற்பிக்கப்படுகிறது. இத்தத்துவம், உலகத் தோற்றம் படிப்படியாக தோன்றி, பின்னர் நமக்குக் காட்சியளிக்கின்றது என்று உரைக்கின்றது. சிலருக்கு இப்படிப்பட்ட விளக்கங்கள்தான் திருப்தி அளிக்கும். ஆனால் இவை எல்லாமே சாதகனின் தகுதிக்கு இயைந்தபடி சொல்லப்படுபவை. எது எவ்வாறாயினும், பரம்பொருள் ஒன்றே" என்று சொல்லி முடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மானுபூதியை அனுபவத்தால் கண்டறிந்த பகவான், தன்னை நாடி வருபவருக்கு அவரவர் தகுதிக்கும், திறனுக்கும் ஏற்ப, தத்துவங்களை ஆங்காங்கே பகர்ந்தார்.

டிசம்பர் 48 ஆக இருக்கலாம். "கிருஷ்ணபிரேம்" என்ற வைணவ சாதுவாக மாறிய ஆங்கிலேயர், ஆச்ரமத்துக்கு வந்து பகவானுடன் ஆச்ரமத்தில் மூன்று மறக்கவொண்ணா நாட்கள் கழித்தபின் புதுச்சேரிக்குச் சென்றார். நான் விழுப்புரத்தில் அவரைச் சந்தித்து, அவருடன் தென்னாட்டிலுள்ள முக்கியமான புனிதத் தலங்களுக்குப் போவதாக திட்டமிட்டிருந்தேன். பகலில் ரயிலில் போகவேண்டும். உணவருந்தி முடித்ததும், பகவான் சாப்பாட்டு அறையை விட்டுப் போவதற்குமுன் அவரை நமஸ்கரித்து, பயணத்திற்கு அனுமதி கேட்டேன். பகவான், "மாத்ருபூதேச்வரர் கோவில் கும்பாபிஷேக சடங்குகளுக்காக, கன்னியா குமரியிலிருந்து வண்ணமணல் அனுப்பும்படி, நாகர் கோவிலில் இருக்கும் அன்பர் ஒருவரிடம் சொல்லியிருக்கிறார்கள். இதுவரை அவர் அனுப்பவில்லை" என்று சொன்னார். வெளிப்படையாக மணலைக் கொண்டு வரும்படி அவர் கூறாவிட்டாலும், அவரது திருவுள்ளத்தைப் புரிந்து கொண்டேன். இவ்வாறு ஸ்ரீ பகவான் கூறாமல் ஆணையிட்டதை, அவர் என்மீது வைத்திருந்த அபிமானத்திற்கும், என் பயணத்துக்கு அளித்த அருளாசியாகவும் ஏற்று உளம் பூரித்தேன். வடமொழிப் புலவர் ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்: "மகான்கள் தங்கள் அடியாருக்குப் பணியிட்டால், அருளாசி வழங்கப் போகிறார்கள் என்று பொருள்".

குமரிமுனையை சென்றடைந்த பிறகுதான், அந்த வண்ணமணலைச் சேகரிப்பதிலும், கொண்டு செல்வதிலும் உள்ள இடையூறுகளை உணர்ந்தேன். அப்பொழுது அந்த மணலைக் கொண்டு செல்வதற்குக் கடுமையான அரசாங்கத் தடையிருந்தது. தவிரவும், அந்த மணலை எடுத்துச் செல்பவரைப் பிடிப்பதற்காக இரயில் நிலையத்தில் சிறப்புக் காவல்படை நின்றிருந்தது. முதலில் சற்றுத் தயங்கி நின்றாலும், எந்த இடர் வரினும், மணலைக் கொண்டுபோயே தீர்வது என்று தீர்மானித்தேன். மணலைத் தனித்தனியே சேகரித்து, சிறு சிறு பொட்டலங்களாகக் கட்டி, "ஹோல்டாலில்" (படுக்கை உறை) பத்திரமாக வைத்துக் கட்டினேன். இரயில் நிலையம் வந்ததும், டிக்கெட் பரிசோதகர் அருகில் இரு காவலர்கள் நின்றிருப்பதைப் பார்த்ததும் சற்று பயம் எழத்தான் செய்தது. பகவானையே மனதில் தியானித்துக்கொண்டு சென்றேன். காவலர்கள் என்னைக் கவனிக்கவே இல்லை. இரயில் புறப்பட்ட பின்தான், என்னால் நிம்மதிப் பெருமூச்சு விடமுடிந்தது. பகவான் எவ்வளவு அருமையாக எல்லாவற்றையும் நிர்வகிக்கிறது என்று வியந்து போற்றி வணங்கினேன்".

"ஆச்ரமம் வந்து சேர்ந்து, வண்ண மணலடங்கிய மூன்று பொட்டலங்களை பகவானிடம் காண்பித்ததும், பகவான் அவற்றைக் கவனமாகப் பார்த்து ஏற்றுக்கொண்டார். வாரங்கள் சில சென்றபின் நாகர்கோவிலில் இருந்து மணல் பார்சல் வந்தது. காகிதத்தில் கட்டப்பட்டிருந்த மணலெல்லாம், காகிதம் பிரிந்து, ஒன்றாகக் கலந்திருந்தன. அது ஆலய பூஜைக்கு உதவாது என்று புரோகிதர்கள் நிராகரித்து விட்டனர். கும்பாபிஷேகம் நெருங்கி விட்டதால், வேறு மணல் வரவழைக்கவும் அவகாசமில்லை. "சமயத்தில் பலராம் ரெட்டி அதைக் கொண்டு வராமல் இருந்திருந்தால், விழாவிற்கு முன் வேறு மணலை எப்படி வரவழைப்பது? என்றார் பகவான்.

ஆனால் மணலை உண்மையில் கொண்டு வந்தது யார்? பலராம் ரெட்டி ஒரு கருவி மாத்திரமே!

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய வாழ்வு காலத்தின் இன்றைய தேவையாகும்

திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்

நமது நாட்டின் இன்றைய சூழல், சமய வாழ்வு மக்களிடையே மலர வேண்டுமென்பதை புலப்படுத்தி வருகின்றது. மனிதநேயம் அற்ற விலங்கு வாழ்வு வாழ்கின்றோம். 40 ஆண்டுகளுக்கு முன்னர் நம் பெரியோர் வாழ்ந்த அன்பு மயமான வாழ்வை இழந்து விட்டோம். எங்கும் வன்முறைச் சிந்தனை, பாலியல் துன்புறுத்தல்கள், பொருள் ஈட்டுதல் என்பதற்காக எதனையும் செய்யலாம் என நினைக்கும் இளைஞர்கள் இத்தகைய சூழ்நிலையில் நமது சைவ சமயம் எவ்வாறு வாழ வழிகாட்டியுள்ளது என்று சிந்திப்பது அவசியமாகப் படுகின்றது.

உலகில் உள்ள எல்லோரும் நலமாக வாழவேண்டுமென்றால் ஒழுங்கும், கட்டுப்பாடும் மிகவும் அவசியமாகவுள்ளது. ஒழுங்கு, அகத்தொழுங்கு, புறத்தொழுங்கு என இருவகைப்படும். இதில் அக ,ஒழுங்கு சமயத்தினாலும், புற ஒழுங்கு சட்டத்தினாலும் ஆட்சி முறையினாலும் தான் இயலும். அக ஒழுக்கம் கடவுள் உணர்வினாலும் புற ஒழுக்கம் ஆட்சிமுறையின் சட்டத்தினாலும் நெறிப்படுத்தப்படுகின்றது. உதாரணமாக களவு எடுத்தவனின் கையையும் காலையும் துண்டித்துவிடுவது ஆட்சியின் சட்டம். ஆனால் களவு செய்ய நினைப்பவனின் மனதைத் திருத்தி அதன்மூலம் கையையும் காலையும் நிறை காக்கும் காப்பினால் திருத்துவது சமய முறையாகும். எனவே எல்லா உயிர்களையும் வையத்து வாழ்வாங்கு வாழ வைப்பது சமய வாழ்வு என்பது தெளிவாக்கப்படுகின்றது. ஒவ்வொரு சமயமும் பல நல்ல உண்மைகளை கூறுபவையேயாகும்.

சமயங்கள் கூறும் உண்மைகளில் முதன்மையாக விளங்குவது சைவ சித்தாந்தம் ஆகும். இது சிவ பரம்பொருளின் முழுமுதற் தன்மையைக் குறித்த சித்தாந்தங்களை நன்கு விளக்குகின்றது. சைவ சித்தாந்தம் குறித்து மேல் நாட்டு அறிஞர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது மிக விரிந்ததும் பெருஞ் செல்வாக்குடையதும், ஐயத்திற்கு இடமின்றி உண்மையிலேயே பெரு மதிப்பிற்குரியதும், இந்திய நாட்டிலுள்ள சமயக் கொள்கைக்கு எல்லாம் தலை சிறந்ததுமாகும். தென்னிந்திய மக்களின் மிகச் சிறந்த பேறறிவின் பெருவிளைவே சைவ சித்தாந்தமாகும்.

(டாக்டர் ஜி.யு. போப்)

பிற எல்லா ஆராய்ச்சி வகைகளையும் கொள்கை அல்லது வழிபாட்டு முறைகளையும் விட மேலானதாகச் சைவ சித்தாந்தம் சில சிறப்பியற் பண்புகளைத் தன்னகத்தே கொண்டு ஒளிர்கின்றது. மிகவும் பழைமை வாய்ந்ததாய் அப் பழமையினாலாகிய பெருமைகளைப் பெற்று விளங்குகின்றது. சமய உலகில் தென்னிந்தியாவில் உள்ள மிகப் பெரும்பான்மையான சிறந்த கருத்துக்களுக்கெல்லாம் சைவ சமயமே நேரிதின் உரிமைத் தொடர்புடையதாகும். தமிழ் மக்களின் சமயமாகிய இதனை நோக்க அடுத்துள்ள ஏனைய பிற எல்லாம் ஒப்பியல் முறையில் அயலவருக்கு உரியனவும் அண்மையில் தோன்றியனவுமேயாகும். சைவ ஆராய்ச்சித் துறையிலும் கொள்கை- வாழ்க்கை என்பவற்றின் வெளிப்பாட்டு முறையிலும் மிகச் சிறந்ததொன்றாக தென்னிந்தியா பெற்றிருப்பது சைவ சித்தாந்தமேயாகும்.

(ரெவடண்ட கெனடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதி (கடவுள்), பசு (உயிர்), பாசம் (தளை) எனும் மூன்று பொருள்களும் ஒன்றால் ஒன்று தோற்றுவிக்கப்படாமல் என்றும் உள்ள உண்மைப் பொருள்கள் என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்தாகும். மூன்று பொருள்களும் என்றும் உள்ளனவேனும் கடவுள் ஒளிவண்ணராய், அறிவுருவாய், பிற உதவியின்றித் தாமே அறிபவராய், பேரின்பவுருவாய், அறிவித்தால் அறியும் உயிர்களிடத்து கருணை கொண்டு படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்து தாமும் தம் சக்தியும் என இரு திறப்பட்டு, மலரும் மணமும்போல இயைந்து நிற்பவராய் விளங்குவர்.

உயிர்கள் பலவாகவுள்ளன. அவை தாமே அறியும் தகுதியிலாதனவாய் சிற்றறிவு உடையனவாய், இயல்பாகவே பாசத்தால் கட்டுண்டனவாய், சூரிய வெளிச்சம் கொண்டு பொருள்களைக் காணும் கண்களைப்போல் இறை ஒளி உணர்த்த உணரும் இயல்புடையனவாய் சார்ந்த தன் வண்ணமாகிற படிகம் போன்று இறைவனைச் சார்ந்த அறிவையும் பேரின்பத்தையும் பெறத் தக்கனவாய், பாசத்தைச் சார்ந்து அறியாமையும் பெருந் துன்பத்தையும் அடையும் இயல்பை உடையனவாகும்.

பாசம், ஆணவம்- மாயை- கன்மம் என மூவகைப்படும். இவற்றை மும்மலங்கள் என்பர். அவற்றுள் ஆணவம், தான் ஒன்றேயாய் அனேக சக்தியுடையதாய் இருப்பது. உயிர்களின் அறிவை விளக்கவொட்டாமல் அதற்குத் தடையாய் இருப்பது தன்னையும் காட்டாமல் பிற பொருளையும் காட்டாமல் மறைந்து நிற்பது மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்னும் செயல்களையும் உயிர்களிடத்தே விளைவிப்பது.

மாயை என்பது உலகம் தன்னிடம் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்கும் காரணமாயிருப்பது. இம் மாயை இறைவனருளால் உலகம் தோன்றுவதற்கு முதற் காரணமாய் நின்று ஆணவத்தால் கட்டுண்டு இயங்காமலிருக்கும் உயிர்களை இயக்கத் துணை செய்து அவற்றை உயர்த்துவது. மாயையின் காரியமே தனு (உடம்பு), கரணம், புவனம், போகம் எல்லாம் தனு கரண புவன போகங்களாகிய முப்பத்தாறு தத்துவங்களின் துணை கொண்டே உயிர்கள் சிற்றறிவு விளக்கம் பெற்றன. அதனால் மாயையினை "விளக்கு" என அருளிச் சென்றார் நம் மெய்கண்ட தேவர்.

கன்மம் என்பது உயிர்கள் ஆணவ மலத் தொடர்பால் செய்யும் வினைகளின் தொகுப்பாகும். இது நல்வினை, தீவினை வடிவாய் இன்ப துன்பங்கட்கும் பிறப்பு இறப்புகட்கும் காரணமாயிருப்பது. அது மூவகைப்படும். அவையாவன உயிர்கள் முற்பிறவியில் நல்வினை, தீவினை வாயிலாகத் தேடி வைத்தது சஞ்சித வினையாகும். அதனை இப்பிறவியில் அனுபவித்தது பிராரப்த வினையாகும். அனுபவிக்கும்போதே உண்டாக்கிக் கொள்வது ஆகாமிய வினையாம் என்க.

"உன்னை அறி வொன்றான்! என்னறிவில் ஆனந்தம்
தன்னைச் சிவமென்றான்! சந்தமும் - என்னை உன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்றான் இம் மூன்றும்
ஆராய்ந் தவர் முத்தராம்"

ஒவ்வொரு சமயமும் குறிப்பிட்ட காலங்களில் விரதம் இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றது. "நல்லவை செய்வேன் அல்லவை தவிர்ப்பேன்" என்று சங்கற்பம் செய்து கொண்டு அவற்றைக் காப்பதே விரதமாகும். கூடியவரை உணர்வைக் குறைத்து கடவுட் சிந்தனையுடன் அருள் நூல்களைப் படிப்பதும் நற் செயல்களில் ஈடுபடுவதும் விரதத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய அம்சமாகும். விரதத்தை உபவாசமென்றும் குறிப்பிடுவர். உப- சமீபத்தில், வாசம்- வசித்தல், அதாவது இறைவனுக்கு சமீபத்தில் வசித்தல் என்பதே இதன் பொருள் உணவைக் குறைத்து தூய வாழ்க்கையை மேற்கொண்டால் இறைவனுக்கு சமீபத்தில் வசிக்கலாம் என்பது அனுபவ அறிவிற்குத் தெளிவாகப் புரியக்கூடும். இவ்விரதங்களால் மக்கள் அடையும் பலன் அதிகமாகும். முதலில் ஒருவனுக்கு ஆரோக்கிய வாழ்வு கிடைக்கிறது. நோய் துன்பம் இன்றி வாழமுடிகிறது. நீண்ட ஆயுள் பெற முடிகிறது. அறிவில் தெளிவும் நுட்பமும் உண்டாகின்றன. உணவைக் குறைப்பதால் ஆயுள் அதிகரிக்கும் என்பதைத் திருவள்ளுவர் "அற்றால் அளவறிந்துண்க அஃதும்பு, வெற்றான் நெடி துய்க்குமாறு" என்ற குறளால் அறியத் தருகிறார். ஆத்மா கடவுள் உணர்வுடன் நல்ல செயல்களில் ஈடுபடுவதால் அறவுணர்வு தலைப்பட்டு, வம்பு வழக்குச் செலவுகள் குறையும். உணவுப் பொருட்செலவு, மருத்துவச் செலவு, பாதுகாப்புச் செலவு, சுகாதாரச் செலவு முதலியனவும் குறையும். எனவே பொருளாதாரப் பற்றாக்குறையும் நம்மைவிட்டு அகலும். ஆட்சியாளர்களும் நல்லுணர்வுபெற்று அறவாழ்வு நடாத்தும் மக்களைச் சிரமமின்றி எளிமையாக ஆட்சி புரியலாம். ஒவ்வொருவரும் துன்பம் இன்றி இன்பமாக வாழலாம். இதனால் தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் நன்மை ஏற்படுகிறது. எனவே சமய வாழ்வை ஒவ்வொருவரும் மேற்கொண்டு செயற்படுத்தினால் உலக மக்கள் இம்மை மறுமை நலன்களைத் தவறாது பெறுவதோடு பேரின்பத்தையும் பெறுவர்.

ஐன்ஸ்டின் போன்ற விஞ்ஞானிகளும் ஜி:யு. போப்பைப் போன்ற கிறிஸ்தவப் பாதிரியார்களும், ஜான் மார்ஷல் போன்ற மேலைநாட்டுச் சரித்திரப் பேராசிரியர்களும் சைவ சித்தாந்தத்தின் உயரிய தத்துவக் கொள்கைகளை மிகப் பெரிதும் பாராட்டியுள்ளனர். கொள்கை அளவோடு நில்லாமல் அநுபவத்திலும் நலம் பயப்பதாக உள்ளதை அறிந்து அறிஞர் பலரும் ஒப்புக்கின்றனர். இத்தகைய சமயம் வளர்ந்தும், தளர்ந்தும் வந்திருப்பதை வரலாறுணர்ந்தோர் நன்கறிவர். சைவம் பரவுவதால் அதற்கு ஒன்றும் பயனில்லை. ஆனால் அதனை மேற்கொள்ளும் மக்கள் அதிகமான பலனை அடைவார்கள். இவ்வரிய தத்துவ வளம் நிறைந்த சைவம் இக்காலத்தில் அதிக அளவில் பரவ முடியாமைக்குப் பல காரணங்கள் உண்டு. மிகவும் நுணுக்கமான கருத்தினைப் பாமரரும் புரிந்துகொள்ளும்படி எளிமையான சொற்களைப் பயன்படுத்தி விளக்க வேண்டும். சைவக் கோட்பாடுகளை, சைவ சித்தாந்தக் கருத்துக்களை கற்றறிந்தவர்கள் அந்நெறியைச் சரியாகப் பயன்படுத்தி சைவ வாழ்வு வாழாமையும் ஒரு காரணமாகும். சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பின்றி வாழ்தல் சைவ வாழ்வாகாது என்பதை உணருதல் வேண்டும். ஆலயங்களில் உண்மைச் சைவம் வளர்க்கப்படுதல் காலத்தின் அவசியத் தேவையாகும். இன்று நாம் அரக்க சிந்தனையுடன் வாழத் தலைப்பட்டு வருகிறோம்.

இளைஞர்களுக்கு சமயப் பெரியார்களின் வரலாறுகளையும் சைவ சாத்திர தோத்திரக் கருத்துக்களையும் கற்பிக்க வேண்டும். அறநெறிப் பாடசாலைகள் மூலம் இப்பணிகளை ஆலய நிர்வாகம், சனசமூக நிலையங்கள், சபைகள், மன்றங்கள் செய்ய முடியும். நாள்தோறும் சைவக் கருத்துக்களைத் தெரிந்துகொள்வதற்கு நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். பாடசாலைக் கல்வியில் சமயம், பரீட்சைக்கு மட்டும் என்ற நிலையிலிருந்து மாறி வாழ்க்கைக்கு சமயம் என்ற நிலையில் பாடத்திட்டம் கற்பிக்கப்படுதல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவராய் உள்ளவர்கள் சமய விஷேட தீட்சை பெற்று இயன்றளவு அநுட்டானம் பூசை முதலியன செய்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் பிள்ளைகளுக்கு விபூதியின் மகத்துவத்தை உணர்த்துதல் வேண்டும். இளம் வயதில் சிவநெறியில் ஈடுபடச் செய்வதன்மூலம் நம் பிள்ளைகளை ஒழுக்க சீலர்களாக சமுதாயத்தை நேசிப்பவர்களாக வாழச் செய்ய முடியும். இது விடயத்தில் பெற்றோர், ஆசிரியர்கள், சமயிகள் கூடின கவனம் மேற்கொள்ள வேண்டிய கட்டாய சூழல் ஏற்பட்டுள்ளது என்பதை மறந்து விடலாகாது என வினயமாக இக்கட்டுரை மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். அனுட்டானம், பூசை முதலியவற்றை ஏதோ காரணங்களினால் செய்ய முடியாதவர்கள் திருமுறைப் பாராயணத்தைத் தவறாது மேற்கொண்டு முழுப்பயனை அடைய முடியும். அனைவரும் குறைந்தது வாரம் ஒரு முறையேனும் தவறாது திருக்கோயிலுக்குச் சென்று வழிபட வேண்டும். வார வழிபாடு, கூட்டு வழிபாடு என்பன ஆலயங்களில் கிரமமாக நடைபெற ஒழுங்கு செய்யப்பட வேண்டும். குருபக்திதான் நம்மையும் நாம் மேற்கொண்டு ஒழுகும் சமயத்தையும் வளர்ப்பது. நம் சமயாசாரியார்கள் அவர்களுக்கு முன்பிருந்த நாயன்மார்களைக் குருவாகப் போற்றி வழிபட்டார்கள். திருஞானசம்பந்தர் திருக்காளத்தி மலைக்குச் சென்றபோது கண்ணப்ப நாயனாரின் திருவுருவத்தைக் கண்டார். கண்டவுடனேயே கும்பிட்ட பயன் காண்பார் போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்து வணங்கி வழிபட்டார். திருவாலங்காட்டை அடைந்தபோது காரைக்கால் அம்மையார் வதியும் பதி என்பதை அறிந்து அவரிடத்திலுள்ள பக்தியால் அத்தலத்தை மிதிக்க அஞ்சினார். சுந்தரமூர்த்தி சுவாமிகள், அப்பர் சுவாமிகளுக்கு சூலை நோய் நீங்கிய தலமாகிய திருவதிகையை மிதிக்க அஞ்சிப் புறத்தே சித்தவட மடத்தில் தங்கினார். அதனால் சிவஞான தீட்சையாகிய திருவடி தீட்சையும் பெற்றார். அதேபோல் சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தருக்கு அம்மையார் ஞானப்பால் அருளியதுமான பெருமையை எண்ணி அத்தலத்தை மிதிக்க அஞ்சி வலமாக வந்தார். காழி நாதரும் காதில் வெண்குழையனர்க் காட்சி நல்கினார். இதுபோன்ற பல நிகழ்ச்சிகளால் நாம் நமது சமய குரவர்களையும் சந்தான குரவர்களையும் போற்றிப் பரவ வேண்டும். பாடசாலைகளில் குரு வணக்கத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும். நமது சமய வழிகாட்டிகளின் குருபூசை தினங்களைக் கொண்டாட வேண்டும்.

சமயத்தின் அவசியமும் சைவத்தின் சிறப்பும் வேதத்தில் சைவத்திறம் விளங்குவதும், புதைபொருள் ஆராய்ச்சியால் சைவத்தின் தொன்மை துலங்குவதும், சங்க இலக்கியங்களில் சிவநெறிப் பழமை சிறப்பதும், இயற்கை அமைப்பில் சிவபெருமான் எழிலோடு காட்சி அளிப்பதும், உலகியல் வழக்கிலும் சைவம் உயர்ந்து விளங்குவதும், பிற நாட்டவரும் பிற மதத்தவருமான பாதிரிமார்கள் பைந் தமிழ்ச் சைவத்தை பாராட்டியுள்ளதும் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை, முப்பொருள் உண்மை என்பதும், சமய விரதங்களால் வரும் நன்மைகளும் சமயாசாரியார்களையும் சந்தானாசாரியார்களையும் போற்றி வழிபடுவதால் தான் சைவம் வளரும் என்பதுவும் தெரிந்தோம். இப் பணிக்கு சைவ அன்பர்கள் யாவரும் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என்பதே காலத்தின் இன்றைய அவசியத் தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நல்லாரைக் காண்பதுவும் நன்றே!

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே - நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே அவரோடு
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே"

நல்ல குணநலன்களை உடையவர்களைக் காண்பது, அவர் கூறும் நன்மைதரக்கூடிய வழிகளைக் கேட்டு நடப்பது, அவருடைய பண்புகளை எடுத்துக்கூறுவது, அவரோடு இணைந்து இருப்பது ஆகிய யாவுமே நன்மையைத் தரும்.

பொதுவாக ஊர் பெரிய மனிதர்கள், பொதுநலத் தொண்டர்கள். தாய் தந்தை வழிப் பெரியோர்கள், கற்றறிந்த நல் ஆசிரியர்கள், வேதங்களை முறையாகக் கற்றுப் பொதுநலனுக்காகப் பாடிப் பலரும் பயன் தரும்படி செய்யும் தொழிலைக் கொண்டுள்ளோர் ஆகியவரையும் காண்பது நல்லது.

நல்ல சொற்பொழிவாளர்கள், காலத்திற்கேற்று வாழும் நல்லோர், சாய்பாபா, சிதம்பரர், பாம்பன் சுவாமிகள், திருமுருக கிருபானந்தவாரியார் போன்ற மகான்களைத் துதிப்பது நல்லது. அது போன்றவர் தங்கள் பகுதிகளில் வாழ்வர். அவர்கள் பிறர்கூறும் பழியையும் ஏற்று நலம் செய்யும் நல்லோர்களே. அத்தகையோரைப் போற்றிப் புகழ்ந்து வாழ்ந்திடுக.

செண்பகாவரம் என்ற ஊரில் செந்தில்நாதன் என்பவர் இளமை முதலே தெய்வீகத் தன்மையோடே வாழ்ந்து வந்தார்.

கடுமையான உழைப்பாளி. அவர் செய்யும் விவசாயப் பலனில் இருபத்தைந்து சதவீதம் பொருட்களை ஆலயப்பணிகளுக்கும் இருபத்தைந்து சதவீதப் பொருட்களை பொதுநலப் பணிகளுக்கும் செலவிடுவார்.

மீதமுள்ள ஐம்பது சதவீதம் பொருள்களைக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையை வளமாக வாழ்ந்தார். அவர் பொதுவாக ஆலய வளாகத்தில் அமர்ந்து பல நற்செய்திகளைக் கூறுவார். அதில் அருள்வாக்கும் அசரீரியாகவும் அமைந்திருக்கும். எனவே பலரும் அவரிடம் குறிகேட்க ஆரம்பித்தனர். ஆகவே விவசாய வேலையைச் செய்து முடித்த பிறகு தனக்கு உள்ள அனைத்து நேரத்தையும் பொது நலனுக்காகவே ஒதுக்கினார்.

மக்களுடைய நலனுக்காக குறியைச் சொல்லும்பணி செய்து வந்தார் செந்தில்நாதன். மற்றவர்களுடைய குறையைக்கேட்டு அவர்களுக்குச் சாதகமாக நல்லுரைகளை உரைத்தனுப்பிய பிறகுதான் தியானத்தில் அமர்வார் அவர். தான் சொன்னது நல்ல பயனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவேண்டும் என்று தியானம் முடிந்ததும் வேண்டிக் கொள்வார். இப்படியாக இருந்த இவரை செந்திலாண்டவனாகவே மக்கள் கருதினர். அவருக்குச் சேவைகளைச் செய்ய சிலர் முன்வந்தனர். அனைவரும் கூடிக் கூட்டுப் பிரார்த்தனைகள் செய்யச் செய்தார். செந்திலான் சொன்னது எல்லாம் பலித்திடவே பொதுமக்கள் யாவரும் அவரைப் போற்றிப் புகழ்ந்தனர்.

இதனால் நாட்டில் பல பாகங்களில் இருந்தும் மக்கள் வரத்தொடங்கினர். அதன்மூலம் பணம் பொருள் வரத் தொடங்கின. செந்தில்நாதன் தாமரை இலைத் தண்ணீராக அதைக் கருதி அந்தப் பொருள்மீது ஆசை வைக்கவில்லை. அதைக் கொண்டு வருவோர் தங்கிட மாளிகைகளை உருவாக்கினார். பசிக்கு உணவும், நீரும் எப்போது யார் வந்தாலும் கொடுக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்தார்.

அவர் வாழ்ந்த வீட்டை ஆசிரமமாக்கினார். சொந்த நிலத்தை மலர்வனமாக மாற்றினார். பொதுவாகக் கனிதரும் மரங்களை நட்டுப் பயிராக்கினார்.

நீர்நிலைகளை ஏற்படுத்தினார். ஊரிலிருக்கும் குளங்களை ஆழப்படுத்திக் கரைகளை உயர்த்திடச் செய்தார். பாதுகாப்பான குடிநீரை ஆசிரமத்துக்கும் தான் வாழும் ஊருக்கும் பிறகு அந்த நாடு முழுவதும் செம்மையடையும்படி கொடுத்தார். அதனால் அவருடைய பேரும் புகழும் உலகின் பல பாகங்களுக்குப் பரவியது. செந்தில்நாதனின் நிலங்களை ஆசிரமத்தின் பொதுநலப்பணிக்காக மட்டும் பயன்படும்படியாகச் செய்தார்.

பிறகு மக்கள் தரும் பணத்தில் மக்களின் நலனுக்காக பெரிய மருத்துவ மனைகளை உருவாக்கினார். அதில் பல பாகங்களிலிருந்து வரும் ஏழை எளியவர் முதல் பணக்காரர் வரை யாவருக்கும் ஒரேவிதமான சிகிச்சைகள் செய்யப்பட்டன.

நோயாளியோடு வருவோர் இருவருக்கு தங்கிப் பார்த்திடவும் உணவு வசதியும் அளித்தார். மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக வந்தவர்கள். திரும்பிச் செல்லும்போது ஆனந்தக் கண்ணீருடன் சென்றனர்.

பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சுகாதார மையங்களையும் உருவாக்கினார். மலைகளில் உள்ள இடங்களில் நிலங்களை வாங்கி அதில் தியான மண்டபங்களைக் கட்டினார். அதில் பொதுவாக கூட்டமாகச் சுற்றுலா செல்வோருக்கு அங்கே இலவசமாகத் தங்கும் வசதியும் உணவும் உபசாரமும் நடத்திடச் செய்தார்.

அதனால் செந்தில்நாதனை அனைவரும் கற்பூரமேற்றி தொழுகிற அளவிற்கு மக்களுடைய மனம் பக்குவம் அடைந்திருப்பதும் வெள்ளிடைமலையே. செந்தில் நாதனைக் காணமுடியாதவர்களுக்காக அந்தந்த மாநில மாவட்டங்கள் என்று, தானே தன்னுடைய சொந்தச் செலவில் சென்று பொது யாகங்கள், யோகங்கள், தியானங்கள், பயிற்சிகளை இலவசமாக இலட்சக்கணக்கானவர்களுக்கு வழங்குதல் போன்ற நல்லவற்றைச் செய்து வந்தார்.

அவரிடம் வருவோர்க்கு ஏழ்மை போக்கும் வகையிலான உதவிகளைச் செய்திடுவார். அருளாசி வழங்குவதோடு போதும் என்று கூறும்படி அறுசுவை உணவை அளிக்கும் அன்பரே செந்தில்நாதன் என்று உலகம் முழுவதும் பேசும்படி செயற்பட்டு வந்தார்.

அத்தகைய நல்லகுணம் 'உள்ளவரைக் காண்பதும் நல்லதாகும். அவர் கூறும் நன்மை தரக்கூடிய வழிகளை கேட்டு நடப்பதும் நல்லதாகும். அப்படிப்பட்ட செந்தில்நாதனைப் போன்றவர்கள்- நல்லுள்ளங் கொண்டவர்கள்- பொதுநலத் தொண்டர்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறானவர்களுடன் கூடி இருப்பது நல்லது. அவருடைய சொல்லைக் கேட்பதும் நல்லது. அன்னாருடைய செம்மையான செயல்களுடன் இணைந்து செயல்படலாம். அவருடைய செயலுக்கு உதவியாக இருக்கலாம். அப்படிப்பட்டவரை நாமிருக்கும் இடத்திலிருந்து அன்பு செலுத்தி வணங்கிடலாமே!.

ஒரு பொதுக்கூட்டம் நடந்துகொண்டு இருக்கிறது. ஒரு பேச்சாளர் பேச ஆரம்பிக்கிறார். அவர் தன்னுடைய பேச்சை எப்படி ஆரம்பித்தார் தெரியுமா? ஒரு நூறு ரூபாய் நோட்டைத் தன்




கையில் எடுத்தார். அது புத்தம் புதிய நோட்டு. அதை அவர் எல்லோருக்கும் தெரிவதுபோல் கையில் எடுத்து உயர்த்திப் பிடித்தார்! எதிரில் ஒரு இருநூறு பேர் உட்கார்ந்திருக்கிறார்கள். எல்லோரையும் பார்த்து அந்தப் பேச்சாளர், "இந்த நூறு ரூபாய் நோட்டை விரும்புகிறவர்கள் யார்?'' என்று கேட்டார். அவ்வளவுதான்! அவ்வளவுபேரும் கையைத் தூக்கினார்கள்.

"இந்த நூறு ரூபாய் நோட்டை உங்களில் ஒருவருக்குக் கொடுக்கப் போகிறேன். ஆனால் அதற்கு முன்னால் நான் ஒரு காரியம் செய்யப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு.... அந்த நோட்டைக் கையால் நன்றாகக் கசக்கினார். பிறகு அவர், "இப்போது பாருங்கள்... அந்தக் கசங்கிய நோட்டை! இப்போதும் இதை விரும்புகிறவர்கள் யார்?" என்று வினவினார். தூக்கிய கையை யாருமே இறக்கவில்லை. அப்படியே வைத்திருந்தார்கள். பேச்சாளர் பார்த்தார்; "சரி இப்படிச் செய்தால் என்ன?" என்று சொல்லிவிட்டு அந்த நோட்டைக் கீழே மண்ணில் போட்டார். தன்னுடைய பூட்ஸ் காலால் அதை மிதித்தார்.... அப்படியும் இப்படியுமாக அதைத் தேய்த்தார். இப்போது அந்த நோட்டு கன்னாபின்னா என்று கசங்கியது. கசங்கிய நூறு ரூபாய் நோட்டைக் கையில் எடுத்தார். உயர்த்திப் பிடித்தார். "இப்போது சொல்லுங்கள்... இப்போது இதை விரும்புகிறவர்கள் யார்?" என்று கேட்டார். தூக்கிய கைகள் தூக்கியதுதான் யாருமே கீழே இறக்கவில்லை! இப்போது அந்தப் பேச்சாளர் பேச ஆரம்பித்தார்.

"அருமை நண்பர்களே! இப்போது நீங்கள் அனைவரும் ஒரு பெரிய நல்ல பாடத்தைக் கற்றுக்கொண்டிருக்கிறீர்கள். இந்தப் பணத்தை நான் கசக்கினேன். காலில் போட்டு மிதித்தேன். ஆதலால் அழகாக இருந்த நோட்டு இப்போது அசிங்கமாக ஆகிவிட்டது. அழுக்காகிவிட்டது. இந்தப் பணத்தை நான் என்ன செய்தாலும் சரி.... நீங்கள் தொடர்ந்து அதை விரும்புகிறீர்கள்... அதற்கு என்ன காரணம்? "அது அதனுடைய மதிப்பில் குறையவில்லை....! அப்போதும் அதனுடைய மதிப்பு நூறு ரூபாய்தான். இப்போதும் அதனுடைய மதிப்பு நூறு ரூபாய்தான். நம்முடைய வாழ்க்கையிலும், நாம் எடுக்கும் முடிவுகள், ஏற்படும் சூழ்நிலைகள் போன்றவற்றால் நாம் கசக்கப்படுகிறோம், மிதிக்கப்படுகிறோம், அழுக்காகி விடுகிறோம். "அப்போது நாம் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறோம்...? "நாம் எதற்கும் லாயக்கில்லை... நமக்கு மரியாதை இல்லை! என்று நினைக்கிறோம். ஆனால் உண்மை என்ன தெரியுமா? ஏற்கனவே எது நடந்திருந்தாலும் இனிமேல் எது நடக்கப்போவதாக இருந்தாலும் அதனால் நம்முடைய மதிப்பில் நாம் குறைந்துவிடப் போவதில்லை. துன்பம் வரும்போது மதிப்பு குறைந்து விட்டதாக நினைத்து யாரும் மனம் உடைந்து போய்விடாதீர்கள். நீங்கள் ஒரு தனித்தன்மை உள்ளவர்; உங்களிடம் ஒரு தனித்துவமும் உண்டு. அது மற்ற யாரிடமும் இருக்காது. இந்த உண்மையை நீங்கள் மறந்துவிடாதீர்கள். நாளைய எதிர்பார்ப்புகளை நேற்றைய ஏமாற்றங்கள் அமுக்குவதற்கு இடம் கொடுக்காதீர்கள். ஆகக்கூடி நாம் வாழ்க்கையைச் சரியாகப் புரிந்துகொண்டால் சங்கடமில்லை. நமக்கு ஏற்படும் கஷ்டங்கள் நம்முடைய மதிப்பைக் குறைத்துவிடுவதில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்" என்று, அந்தப் பேச்சாளர் சொல்லி முடித்தார்.

—ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பெருந் தமிழ்த் தெய்வம் முருகப்பெருமான் என்பதற்கான இலக்கிய வரலாற்றுச் சான்றாதாரங்கள்

(தொடர்ச்சி...)



திரு கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்

## 1.9: சம்பந்தர் முருகன் எனப்படுதல்

"பல்லவர் கால பக்தி இலக்கிய மூலவர் சம்பந்தர். இவருடைய தலைமையின் கீழே தான் சைவசமயம் ஓர் இயக்கமாகப் பேரெழுச்சி கண்டது. இவருடைய அற்புதங்கள் பிற சமயத்தை நாடிய சைவரை மீளவும் சைவசமயிகளாக்கின. இவ்வாறாக, மீளவும் சைவத்துக்குப் புத்துயிர் தந்த சம்பந்தரைப் பிற்காலச் சைவர்கள் பலரும் அவதார புருஷராகவே பார்த்தார்கள். அவரை நாயகராகக் கொண்டு, பல இலக்கியங்கள் இயற்றப்பெற்றன.இவ்வாறு பிற சமயத்தினரை வெற்றிகொண்ட சம்பந்தரை, அசுரரை வென்ற முருகனாகவே காணும் போக்குத் தலையெடுத்தது. மேலும், உமையம்மையாரின் திருமுலைப்பாலை உண்டதான சம்பவமும் சம்பந்தரரை முருகனாகவே கருதுவதற்கு வழிகோலிற்று எனலாம். இவற்றின் பின்னனியில் சம்பந்தரரை முருகனாகவே கருதிப் பின்னை அடியார்கள் பலரும் போற்றிவரலாயினர்.

"மதுரை நாட்டினிலே வாழ்வாகிய
அருகர் வாக்கினிலே சார்வாகிய
வழுதி மாற்றெதிர் வீறே டேறிட
அழகி போற்றிய மாறாளாகிய
மகிமையில் சமண் வேரோடேகெட நின்றகோவே"

என்று வேலூர்த் திருப்புகழிலே அருணகிரிநாதர் போற்றியிருக்கக் காணலாம். இங்கு சம்பந்தரின் செயல் முருகனின் செயலாகவே கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு சம்பந்தரின் செல்வாக்கு மிக்கிருந்த காலத்தில் சம்பந்தர் முருகனின் அவதாரம் என்று கொள்ளப்பட்டதனால் முருக வழிபாடும் பெரு வளர்ச்சியுற்றது எனக் கூறலாம்.

விஜயநகரப் பேரரசர் காலத்தில் முருகவழிபாட்டின் மீள் எழுச்சிக்கு சில ஆளுமைகள் அடிப்படையாய் இருந்துள்ளன. இவ்வாறு ஆளுமைமிக்க உழைப்பு நல்கிய முருகன் அடியார்களுள் அருணகிரிநாதரும், கச்சியப்பச் சிவாச்சாரியாரும் முதன்மைபெறத் தக்கவர்களாவார்கள்.

சி. பாலசுப்பிரமணியன் (1985:106) அருணகிரிநாதரைப்பற்றி மேல்வருமாறு எழுதியுள்ளார். "அருணகிரிநாதர் மூவர் முதலிகள் போன்று தலயாத்திரை செய்து, அடிமட்ட மக்களிடத்தும், சமய நம்பிக்கையை விதைத்தவர். திருக்கோவலூர், திருவெண்ணெய் நல்லூர், திருநாவலூர், திருவாமூர், வடுகூர், துறையூர், திருவதிகை, திருப்பாதிரிப்புலியூர், திருமாணிகுழி, திருத்தில்லை, திருவேங்கடம், சீகாழி, திருவாரூர், சிக்கல், நாகபட்டினம், வேதாரணியம், கும்பகோணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிமலை முதலிய பல கோவில்களுக்கும் சென்று முருக வழிபாட்டை வளர்த்தார். தனியே அமைந்திருந்த முருகன் கோயில்களை மட்டும் பாடியதோடு அமையாமல் சிவன் கோயில்களில் பரிவாரத் தெய்வங்களுள் ஒன்றாக வீற்றிருந்த முருகப்பிரானையும் இவர் பாடியுள்ளார்.

இதனால் சைவர்களும் முருகனுடைய பாடல்களைத் தோத்திரங்களாக ஓதும் வழக்காறு ஏற்பட்டது. இதன் வளர்ச்சி நிலையாக, பஞ்சபுராணத்தோடு நிறைவில் திருப்புகழ் ஓதும் மரபு காணப்படுகிறது எனலாம். மேலும், அருணகிரியார் சில வாதங்களில் ஈடுபட்டு முருக வழிபாட்டின் பெருமையை நிலைநாட்டினர் என்பர். இவ்வகையில் சம்பந்தாண்டான் என்னும் தேவி உபாசகரோடு அரசஅவையில் வாதம் செய்து கடவுளை வரவழைத்துக் காட்டி அருணகிரியார் வெற்றி பெற்றார் என்னும் சம்பவம் பலராலும் கூறப்பெறுகின்றது"

(பாலசுப்பிரமணியன், சி. (1985), முருகன் காட்சி, பாரிநிலையம், சென்னை. ப.106)

## 1:10 நிறைவுரை

"வாழ்க்கையின் படிநிலை" என்ற முறையில் குழந்தை, இளைஞன், வீரன், இல்லறத்தான், முழுமுதல் (முத்தி தரவல்லவன்) என்னும் இயற்கைத் தத்துவத்தை முருகவழிபாட்டு மரபு கொண்டுள்ளது. "அரஹர குழந்தை வடிவேலா" என்று பாடுவதும், "வேலைத் தாங்கி வந்தவன் தான் வேலவன்" என்று புகழ்வதும், "தேவசேனாதிபதி" என்ற வல்லமையும் "தேவகுஞ்சரி மணாளன், வள்ளிக் கணவன்" என்று இல்லற தத்துவத்தால் சிறப்பிக்கப்படுபவனும், அசுரர்களுக்கு முத்தியளித்துத் தேவர்களைச் சிறைமீட்டுக் காத்தருளியமையால் "தேவதேவன், தேவாதி தேவன்" என்றும் "காலன் எனையணுகாமல் உனதிரு காலில் வழிபட அருள்வாயே" என்று மரணத்தை வெல்பவர் என்றும், குருவாய் வந்தருள் தருபவன் என்றும் முருகக்கடவுளின் தன்மைகள் சுட்டப்படுவதால் சிவனைப் போலவோ, மகாவிஷ்ணுவைப் போலவோ எவரையும் அழிக்காது எதிரியையும் வாழ்விக்கும் "கருணை வள்ளல்" என்பதாலும் முருக வணக்கமே தமிழரின் முதல் வணக்கமுறையாயிற்று.

(முற்றும்)

## சோம்பலாய் வாழ்கிறோமே

நந்தனமே உனக்கு வந்தனம் - எந்
நாளும் விடிய வேண்டும்,
சந்தனமாய் உழைக்க வேண்டும் - கந்த
சகத்தினில் அது மலிய வேண்டும்,
சிந்தனை செயலாக வேண்டும் - நாம்
சோம்பலாய் வாழ்கிறோமே?
பந்தமுடன் பயிர் செய்து வாழ - (நீ) வருக
பஞ்சம், பிணி இல்லாதொழிய - (நீ) எழுக

—கே. எஸ். சிவஞானராஜா—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதானக் கந்தனின் அருள் வேண்டிப் பாடு மனமே...!

திரு செ. ரவிசாந் அவர்கள்



செல்வச்சந்நிதி உறை
செந்தூர்ப் பெருமானை
சிந்தையில் நினைமனமே!
மங்களம் பெருகிடும்
மனமெங்கும் அருள் மேவும்
நம்பியே கைதொழுவாய்
ஆறுமுகன் மலரடி நீ தினமே!

(செல்வச்சந்நிதி உறை)

தொண்டைமானாற்றங் கரையில்
குடிகொண்டவன்
தொண்டர்கள் தொழுதேத்தும்
வேல் வடிவேலன்
உள்ளமுருக வேண்டி வழிபடுவோருக்கு
உவந்து அருள் புரியும்
சிவன் உமை பாலன்

(செல்வச்சந்நிதி உறை)

எந்நிதியும் தருவான் சந்நிதியான்
என்றும் ஏற்றிப் போற்றிடுவாய்
உன் வாழ்வில்.....
நினைப்பது ஈடேறும்
வரம் வேண்டுமா?
நித்தமும் உன் வாழ்வில்
நிம்மதி வேண்டுமா?
அன்னதானக் கந்தனின்
அருள் வேண்டிப் பாடு மனமே!
அனுதினமும் சந்நிதியான் பணி
செய்ய உந்து மனமே.....!

(செல்வச்சந்நிதி உறை)

யாராவது துன்பப்படுவதைப் பார்த்தால் அவருக்கு உதவி செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

-ஆறுமுகநாவலர்-

## உ. பசுவியல்

**24. ஆன்மாக்களாவார் யாவர்?**

நித்தியமாய், வியாபகமாய்ச், சேதனமாய்ப், பாசத்தடையுடையோராய்ச், சார்ந்ததன் வண்ணமாய்ச் சரீரந்தோறும் வெவ்வேறாய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்போராய்ச், சிற்றறிவும், சிறுதொழிலும் உடையோராய்த் தமக்கு ஒரு தலைவனை உடையவராய் இருப்பவர். (சேதனம்- அறிவுடைய பொருள்)

**25. ஆன்மாக்கள் எடுக்கும் சரீரம் எத்தனை வகைப்படும்?**

தூல சரீரம், சூக்கும சரீரம் என இரண்டு வகைப்படும்.

**26. தூல சரீரமாவது யாது?**

சாதி, குலம், பிறப்பு முதலியவைகளால் அபிமானஞ் செய்தற்கு இடமாய்ப், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதமும் கூடிப் பரிணமித்த உருவுடம்பு. (பரிணமித்தல்- உருத்திரிதல்)

**27. சூக்கும சரீரமாவது யாது?**

சத்த ஸ்பரிச ரூப ரச கந்தம் என்னும் காரண தன் மாத்திரை ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் என்னும் அந்தக்கரண மூன்றும் ஆகிய எட்டினாலும், ஆக்கப்பட்டு, ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாய், அவ்வவ்வான்மாக்கள் போகம் அநுபவிப்பதற்குக் கருவியாய் ஆயுள் முடிவின் முன்னுடம்பு விட்டு மற்றோருடம்பு எடுத்தற்கு ஏதுவாய் இருக்கும் அருவுடம்பு.

**28. ஆன்மாக்கள் எப்படிப் பிறந்திறந்து உழலும்?**

நல்வினை, தீவினை என்னும் இருவினைக்கு ஈடாக நால்வகைத் தோற்றத்தையும், ஏழுவகைப் பிறப்பையும், எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதத்தையும் உடையவைகளாய், பிறந்திறந்து உழலும்.

**29. நால்வகைத் தோற்றங்கள் யாவை?**

அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பவைகளாம். அண்டசம்= முட்டையில் தோன்றுவன. சுவேதசம்= வேர்வையில் தோன்றுவன. உற்பிச்சம்= வித்து, வேர், கிழங்கு முதலியவை மண்மேற் பிளந்து தோன்றுவன. சராயுசம்- கருப்பையில் தோன்றுவன.

**30. எழுவகைப் பிறப்புகளாவன யாவை?**

தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பவைகளாம். இவ்வெழு வகையினுள்ளும், முன் நின்ற ஆறும் இயங்கியல் பொருள்கள்; இறுதியில் நின்ற தாவரங்கள் நிலையியற் பொருள்கள், இயங்கியற் பொருளின் பெயர் சங்கமம், சரம்; நிலையியற் பொருளின் பெயர் ஸ்தாவரம், அசரம்.

**31. கருப்பையிலே பிறப்பன யாவை?**

தேவர்களும், மனிதர்களும், நாற்கால் விலங்குமாம்.

பேருக்காகவும் புகழுக்காகவும் ஒன்றும் செய்யாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**32. முட்டையிலே பிறப்பன யாவை?**

பறவைகளும், ஊர்வனவும், நீர் வாழ்வனவுமாம்.

**33. வேர்வையிலே பிறப்பன யாவை?**

கிருமி, கீடம், பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளுமாம். (கீடம்- புழு)

**34. வித்தினும் வேர், கொம்பு, கொடி, கிழங்குகளிலும் பிறப்பன யாவை?**

தாவரங்கள்.

**35. எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதங்கள் எவை?**

| | | | |
|---|---|---|---|
| 1. | தேவர் | 11,00,000 | யோனிபேதம் |
| 2. | மனிதர் | 900,000 | யோனிபேதம் |
| 3. | நாற்கால் விலங்கு | 10,00,000 | யோனிபேதம் |
| 4. | பறவை | 10,00,000 | யோனிபேதம் |
| 5. | ஊர்வன | 15,00,000 | யோனிபேதம் |
| 6. | நீர்வாழ்வன | 10,00,000 | யோனிபேதம் |
| 7. | தாவரம் | 19,00,000 | யோனிபேதம் |
| | ஆகமொத்தம் | 84,00,000 | யோனிபேதம் |

**36. ஆன்மாக்கள் வினைகளைச் செய்வதற்கும் வினைப் பயன்களை அனுபவித்தற்கும் இடம் எவை?**

இருவினைகளைச் செய்வதற்கும் இருவினைப் பயன்களை அநுபவித்தற்கும் இடம் பூமி; நல்வினைப் பயனை அனுபவித்தற்கு இடம் சுவர்க்க முதலிய மேலுலகங்கள்; தீவினைப் பயனை அநுபவித்தற்கு இடம் இருபத்தெட்டுக்கோடி நரகங்கள்.

**37. பூமியிலே பிறந்த ஆன்மாக்கள் சரீரத்தை விட்டவுடனே யாது செய்யும்?**

நல்வினை செய்த ஆன்மாக்கள், தூல சரீரத்தை விட்டவுடனே, சூக்கும சரீரத்தோடு பூதசார சரீரமாகிய தேவ சரீரத்தை எடுத்துக்கொண்டு, சுவர்க்கத்திலேயே போய் அந்நல்வினைப் பயனாகிய இன்பத்தை அனுபவிக்கும். தீவினை செய்த ஆன்மாக்கள், தூல சரீரத்தை விட்டவுடனே சூக்கும சரீரத்தோடு பூத சரீரமாகிய யாதனா சரீரத்தை எடுத்துக்கொண்டு, நரகத்திலே போய், அத்தீவினைப் பயனாகிய துன்பத்தை அநுபவிக்கும். இப்படியன்றி, ஒரு தூல சரீரத்தை விட்டவுடனே, பூமியிலே தானே ஒரு யோனி வாய்ப்பட்டு மற்றொரு தூல சரீரத்தை எடுப்பதும் உண்டு.

**38. சுவர்க்கத்திலே இன்பம் அநுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?**

தொலையாது எஞ்சி நின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து மனிதர்களாய்ப் பிறக்கும்.

**39. நரகத்திலே துன்பம் அனுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?**

தொலையாது எஞ்சி நின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து முன்பு தாவரங்களாயும், பின்பு நீர் வாழ்வனவாயும், பின்பு ஊர்வனவாயும், பின்பு பறவைகளாயும், பின்பு விலங்குகளாகவும் பிறந்து, பின்பு முன் செய்த நல்வினை வந்து பொருந்த மனிதர்களாய்ப் பிறக்கும்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்




திருவாசக விழாவின்போது நால்வர்பட ஊர்வலமும், பண்ணிசைப் போட்டியில் பரிசுபெற்ற மாணவ மாணவியரும்.




ஒழுங்காக வாழ்பவன் சிறந்த போதகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவாசக விழாவின் நிகழ்ச்சிகள்.




தீமை செய்ய நினைக்கிறவன் மதிகெட்டவன் ஆவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக மகிமை

செல்வி செ. ஜடா அவர்கள்

இறைவன் ஒளிமயம் ஆனவர். நமது உடம்பு, இரதம் (உமிழ்நீர்) உதிரம், எலும்பு, தோல், தசை, மூளை, சுக்கிலம் ஆகிய ஏழு தாதுக்களால் ஆனது. இறைவன் சோதி வடிவானவன்.

"சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை பாதியே"
"திருவையாறு அகலாத செம்பொற் சோதி"
"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் ஜோதி..."
"அலகில் ஜோதியன்"
"பிரமமாய் நின்ற ஜோதிப் பிளம்பதோர் மேனியாக"
"தீப மங்கள ஜோதி"

என்ற ஆன்றோர் வாக்குகளால் அறிக. ஜோதி எங்கும் நிறைந்திருந்தாலும் கல்லிலே அதிகம் உளது. ஒரு கல்லை மற்றொரு கல்லால் தட்டினால் நெருப்பு வருவதைக் காண்கின்றோம். ஆதலால் தெய்வ வடிவங்களைக் கல்லினால் செதுக்கியமைக்கிறார்கள்.

வேத சிவாகமங்களிலே ஆலய வழிபாட்டைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. இறைவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருக்கிறான். ஆனால் வேதாகம மந்திரங்களினாலே நிறுவப் பெற்ற கோவில் மூலத்தானத்திலே விஷேசமாக இருக்கிறான்.

இறைவன் தனது அகண்டா காரமான சக்தியை ஒரு விக்கிரகத்திற்குள் நிலைபெறச் செய்துகொண்டு அடியவர்களுக்கு அருள்பாலிக்கின்றான்.

வெயிலிலே பஞ்சை வைத்தால் வெப்பமான சூடு ஏறி வெதும்பும்; வெந்து போகாது. சூரிய காந்தக் கண்ணாடியின்கீழே வருகிற வெயிலிலே பஞ்சை வைத்தால் எரிந்து சாம்பலாகிப் போகும். நேர் வெயிலுக்கு பஞ்சைக் கொழுத்துகிற ஆற்றல் இல்லை. சூரிய காந்தக் கண்ணாடியின்கீழே வருகின்ற வெயிலுக்குப் பஞ்சை எரிக்கின்ற ஆற்றல் உண்டு. என்ன காரணம்?

பரந்து விரிந்து இருக்கின்ற சூரிய ஒளியை ஈர்த்துச் சேர்த்து அனுப்புகிறது சூரிய காந்தக் கண்ணாடி.

அதுபோல் எல்லா இடங்களிலும் பரந்து, விரிந்து இருக்கின்ற இறைவனுடைய சக்தியை ஈர்த்துச் சேர்த்து அனுப்புகிறது மூலஸ்தானத்திலுள்ள மூர்த்தி.

ஏனைய இடங்களில் இறைவனை வழிபட்டால் வினைகள் வெதும்பும். ஆலயத்திலுள்ள மூர்த்திக்கு முன் வழிபட்டால் வினைகள் வெந்து போகும். அதனாலேதான் ஔவையார்,

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்கிறார்.

ஆகவே நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும், ஞானிகளும் இந்த உலகம் உய்ய அமைத்தவை ஆலயங்கள். அந்த ஆலயத்திலே கருவறையில் சுவாமி மந்திர வடிவாக



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருந்து ஆன்மாக்களுடைய மலமாயா கன்மங்களை நீறாக்கி அருள்புரிகின்றான்.

மந்திர ஒலிக்கு ஆற்றல் அதிகம். மந்திரம் சொன்னால் பாம்பு கடிக்காது, கடித்த விஷம் இறங்கும். சில திருடர்கள் மந்திரம் சொன்னால் நாய் குரைக்காதாம்.

ஆகையினாற்தான் பெரியவர்கள் வேதமந்திரத்தினாலே இறைவனை வழிபட்டார்கள்.

"வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாக
போதத்தால் வழிபட்டார் புள்ளிருக்கும் வேளூரே"

ஆகவே கோயிலிலே சென்று சேவிக்கவேண்டும். இறைவனுடைய அருளைப் பெற்ற மகான்களாக இருந்தாலும் ஆலய வழிபாடு அவசியம் செய்ய வேண்டும்.

"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்பார் தாயுமானவர்.

"கால்களாற் பயனென் கறைகண்டன் உறை கோயில் கோலக் கோபுரக் கோகரணஞ் குழாக் கால்களாற் பயனென்" என்பார் அப்பர் பெருமான்.

"மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்பது சிவஞான சூத்திரம். நால்வராதிகள் எல்லாம் தலயாத்திரை மேற்கொண்டு ஆலய தரிசனம் செய்து வழிபட்டார்கள்.

ஆண்டவன் ஜோதி வடிவானவன் என்று முன்னர் பார்த்தோம். அந்த ஜோதியின் சக்தி கல்லிலே மிகுதியாக உண்டு என்றும் கண்டோம். ஒரு கல்லை ஒரு கல்லால் அடித்தால் ஒளி வரும். ஆகவே கல்லினால் திருவுருவத்தை அமைத்துத் தானிய வாசம், ஜலவாசம் வைத்து அந்த மகாதேவனுடைய மந்திரங்களை எழுதி மந்திர யந்திரத்தை 48 நாள் வழிபாடு செய்து அதை அந்த மூர்த்திக்குக் கீழே வைப்பார்கள். அந்த மந்திர சக்திமேலே வரும். அந்த வேத சிவாகமத்திலே வல்லவர்களாக இருக்கின்ற அந்தணர்கள் யாகசாலை அமைத்து இனிய மந்திரங்களை ஓதி காலங்கள்தோறும் யாகாக்கினி வளர்த்து அதில் ஜோதியை விளையுமாறு செய்கிறார்கள். அப்படி விளைந்த ஜோதியைக் கும்பத்திலே சேர்ப்பார்கள்.

கல்லினாலும், மண்ணினாலும், சுதையினாலும் மனிதனால் உருவாக்கப்பட்டவை விக்கிரகங்களாகும். அவற்றிற்குத் தெய்வ சக்தியை உண்டு பண்ணுவதற்காகச் செய்யப்படும் பல கிரியைகளில் ஒன்றுதான் கும்பாபிஷேகம்.

ஒருவன் தன் ஆயுட் காலத்தில் மூன்று கும்பாபிஷேகத்தைச் சேவித்தால் அவனுடைய பாவங்கள் நசிந்து விடுகின்றன என்று சுருதிகள் சொல்லுகின்றன. கும்பாபிஷேகத்திற்கு முந்தி அது கல் கும்பாபிஷேகம் ஆன உடனே அது கடவுள். காகிதத்தைக் கரன்சி நோட்டாக மாற்றுகிறார்கள் ஆற்றலுடைய அரசாங்கம். மண்ணைக் கடமாக மாற்றுகிறார்கள். இரும்பை ஒலிபெருக்கியாக மாற்றுகிறார்கள். அதுபோல அருளாளர்கள் கல்லைக் கடவுளாக மாற்றுகிறார்கள்.

கும்பாபிஷேகம் வாழ்நாளில் கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பாகும். கும்பாபிஷேகத்தைச் சேவித்தவர்களுக்குத் திருவருள் நிரம்பத் துணை செய்யும். அதுபோல் பன்னிரண்டு ஆண்டுகள் ஆலயத்திற்குச் சென்று இறைவனை மன, மொழி, மெய்களினாலே வழிபட்டவர்களுக்கு என்ன என்ன அருள் வருமோ, அத்தனை அருளும் கும்பாபிஷேகத்தைச் சேவித்த ஒரு விநாடியில் வரும் என்பது திண்ணம்.

ஆகவே, கும்பாபிஷேகத்தைச் சேவிப்பது மிகமிக இன்றியமையாதது. எல்லோருக்கும் அந்த வாய்ப்புக் கிடைக்காது.

உன் கண்கள்தான் உன் உடலுக்கு விளக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | | |
|---|---|---|---|
| செல்வன் செல்வராஜ் கபிலன் | | இடைக்காடு | 2000. 00 |
| திருமதி செல்வராஜா சிவா | | இடைக்காடு | 2000. 00 |
| சி. சிவலோகலிங்கம் | | திருகோணமலை | 2000. 00 |
| சி. சுப்பிரமணியம் ஆசிரியர் | | அல்வாய் | 1000. 00 |
| மா. நடராசா | கரந்தன்வீதி | நீர்வேலி | 5000. 00 |
| J. சந்திரபிரகாசம் | ஆத்தியடி | பருத்தித்துறை | 7300. 00 |
| அ. குமாரவேல் ஆசிரியர் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| அருணாசலம் சாவித்திரியம்மா | | பருத்தித்துறை | 10000. 00 |
| கு. தியாகராஜசர்மா | | நீர்வேலி | 1மூடை அரிசி |
| சி. பகவத்சிங்கம் (ஓய்வுநிலை அதிபர்) நீர்வேலி தெற்கு | | நீர்வேலி | 1000. 00 |
| திருமதி தையல்நாயகி சுந்தரமூர்த்தி நினைவாக | யாமாவளவு | தெல்லிப்பழை | 1மூடை அரிசி, 10கிலோ பருப்பு |
| செல்வி வரலட்சுமி செல்வராஜன் | யாமாவளவு | தெல்லிப்பழை | 1000. 00 |
| திரு தங்கராசா | பூந்தோட்டம் | வவுனியா | 1500. 00 |
| பா. துவாரகன் | ஏழாலை தெற்கு | சுன்னாகம் | 500. 00 |
| P. சயிலஜா | | ஏழாலை தெற்கு | 2000. 00 |
| டிலக்ஷன் துரைராசா | | ஜேர்மனி | 100யூரோ |
| கார்த்திகேசு மாஸ்ரர் நினைவாக ரஜீவ்கரன் | | உரும்பராய் | 8000. 00 |
| க. ஸ்ரீஸ்கந்தராசா | வேதாந்தமடம் | கந்தர்மடம் | 1மூடை அரிசி 1000. 00 |
| தா. சிவநாதன் | | சுவிஸ் | 1000. 00 |
| சபா ரேடர்ஸ் | | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| திருமதி சிவதாசன் ராகவி | | பிரான்ஸ் | 5000. 00 |
| சரவணபவான் சிவாநந்தகுமாரி | | கைதடி | 4000. 00 |
| சிவரூபன் யாழினி | | வியாபாரிமூலை | 4000. 00 |
| S. குமார் | | கோண்டாவில் | 2000. 00 |
| S. நந்தகோபால் | | நோர்வே | 5000. 00 |
| D. சரண்ஜன் | | உரும்பராய் மேற்கு | 1000. 00 |
| திரு பிரதீபன் | | காரைநகர் | 1000. 00 |
| க. முருகையா குடும்பம் | | சாவகச்சேரி | 5000. 00 |
| S. நடேசமூர்த்தி குடும்பம் | மீசாலை வடக்கு | மீசாலை | 5000. 00 |
| திரு ஜெயபாலன் குடும்பம் | | சாவகச்சேரி | 2000. 00 |
| திரு செல்லப்பா குடும்பம் | | இணுவில் | 7000. 00 |
| சிவக்கொழுந்து ஸ்ரீஸ்கந்தராசா | | நவிண்டில் | 1மூடை அரிசி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| திருமதி கௌரி சுரேசன் | | ஆவரங்கால் | 2000. 00 |
| திருமதி அருள்மொழி சூரியகுமாரன் | | லண்டன் | 5000. 00 |
| யோகநாதன் கலாமதி | | | 17500. 00 |
| திரு சிவசுப்பிரமணியம் | | மல்லாகம் | 2000. 00 |
| திரு தேவநீதன் | | மல்லாகம் | 1000. 00 |
| இ. மணிவாசகம் | | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| சற்குணராஜா கலைச்செல்வி | | நோர்வே | 4000. 00 |
| Dr N. கணேஸ்குமார் | | அமெரிக்கா | 5000. 00 |
| திரு ஸ்ரீபத்மநாதன் | | கொக்குவில் | 2000. 00 |
| திரு சிவானந்தம் மருத்துவசேவை உட்பட | | லண்டன் | 6000. 00 |
| புனிதவதி | | குப்பிளான் | 1மூடை அரிசி |
| சோமசுந்தரம் சிதம்பரம் குடும்பம் | | திருநெல்வேலி | 5000. 00 |
| கந்தசாமி மங்கையற்கரசி | | கொக்குவில் மேற்கு | 5000. 00 |
| ம.க. ஸ்ரீதரன் | உடுவில் | சுன்னாகம் | 5000. 00 |
| திரு சிதம்பரநாதன் குடும்பம் | | வவுனியா | 2000. 00 |
| பூபதி குடும்பம் | | நோர்வே | 5000. 00 |
| பாஸ்கரன் குடும்பம் | | நோர்வே | 2000. 00 |
| ஏகாம்பரம் ரெக்ஸ் | | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| வ.ஆ. தங்கமயில் நில அளவையாளர் | | | 5000. 00 |
| மு. சிவனேசன் | | வியாபாரிமூலை | 10000. 00 |
| ஜே. கிருஸ்ணகுமார் | | இடைக்காடு | 3000. 00 |
| து. நிருஷன் | | மானிப்பாய் தெற்கு | 3000. 00 |
| மு. ஞானவேல் | | சுழிபுரம் | 3000. 00 |
| திருமதி ம. நாகேஸ்வரி | | நவிண்டில் | 2000. 00 |
| P. அப்புத்துரை | | வசாவிளான் | 1000. 00 |
| செ. ரவீந்திரநாதன் | | இமையாணன் | 1000. 00 |
| ந. சண்முகநாதன் குடும்பம் | | கொக்குவில் | 5000. 00 |
| ஆ. இராசரத்தினம் | | லண்டன் | 2000. 00 |
| Dr உதயசீலன் | | சுதுமலை | 1500. 00 |
| லிங்கம் கூல்பார் | | யாழ்ப்பாணம் | 40000. 00 |
| சறோஜினிதேவி மாணிக்கராசா | | வறாத்துப்பளை | 1000. 00 |
| ரமேஷ் அச்சிகா | நவக்கிரி | புத்தூர் | 10000. 00 |
| N. சந்திரசேகரம் | நவக்கிரி | புத்தூர் | 4மூடை அரிசி, பருப்பு, சீனி |
| க. இலட்சுமி | கூமாங்குளம் | வவுனியா | 5000. 00 |
| நடேசமூர்த்தி பிரசாந்த் | தோப்பு | அச்சுவேலி | 3000. 00 |
| செல்வி ஆரணி மகாகணபதி | | வீரப்பதிராயன் | 1000. 00 |
| இ. தில்லையம்பலம் | | கரணவாய் | 1000. 00 |
| திருமதி பா. இந்துமதி | | கரணவாய் | 1மூடை. அரிசி, 1000. 00 |


(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதிக் கந்தர் சதகம்

சிவசுப்பிரமணியம் ஜனகா அவர்கள்



தமிழ்மொழியில் 96 வகையான சிற்றிலக்கியங்கள் காணப்படுகின்றன. இச் சிற்றிலக்கியங்களுள் சதகமும் ஒன்றாகும். சதகம் நூறு பாடல்களைக் கொண்ட இலக் கிய வடிவமாகும். சதகம் என்ற சொல்லுக்கு நிலைத்திருப்பது இறுதி, போதிய, நீண்ட, பூரணத்துவம் போன்ற பல கருத்துக்கள் காணப்படுகின்ற போதிலும் சத் + அகம் எனப் பிரித்து உண்மைப் பொருளாகிய இறைவனைப் பாடுவது என்ற கருத்தே முதன்மை பெறுகின்றது.

வடமொழியில் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் சதக இலக்கியங்கள் தோன்றினாலும் தமிழ் மொழியில் கி.பி. 9ஆம் நூற்றாண்டில் அறிமுகமாகின்றது. பல வகையான இலக்கிய வடிவங்களை தமிழில் அறிமுகம் செய்த (திருப்பூவல்லி, அம்மானை, தெள்ளேணம், பூவல்லி, சாழல்) மாணிக்கவாசகரே திருச்சதகத்தினையும் அறிமுகம் செய்தார். சதகம் என்பது இறைவனைப் பாடுவதற்குரிய வடிவம் என்ற எண்ணக்கரு ஆரம்பகாலங்களில் இருந்தாலும் பிற்பட்ட காலங்களில் வரலாறு, மருத்துவம், சோதிடம் போன்றபல வகைப்பொருளைக் கொண்டும் பாடப்பட்டன. இவ்வாறாக தமிழ்நாட்டில் 300க்கு மேற்பட்ட சதகங்கள் தோன்றியிருக்க ஈழத்தில்,

1. ஈழமண்டலச்சதகம் -ம.க. வேற்பிள்ளை
2. ஈழமண்டலச்சதகம் -கதிரவேற்பிள்ளை
3. இராஜஇராஜேஸ்வரி சதகம்

4. சந்நிதிக் கந்தர் சதகம் ஆகிய சதக இலக்கியங்களே தோற்றம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு ஈழத்தில் தோன்றிய வரலாற்றுப்புகழ் பெற்ற சந்நிதி முருகன்மீது நமசிவாய தேசிகரால் பாடப்பட்ட சதகமே சந்நிதிக் கந்தர் சதகம் ஆகும்.

இந்நூல் தோன்றிய வரலாறுபற்றி கூறும்போது நூலாசிரியர் சந்நிதி முருகன் திருத்தலத்திலே திருமுன்றலில் நின்று வழிபாடு செய்யும்பொழுது முருகன்மீது கொண்ட ஆராத பக்தியினால் உணர்ச்சி வசப்பட்டு அருவி ஊற்றெடுத்து ஓடுவதுபோல பதினான்கு பாடல்களை ஒன்றன்பின் ஒன்றாகப் பாடினார் எனவும், ஏனைய பாடல்களை அத்தலத்தின் வேறு சூழல்களில் இருந்து பாடினார் எனவும் கூறப்படுகின்றது.

நூலின் ஆரம்பத்தில் சதகம் செய்ய கருணை வேண்டி

"சந்நிதிக் கந்தர் சதகத் தமிழ் செய்ய
மன்னு கருணை மழை பொழியும்..." என்று விநாயகருக்கு வணக்கம் செய்து பாடல் ஆரம்பிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறு பாடல்களைக் கொண்ட சந்நிதிக் கந்தர் சதகம் அருள்தர முருகனை அழைப்பதுடன் நிறைவு பெறுகின்றது.

"குருவே வருக குமரா வருக
திருவே வருக சிவசேய் வருக
முருகா வருகா முதலே வருக
வருக வருக வனசெம் மலையே" என இறுதிப்பாடல் அமைகின்றது.

மலையரசன் மகளாகிய பார்வதிதேவியின் மகனான மயில்வாகனன் தேவர்களுக்கு அரசனாகிய தெய்வேந்திரன் மகள் தெய்வானையை மணந்து, குறவர் மகளான வள்ளியையும் மணந்து திருமாலுக்கு மருமகனாகத் திகழ்பவனே எமக்கு அருள்புரிவாய்.

முருகா என்று எண்ணும்பொழுது உள்ளம் பசிக்கின்றது. சந்நிதியில் நிமலா உன்னைப் பார்க்கும் பொழுதிலே நிறைவான வாழ்வு கிடைக்கின்றது. ஆறுமுகமுடைய முருகன் அசமுகியின் குகையில் நக்கீரன் சிக்கியிருந்த வேளை காப்பாற்றிய குகவேளை சந்நிதியில் தொழுதால் நோய்கள் தீரும். நான்முகனைச் சிறைவைத்த எம்பெருமானின் சந்நிதியில் வீற்றிருந்து அடியார்க்கு அருள் வழங்கும் முருகப்பெருமானின் "சரவணபவ" என்னும் ஆறெழுத்தை உச்சரிப்பவர் முருகனின் தயவைப் பெறுவர். உள்ளன்பொடு குருநாதருடைய ஒரு சொல்லினை உச்சரித்தால் அகமும் புறமும் காத்து அருள்வான் எனப் பலவாறு முருகனின் சிறப்புக்கள் இந்நூலிற் கூறப்பட்டுள்ளது.

மேலும் முருகன் சூரனைச் சங்காரம் செய்தது "விறல் சேர் சூரன் மிகுமா யையினான்" பிரமனைச் சிறை வைத்தது,

"முருகார் கமலத் தமர் நான்முகனை
பெருமால்கலச் சிறைசெய் பெருமான்..." என்றும்

அருணகிரிநாதருக்கு அருளியது

"ஏற்றே யருண கிரியார் இசைபா
மாற்றாய் அருளை மகிழ்வாய் அருள்வாய்"

வலன் என்கின்ற அசுரனை வெல்வதற்காக இந்திரன் முருகனின் உதவியை நாட இந்திரனுக்கு உதவியவன் முருகன் என்று வரலாற்றுச் சிறப்புக்களை இச்சதகத்தினூடாகக் கூறுகின்றார்.

முருகனை வர்ணிக்கும்போது இயற்கையாகிய நிலவு, மலை, பூ, நெருப்பு போன்றவையாக உவமித்துப் பாடப்பட்டமை இச்சதகத்தின் சிறப்பினை எடுத்தியம்புகின்றன. அத்துடன் அழகுதமிழில் சிறந்த சொல் அலங்காரத்தினையும் கையாண்டிருப்பதைக் காணலாம்.

"உறுமா தவர்வந் துறைசந் நிதியைக்
குறுகக் குறுகக் கொடுநோய் வினைகள்
குறுகக் குறுகும் மகிழ்வுங் குணமும்
வறுமைப் பிணியும் மயலுங் கெடுமே"

என்ற பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

"சந்நிதிச் சதகம்" முருகனின் சிறப்புக்கள், அருட்செயல்கள், புராண இதிகாசக் கதைகளை எடுத்தியம்புவதோடு அழகு தமிழில் ஆழமான பக்தி இழையோடப் பாடப்பட்டிருப்பதோடு சந்நிதி ஆலயத்தினை மனக்கண் முன்னே காட்டுகின்ற ஈழத்தில் எழுந்த சிறந்த பக்தி இலக்கியமாகவும் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

உயர்திரு: கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

சுயம்புலிங்கம் தானே தோன்றுவது. தொடக்கம் அற்றது. பலவகைப்பட்ட உற்பாதங்களின் விளைவாகச் சிதைவுறினும் திரும்பவும் பிரதிஷ்டை முதலிய கிரியைகளின்றியே வழிபடத்தக்க பெருமை வாய்ந்தது. பின்னப்படும் பகுதியை வெள்ளி முதலிய உலோகங்களால் நிரவித் தொடர்ந்து பூசிக்கலாம். இந்தியாவில் உள்ள அறுபத்தெட்டுத் திருக்கோயில்களில் இச் சுயம்புலிங்கங்கள் விளங்குகின்றன.

தைவிகலிங்கம், சுவாலை வடிவானது. கைகளைக் கூட்டிக் கூப்பும் அஞ்சலியை நிகர்க்கும். **கணபலிங்கங்கள்**, கணங்களால் நிறுவப்பட்டவை. அசலலிங்கங்களுட் பெரும்பாலானவை மானுஷலிங்கங்கள். இவை மக்களால் அமைக்கப்பட்டவை. ஆகமங்கள் விதிக்கும் முறையினுக்கு இணங்க உருவாக வேண்டியவை. சதுர வடிவினதான அடிப்பகுதி பிரம பாகம் என்றும், நடுவில் எண்கோண வடிவினதான பகுதி **விஷ்ணுபாகம்** என்றும், மேலே வட்டவடிவினதான பகுதி **உருத்திரபாகம்** என்றும் பெயர் பெறும். **சர்வதேசிகம், சர்வசமம், வர்த்தமானம், சைவாதிகம், ஸ்வஸ்திகம், திரைராசிகம், ஆட்யம்** என்னும் இலிங்க வகைகளும் ஆகமங்களில் விரிக்கப்பட்டுள்ளன. நாகரலிங்கம், திராவிட லிங்கம், வேசர லிங்கம் என இலிங்கங்களின் பிரிவுகளை மயமதம் எடுத்துக் கூறுகின்றது.

மானுஷ இலிங்கங்களுள் இன்னும் ஐவகை இலிங்கங்கள் இருக்கின்றன. இவை **சஹஸ்ரலிங்கம், தாராலிங்கம், சைவேஷ்டியலிங்கம், முகலிங்கம்** என்பன **அஷ்டோத்தரலிங்கம்** நூற்றெட்டு சிறு லிங்கங்களைப் பூசா பாகத்தில் உடையது. இவ்வாறு ஆயிரம் சிறு லிங்கங்கள் இருப்பின் அது சஹஸ்ரலிங்கம் எனப்படும். தாராலிங்கம் ஐந்து, ஏழு, ஒன்பது, பன்னிரண்டு, பதினாறு, இருபது, இருபத்துநான்கு அல்லது இருபத்தெட்டு பட்டைகளை உடையது. முகலிங்கங்கள் முகங்கள் செதுக்கப்பட்டிருப்பன. இம் முகங்கள் ஐந்து. இதன் எண்ணிக்கை வேறுபடலாம். ஒரு வாயில் இருக்கும் கருவறையில் ஒரு முகமுள்ள இலிங்கம் நிறுவப்படும். நான்கு வாயில்கள் இருப்பின் நான்கு முக லிங்கங்களையும் அமைக்கலாம். ஐந்தாவது முகத்தை அமைப்பதாயின் அது மேலே இருத்தல் வேண்டும். உச்சியில் இவ்வாறு இருக்கும் முகத்திற்கு **ஈசானம்** எனப் பெயர் உண்டு. கிழக்கே இருப்பது **தத்புருஷம்; அகோரம்** தெற்கே உள்ளது; **சத்யோஜாதம்** மேற்கிலும், **வாமதேவம்** வடக்கிலும் விளங்குவன.

இலிங்கம் பீடத்தின் மேல் நிறுவப்படும். இப்பீடத்திற்குப் **பிண்டிகை** என்னும் பெயர் உண்டு. அது சதுர வடிவாகவோ வட்ட வடிவாகவோ அமையலாம். ஒன்று, இரண்டு அல்லது மூன்று கல் தளங்கள் ஒன்றன் மேலொன்றாய் அமையும் வகையில் பீடம் உருவாகும். இதில் பல நுணுக்கமான வேலைப்பாடுகள் அமையும். எண்ணிறந்த வடிவங்களைக் கொடுத்து உருவாக்கப்படும் பீடங்களும் பல திறத்தன. இப்பீடங்களின் வேலைப்பாடமைந்த பகுதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையே உபானம், ஜகதி, குமுதம், பத்மம், கண்டம், பண்டிகை, நிம்னம், கிருதாவாரி என்பன. பூசாபாகத்திலிருந்து இலிங்கத்திற்கு வெளியே நீண்டிருக்கும் பகுதியை நாளம் என்று நூல்கள் சுட்டுவன. இது பீடத்திலிருந்து தொடங்கி வெளியே நீண்டு நிற்கும் அபிடேகிக்கும் நீர் வெளியே செல்வதற்கு இது வழியாய் அமைந்துள்ளது.

இதுவரை அருவுருவத் திருமேனியாகிய இலிங்கத்தைப் பற்றிய விபரங்களைச் சுருக்கிக் கூறினோம். சிவபெருமானுடைய மூர்த்திபேதங்கள் அறுபத்துநான்கினுள் முதலிற் கூறப்படுவது இலிங்கம். இதையடுத்துக் கூறப்பட்ட மூர்த்திகள் இலிங்கோற்பவர், முகலிங்கம், சதாசிவம், மகாசதாசிவம், உமாமகேசுவரர், சுகாசனமூர்த்தி, உமேசமூர்த்தி, சோமஸ்கந்தமூர்த்தி, சந்திரசேகர மூர்த்தி, விருஷாரூடமூர்த்தி, விருஷாந்திகமூர்த்தி, புஜங்கலளிதமூர்த்தி, புஜங்கத்ராஸ மூர்த்தி, சந்தியாநிருத்த மூர்த்தி, சதாநிருத்த மூர்த்தி, சண்டதாண்டவ மூர்த்தி, கங்காதர மூர்த்தி, கங்காவிசர்ஜன மூர்த்தி, திரிபுராந்தக மூர்த்தி, கல்யாணசுந்தர மூர்த்தி, அர்த்தநாரீஸ்வர மூர்த்தி, கஜாசுரம்ஹர மூர்த்தி, ஜ்வராபக்ன மூர்த்தி, சார்தூலஹர மூர்த்தி, பாசுபத மூர்த்தி, கங்காளமூர்த்தி, கேசவார்த்த மூர்த்தி, பிட்ஷாடன மூர்த்தி, சிம்ஹக்னமூர்த்தி, சண்டேசுவரானுக்கிரக மூர்த்தி, வ்யாக்யாதஷிணா மூர்த்தி, யோகதஷிணா மூர்த்தி, வீணாதரஷிணா மூர்த்தி, காலாந்தக மூர்த்தி, காமாரிகாலதகன மூர்த்தி, வகுளேசுவர மூர்த்தி, பைரவ மூர்த்தி, ஆபதுத்தாரண மூர்த்தி, வடுகமூர்த்தி, சேஷத்திரபால மூர்த்தி, வீரபத்திரமூர்த்தி, அகோராஸ்திர மூர்த்தி, தஷயஞ்ஞஹரமூர்த்தி, கிராதமூர்த்தி, குருமூர்த்தி, அஸ்வாரூட மூர்த்தி, கஜாந்திக மூர்த்தி, ஜலந்திரவத மூர்த்தி, ஏகபாததிரி மூர்த்தி, த்ராபாதத்ரிமூர்த்தி, ஏகபாத மூர்த்தி, கௌரிவரப்ரத மூர்த்தி, சக்ரதாளஸ்வரூப மூர்த்தி, கௌரீலீலாசமன்வித மூர்த்தி, விஷாபஹரண மூர்த்தி, கருடாந்திக மூர்த்தி, பிரம்மசிரசேதகத மூர்த்தி, கூர்மசம்ஹார மூர்த்தி, மத்ஸ்யாரி, வராஹாரி, பிரார்த்தனாமூர்த்தி, ரக்தபிக்ஷாபிரதான மூர்த்தி, சிஷ்யபாவ மூர்த்தி ஆகிய அறுபத்துமூன்றுமாம். இவற்றுள் **இலிங்கம், இலிங்கோற்பவர், சந்திரசேகரர், சோமஸ்கந்தர். பைரவர், வீரபத்திரர், நிருத்த மூர்த்தி, தஷிணாமூர்த்தி, பிட்ஷாடன மூர்ந்தி** ஆகிய ஒன்பது மூர்த்திகள் இலங்கையிலும், இந்தியாவிலும் உள்ள பெரும்பாலான கோவில்களில் வழிபாட்டிற்காக நிறுவப்பட்டிருக்கக் காண்கிறோம். இவற்றைப் பற்றி மட்டுமே இந்நூலில் கூறுதல் இயலும். ஏனைய மூர்த்திகள் சிற்சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் காணப்படுவன. இவைபற்றிக் கூறுவதற்கு விரிவாக எழுதப்படும் நூலே இடந்தரும்.

## கஞ்சனின் நீச்சல்

ஒரு கஞ்சன் ஆற்றில் விழுந்து விட்டான். அவனுக்கு நீந்தத் தெரியாது. வெள்ளத்திலே தத்தளித்துக் கொண்டிருக்கிறான். கரையில் நின்ற ஒருவர், "உன் கையைக் கொண்டா இப்படி, பிடித்து இழுத்துக் கரையிலே சேர்க்கிறேன்" என்று கத்தினார். எதையும் கொடுத்துப் பழக்கமில்லாத அந்தக் கஞ்சன் கையைக் கொடுக்க மாட்டேன் என்று தலையாட்டினான். இவர் யோசித்தார் அவனிடம் "உன் கையைக் கொடு" என்று சொல்வதற்குப் பதிலாக, "இந்தா, என் கையைத் தருகிறேன் பிடிச்சுக்கோ!" என்று கத்தினார். உடனே கஞ்சன் "கப்"பென்று கையைப் பிடித்துக் கொண்டான்.

– ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் –

உயரவேண்டுமானால் பணிவு வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரைசான்ற நூல்களை ஆக்குவோம் உத்தம நூல்களைப் படிப்போம்

திரு முருகவே பரமநாதன் அவர்கள்

சுப்பிரமணிய பாரதியார் முப்பெருந் தமிழ்ப் புலவர்களைப் போற்றியுள்ளார். அவர்கள்தான் கம்பர், வள்ளுவர், இளங்கோவடிகள். முத்தமிழ்க் காப்பியத்தை, தமிழ்பேசும் பெருங்குல மக்கட்களித்தவர் இளங்கோவடிகள். இவர் நிமித்தியனின் கூற்றையே மாற்றியவர். சிலப்பதிகாரத்திலே கண்ணகியை "உரைசால் பத்தினி"யெனப் பாடியுள்ளார். நிறை- கற்பு. நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுதல் என உரையாசிரியர்கள் கூறுகின்றனர். இளங்கோவைப் போலத் திருவள்ளுவ நாயனாரும் நூலைப் பற்றிப் பேசுங்கால் "உரைசான்ற நூலென அழுத்தம் திருத்தமாகக் குறள் செய்துள்ளார். ஒரு மன்னனுக்கு இருவிடயங்கள் முக்கியமான தென்பது அவர் கோட்பாடு. ஒன்று ஒற்றர்மூலம் வேவு பார்த்தல்; மற்றது உயர்ந்த நீதி நூற் பரீட்சயம். இதைச் சாணக்கியம் என்றும் கூறலாம்.



ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன்கண் -குறள் 581-

ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்- ஒற்றும் புகழமைந்த நீதிநூலுமாகிய இவை இரண்டினையும், மன்னவன்கண் தெற்றென்க- அரசன் தன்னிரண்டு கண்ணுமாகத் தெளிக. உரைசான்ற நூல் என்பதற்கு, நீதிநூல், புகழமைந்த நூலெனப் பாரதியார் உரைகண்டுள்ளார். நாலறிவு எல்லார்க்கும் பொதுஉரை சான்ற என்பதற்கு விற்பனரால் உரைத்துப் பார்த்து, மிகச் சிறந்ததெனக்கண்டது. சங்கங்கள் இருந்த காலகட்டத்திற் சங்கப்புலவர்களால் ஏற்கப்பட்டவையே உரை சான்ற நூல்கள். எல்லாராலும் உரைத்துப் பார்த்து மிகமிக உயர்ந்ததாகச் சிபாரிசு செய்யப்பட்ட ஏடுகள் எனவும் பொருளமைவு காண்பர். இப்போ அரசினராற் கணிக்கப்பட்ட நூல்களுக்கு சாகித்தியமண்டலப் பரிசு வழங்குவர். விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்கள் நோபல் பரிசு பெற்றுள்ளன. எவர் எப்படிக் கூறினும் நூல் உயர்ந்ததாய் அமைந்தால் உலகம் போற்றும். மதிக்கும். மதிப்பெண்கள் வாசகர் மட்டத்தில் இருந்தும் வரலாம். இதை மையமாய்க்கொண்டு பாரதி இரு கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்ற வேண்டும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமை யெனில் வெளிநாட்டார்
அதை வணக்கஞ் செய்ய வேண்டும்

யாமறிந்த 3

இப்பாட்டிலே வருகின்ற "இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்ற வேண்டும். திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்ய வேண்டும்" என்ற கருதுகோள்களுக்கு இலக்கியமாய் அமைந்தது வள்ளுவனாரின் உரைசான்ற நூல். வள்ளுவம் பல மொழிகளிலே (78) மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. பாரதியின் பாடல்கள் பல, "பிரெஞ்ஸ், ஆங்கிலம், செக்கோசிலவகியம், ரசியா, சீனா போன்ற நாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. எனவே உயர்ந்த எழுத்தாளர்கள் உருவாக வேண்டும். மொழிநடையும் ஓம்புயர்வானதாய் அமைத்தல் வேண்டும். வாசகர்களும் தரத்தையே வாசிக்க வேண்டும். குப்பை கூழங்களை ஒதுக்க வேண்டும். எழுத்து ஆளுமைகளை வளர்த்து தமிழாளுமைகளைக் காப்போமாக. மொத்தமாக வாசகர்களின் தரமும் எழுத்தாளர்களின் தரமும் மொழிவளத்தை (தமிழை) மாற்றியமைக்க வேண்டும். ஸ்ரீநிவாச சாஸ்திரிகளின் ஆங்கிலத்துக்கு நல்லமவுசு இருந்தது. ஈழத்துப் பண்டிதமணியின் தமிழும் தமிழ்த் தென்றல் திரு.வி.க. வின் தமிழும் மிகமிக உயர்ந்தவை. இலகுதமிழ், எளியநடை என்ற கோஷங்கள் தமிழையே தரக்குறைவாக்கியமை உலகறிந்த உண்மை. எங்கள் தமிழையும் உயர்த்தி நாமும் உயர்வோமாக.

வள்ளுவப் பெருந்தகை நூல் எப்படி அமைய வேண்டும் என்பதை நட்போடு தொடர்பு படுத்திக் கூறியுள்ளார்.

நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் நட்பு -குறள் 483

திருவாசகத்தை மீட்டும் மீட்டும் படித்தவர் போப்அயா: உ.வே. சுவாமிநாதையர். நாலடியாரையே திருப்பித் திருப்பிப் படித்தவர். நாவலர் திருக்குறளையே தினமும் ஓதினார் திருவாசக சுவாமிகள் சபாரத்தின அடிகளார் உடலம் விடுமட்டும் திருவாசகத்தையே ஓதினார். ஷேக்ஸ்பியரின் பாடல்களைப் படிப்போர் பலருள். ஔவையார் நீரளவேயாகும் நீராம்பல், நூலளவேயாகும் நுண்ணறிவு எனப் பாடினார். மாணிக்கவாசகர் அறிவைக் கூர்த்த மெய்ஞ்ஞானம் எனப் பாடியுள்ளார்.

ஆக உலகம்பூராவும் வாழும் தமிழர்கள் உலகம் போற்றத்தக்க நூல்களைப் படைக்கட்டும் படைப்பாளிகளும் உயரட்டும். படிப்பாளிகளும் உயரட்டும். சரசுவதியின் கையில் ஏடு இருக்கிறது. எதற்காகச் சிந்திப்போமாக.

---

நான் எப்போதும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அந்த உண்மையை எந்த வினாடியில் உணரத் தொடங்கினேனோ அந்த வினாடி முதற்கொண்டு மகிழ்ச்சிதானே என்னிடம் வந்து குடிபுகலாயிற்று. மகிழ்ச்சி வெளியேயிருந்து வருவதில்லை. நான் மகிழ்ச்சியோடிருக்க எனக்கு எந்தப் பொருளும் தேவையில்லை. "நான்" என்று தனியே பிரித்துக்கொள்ளும் அகங்காரத்தை ஒழித்த மாத்திரத்தில் எப்படிப்பட்ட ஆனந்தவெள்ளம் என் உள்ளத்தில் பெருக்கெடுத்தது! உலகுக்கெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் அது குறைவதில்லை. *-நாளுக்கு ஓர் நற்சிந்தனை-*

---

மிகத் தீய குணம் கோபம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருமந்திரக் கதைகள்

திரு கே.வி. குணசேகரம் அவர்கள்

## உ. கல்வியே கண்

"கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி உரை செய்யும்
கற்றறி காட்டக் கயல்உள ஆக்குமே"

சிவனைப் பிரார்த்தித்துக் கல்வியைக் கற்றோருக்கு அறிவு என்ற அகக்கண் உண்டாகும் அறிவு என்ற ஞானக் கண்ணைப் பெற்றோர் உலக நடைமுறைகளைத் தெரிந்து வைத்திருப்பர். அவர்களுக்கு நிகழ்காலத்தில் நடக்கவிருப்பவையெல்லாம் தெரியும். இவர்களின் சிந்தனை எப்போதும் சிவசிந்தனையாக இருப்பதால் சிவன் இவர்களது ஆத்மாவில் எந்நேரமும் மகிழ்வுடன் இருந்து அவர்களை வழி நடத்திக்கொண்டிருப்பர். அதனால் இவர்களை நம்பி, இவர்களின் சொற்படி நடப்போர் என்றும் இன்பத்தையே அனுபவிப்பர். சிவன்மீது பற்றுக்கொண்டு கல்வியைக் கற்பவர்கள் அறத்தை உணர்ந்தவர்களாக இருப்பர். வரும் துன்பத்தைப் போக்கி இனித் துன்பம் என்பது வராத வண்ணம் முன்னதாகவே தெரிந்து சொல்லக்கூடியவர்களாக இருப்பார்கள். இத்தகைய சிவ சிந்தனையாளர்கள் அரசர்க்கு ஒளிதரும் கண்களைப் போன்றவர்கள் ஆவர். இதனாற்றான் பண்டைய அரசர்கள் இப்படியானவர்களைத் தமது அமைச்சர்களாக்கினர்.

நாவலூரில் சிவஞானம் என்றொரு பண்டிதர் இருந்தார். அவர் வேதங்களையும் உபநிடதங்களையும் சைவ சித்தாந்த நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர். அவ்வூரவர்கள் எக்காரியத்தையும் அவரைக் கேளாது செய்யமாட்டார்கள்.

அவ்வூரில் சுந்தரம், மாணிக்கம் என்று இரு வணிகர்கள் இருந்தனர். சுந்தரம் சிறிய வணிகன். அவனிடம் ஒரு கப்பல் மட்டும் இருந்தது. அதில் அவன் பொருட்களை ஏற்றி உள்ளூரில் வியாபாரம் செய்தான். மாணிக்கனிடம் பத்துக் கப்பல்கள் இருந்தன. அவற்றில் அவன் பொருட்களை ஏற்றிப் பிற நாடுகளில் வியாபாரம் செய்து வந்தான்.

சுந்தரனும் மாணிக்கனும் சிவஞானத்தின் வீட்டுக்கு வருவார்கள். சுந்தரன் கால்நடையாக வருவான். ஆனால் மாணிக்கன் ஆடம்பரமான மோட்டார் வண்டியில் வருவான். சுந்தரன் வந்து நிலத்தில் அமர்ந்திருந்து கதைப்பான். மாணிக்கன் ஆடம்பரமாக வந்து நாற்காலியில் காலுக்குமேல் கால்போட்டு அமர்ந்திருந்து கதைப்பான்.

அன்று மாணிக்கனை, அயல் நாட்டரசன் ஐந்து கப்பல்களில் உணவு வகைகளும், இயந்திரங்களும், பொன்னாபரணங்களும், விலை உயர்ந்த மாணிக்கக் கற்களும் கொண்டுவருமாறு கூறியிருந்தான். அதனால் அவன் கப்பல் புறப்படுவதற்கான நல்ல நேரத்தைக் கேட்க வந்திருந்தான். சிவஞானம் சிறிது நேரம் யோசித்துவிட்டுச் சொன்னார்; "மிகமிகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமதியான பொருட்களை ஒரு நாளில் பல கப்பல்களில் கொண்டு செல்லாதே. ஒவ்வொன்றாக அனுப்பு. முதலில் உணவுக் கப்பலை அனுப்பு" என்றார்.

அவன் சென்ற பின் சுந்தரன் சொன்னான்; "ஐயா நான் முதன்முதலாக பொருட்களை ஏற்றி வெளிநாட்டிற்கு அனுப்பவுள்ளேன். அதற்கு நாட் குறித்துத் தாருங்கள். நான் வெளிநாட்டிற்குப் பொருட்களை அனுப்பலாமா? என்றும் கூறுங்கள்" என்றான். சிவஞானம் "இன்று மாலையே அனுப்பு" என்றார்.

மாணிக்கனுக்கு சிவஞானம் சொன்னதில் நம்பிக்கையில்லை. அதனால் அயல் நாட்டரசன் கேட்ட பொருட்களையெல்லாம் திரட்டி அன்றே அனுப்பி வைத்தான்.

அயல்நாட்டரசனின் மந்திரி கடற்கொள்ளைக்காரர்களுடன் தொடர்புள்ளவன். அதனால் மாணிக்கனின் கப்பல்கள் பெறுமதியான பொருட்களுடன் வருவதைக் கடற் கொள்ளைக்காரர்களுக்கு அறிவித்துவிட்டான். கடற்கொள்ளைக்காரர்கள் பெறுமதியான ஆபரணங்கள் கொண்டு சென்ற கப்பலை ஆயுத முனையில் கடத்திச் சென்றனர். அதனால் மாணிக்கன் தனது எட்டுக் கப்பல்களையும் விற்றுக் கடன் கட்டினான். அந்த எட்டுக் கப்பல்களில் ஐந்தையும் சுந்தரன் சிவஞானத்தின் சொற்படி வாங்கினான்.

கல்வியுடன் திருவருட்கல்வி பெற்ற செந்நெறியாளர் சிவனருளால் பின் நடப்பவை எல்லாவற்றையும் அறிந்துகொள்வார்கள். அவர்களுக்கு அவர்கள் கற்ற கல்வி ஓர் அகக்கண்ணைக் கொடுக்கும். அந்த ஞானக் கண்ணுக்குப் புலப்படாதது எதுவுமில்லை; "சிவஞானம் ஐயா ஞானக் கண் உடையவர். அதனாற்றான் அவர் உன்னை ஐந்து கப்பல்களையும் ஒன்றாக அனுப்ப வேண்டாம் என்று கூறினார். நீ அதைக் கேளாததால் நட்டமடைந்தாய்" என்று மாணிக்கனுக்குச் சுந்தரன் கூறினான். தான் கல்வி அறிவில்லாததால் அதை உணர்ந்து கொள்ளவில்லை என்று மாணிக்கன் வருந்தினான்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆழ்கடல் அரிவியூற்றும் அந்தமும் சந்நிதிக் கந்தனே

திரு க. தெய்வேந்திரம் அவர்கள்

நித்தியமாய் நின்மலனாய் நிர்க்குணனாய் நீரலையாய்
தத்துவமாய் தத்துவத்திற்கப்பாலாகிக் கதிர்காமருள்ளம் சார்ந்தாய்
மச்சமான பொருள் சேரக்கண்டேயுயர்த்தியன்பர் மனங்களித்தாய்
சித்தமுவப்பத் திருக்காட்சி தந்தனையே சந்நிதியானே!

தண்ணார் மதியந்தாங்கும் சர்வசங்கார வேலா
கண்ணாரமுதே ஏழ்கடலுற்றிடை ஆற்றங்கரைநிதியே
விண்ணோரமுதே தேவசேனாதிபதிக் கடலே
கண்ணாரக் காணுங்காட்சி கடல்வழியன்பருளம் தவழ்ந்தனையே!

ஆக்காமே யெமையாக்கி யளியாதளித் தெவையும் ஊக்கி
போக்காமே போக்கி யெம்மலம் நீக்கியாண்டளித்த யெம்பரனே
வாக்காரக் கூர்விழிகாட்டி யெமையாண்டனையே
பார்க்காது நின்ற பவத்தானை யென்றென்றும் நின்பதம் சேர்த்தனையே!

அன்னைநீயே அப்பன்நீயே அனைத்தும்நீயே சந்நிதியானே
சோதியாய் தொண்டைமானாற்றிடை தொன்மை மறைஞானாகரனே
நீதியாகக் கனித்துவருமுள்ளங்களை நின்மலனாயாக்கிய தெய்வமே
தீதிலாத சிவஞானப் பற்றுடையாவருள்ளமும் பலம் கொண்ட வித்தகனே!

அறிவாய் விளங்கி ஒளியாய் எங்கும் அசைவற்று நின்றவேலா
நெற்றிக்குறியாகியின்பவமுதாய் நெஞ்சில் நிறைந்த பாலா
செறிவாகி நீரின் நிழலாய் பூவரசிலமர்ந்த பூம்பந்தல் முருகா
பெறு ஞானமாகித் திருமேனி கொண்டெம் பதிகாண வந்த கந்தா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 88ஆவது பிறந்த நாள்



அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 88ஆவது பிறந்தநாள் விழா துர்க்காதேவி தேவஸ்தானத்தில் "அறக்கொடை விழாவாக நடைபெறவுள்ளது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பெற்ற பயிற்சிகளுடன் கூடவே அவரிடம் இயல்பாகக் காணப்பட்ட சைவப் பெண்களுக்கான நற்பழக்க வழக்கங்கள், சைவப்பணி, மூத்தோரை மதித்தல், நல்லோர் நட்பு ஆகியவை இவரைப் புடம்போட்ட தங்கமாக மாற்றியது. ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலிருந்து வெளியே வந்த பின்னர், கிறிஸ்தவப் பாடசாலைகளில் கடமைபுரிந்த வேளைகளிலும், அங்குள்ள சைவ மாணவர்களின் சமய அறிவு வளர்ச்சியில் பெரிதும் கவனமெடுத்தார்.

சைவநெறி கலந்த சீரான- பண்பான வாழ்க்கையின்மூலமும், பொருள் பொதிந்த சமயச் சொற்பொழிவுகள் மூலமும், இடைவிடாத ஆலய சேவை- சமய சமூகத் தொண்டின் மூலமும் அனைவரையும் கவர்ந்தார். அவரது அயராத உழைப்பு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் நிர்வாகக் குழுவில் ஒருவராகி - பின்னர் தலைவராகி பெருந் தொண்டாற்றினார். அவர் தலைமையில் துர்க்கை அம்மன் ஆலயம் படிப்படியாக பூசைகள்- விழாக்கள்- பணிகளால் இன்று உயர்ந்த இடம்பெற்றுத் திகழ்கிறது.

ஆதரவற்ற சைவப் பெண் சிறுமிகள் இல்லம், முதுமைக் காலத்தில் வாழமுடியாது தவித்த சைவ மூதாட்டிகளின் ஆதரவு மையம் என அன்னையினால் ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு அற நிறுவனங்கள் ஆரம்பத்தில் சிறியனவாக இருந்தபோதும், இன்று வளர்ந்த மாடிக் கட்டிடங்களாக மாறித் திகழ்கிறது. கல்வி, மருத்துவம், சமூகசேவை, சமய வளர்ச்சி போன்ற பல சேவைகளுடன் வருடாவருடம் பல லட்சம் ரூபாவினை வாரி வழங்கும் அற நிலையமாக தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் இன்று திகழ்கிறது.

சிவத்தமிழ்ச் செல்வியின் 88ஆவது பிறந்தநாளான 07.01.2013இல் அன்னாரின் நினைவாக அறக்கொடை விழா சிறப்புற நடைபெற ஏற்பாடாகியுள்ளது. யாழ்/ போதனா வைத்தியசாலை உட்புறமுள்ள சிவாலயத் திருப்பணிக்காகவும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பெண்கள் விடுதி அமைப்பு வேலைகளுக்காகவும், சிவத்தமிழ்ச் செல்வி கல்வி நிதியத்தின் சார்பான வறுமை நிலையில் உள்ள மாணவர்களுக்கான கல்வி நிதி உதவி வழங்குதல், பல்வேறு பிரிவினர்க்கும் விருது வழங்கிக் கௌரவித்தல் என பலவிதமான நிகழ்வுகளும் அறக்கொடை வழங்கும் விழாவில் இடம்பெற உள்ளது.

சிவத்தமிழ்ச் செல்வி வாழ்ந்து காட்டிய தூய வாழ்க்கை முறையினை நாமும் பின்பற்றி வாழ்ந்திடுவோம். அவர்கள் ஆரம்பித்து வைத்த அறநிலையங்கள் அனைத்தும் உலகம் உள்ளவரை அவர் பெயரை உச்சரித்தபடியே இருக்கும். வாழ்க அன்னையின் புகழ். வளர்க அவர் ஸ்தாபித்த அறநிலையங்களின் பணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருக்கேதீஸ்வரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் கலாசார மண்டபத்தின்

# கோலாகலத் திறப்புவிழா

**27-01-2013**

**ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணி**

சைவத்தமிழ் இந்து மக்களின் பண்பாட்டு நலன் கருதிப் புதிய கலாசார மண்டபம் உதயமாகிறது. 36 மகான்களின் ஞான சிரேஷ்டர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு பூஜைகள், பிரார்த்தனைகள், கலை நிகழ்ச்சிகள், மங்கல மாங்கல்ய நிகழ்வுகள் என்பனவற்றை நடாத்த வசதிகள் உள்ளன. யாத்திரிகர்கள் தங்குவதற்கான பொது மண்டபத்துடன் இணைந்த வசதிகளுடனான குளியலறைகள் அமைக்கப்பட்டுள்ளன.




*கலாசார மண்டபத் திறப்புவிழாவன்று மதியபோசனம் வழங்கப்படும்.*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

சி. தியாகராசா (S.T.R.)

த. துரைராசா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் தை மலரில்...

1. இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வைத்திலிங்கம்பிள்ளை இயற்றிய சந்நிதி முருகன் திருப்பள்ளியெழுச்சி.

2. காளமேகப் புலவரின் கவிநயம்மிக்க பாடல்கள்.

இன்னும் பல புதிய அம்சங்களுடன்
ஞானச்சுடர் 2013 - தைமலர் வெளியாகும்.

# கட்டுரையாளர் கவனத்திற்கு.....

தயவு செய்து;

1. தங்களது ஆக்கங்களை தெளிவான கையெழுத்திலோ அல்லது கணனியிற் தட்டச்சு செய்தோ அனுப்பவும்.
2. தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதவும். அல்லது தட்டச்சு செய்யவும்.
3. தங்கள் ஆக்கங்களுடன் தொலைபேசி இலக்கம், விலாசம் ஆகியவற்றைத் தவறாது குறிப்பிடவும்.

-பேரவையினர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமம்
# திருவாசக விழா
# பண்ணிசைப்போட்டி முடிவுகள் 2012

திருவாசக விழாவின் முக்கியமான அம்சமான பண்ணிசைப் போட்டி 10.12.2012 திங்களன்று ஆச்சிரம வளாகத்தில் நடைபெற்றது. 21.10.2012 வெள்ளியன்று நடைபெற்ற திருவாசக விழாவில் வெற்றிபெற்ற மாணவ மாணவியருக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. விபரம் கீழே.

**கீழ்ப்பிரிவு**

1. செல்வி கருணாகரன் கேனுகா (யா/ அராலி சரஸ்வதி ம.வி)
2. செல்வி யோகராசா டிவின்சியா (யா/ பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்)
3. சத்திவேல் அபிராமி (யா/ வடமராட்சி இந்து பெண்கள் கல்லூரி

**மத்தியபிரிவு**

1. திருச்செல்வன் சுபாஷ் (யா/ பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்)
2. இ. ரஸ்மினி (யா/ ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்)

**மேற்பிரிவு**

1. பரமேஸ்வரன் கௌரீசன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
2. ரவிச்சந்திரன் ஸகிஷ்னா (யா/ வேம்படி மகளிர் கல்லூரி)

3.1. செல்வி காயத்திரி கணேசமூர்த்தி (யா/ விக்னேஸ்வரா கல்லூரி- கரவெட்டி)

3.2. சிவகுமார் சங்கவி (யா/ வடமராட்சி இந்து பெண்கள் பாடசாலை)

**ஆறுதல் பரிசு பெறுவோர்**

க. அபிஷா, சு. சுதர்ஸன், இ. பபிஷா (யா/ ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்)

செ. கம்சலா, ச. வைஷ்ணவி, நா. சுயந்தினி (யா/ வட. இந்து பெண்கள் பாடசாலை பருத்)

பா. பிரியா (யா/ பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்)


ஊழ் கெட்டவரை இழுத்துச் செல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமனின் பெருமை

செல்வி யோகராஜா இந்துஜா



இந்து மதத்தில் ஸ்ரீ ராம பக்த அனுமனை அறியாதவர் இல்லை. சைவத்தில் பிள்ளையார் போல வைணவத்தில் அனுமார் என்று கூடச் சொல்லலாம்.

"புத்தீர் பலம் யசோ தைர்யம்
-நிர்பயத்வம் - அரோகதா!
அஜாட்யம் வாக்- படுத்வம் ச
-ஹனுமத் ஸ்மரணாத் பவதே"
என்று கூறுவர்.

புத்தி, பலம், புகழ், உறுதி, துணிவு, கவனம், ஆரோக்யம், சொல்வன்மை என எல்லாம் சேர்ந்து அமைந்த அனுமனை வழிபட்டால் அவற்றை நாமும் அடையலாம். ஸ்ரீமத் நாராயணனுக்கு இரண்டு பேரைத் திருவடிகள் என்பர். பெரிய திருவடி கருடர், இரண்டாவதான சிறிய திருவடிதான் ஸ்ரீ அனுமான். இவர் இராமாவதாரத்தில் கைங்கரியத்தைச் சிறப்பாக உணர்த்திய ஆச்சாரியர். எந்தவிதப் பிரதிபலனையும் எதிர்பாராமல் இராமபிரானுக்கு குற்றேவல் புரிந்தார். "இராமனடிமை" என்ற பதவியையே பெரிதும் வகித்துக்கொள்ள விரும்பினார். அன்னை ஜானகி வழங்கிய பரிசையும் ஸ்ரீ இராமன் உள்ளாரா" எனப் பகிர்ந்து பார்த்தவர். தன் நெஞ்சைப் பிளந்து "ஸ்ரீ இராமன் இருப்பதை அனைவருக்கும் காட்டியவரும் இவரே. இராமபிரானே மோட்ச உலகிற்கு அழைத்த போதும் மறுத்துவிட்டு இராமநாமச் சிறப்பிலேயே ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தவர். இராம காவியத்தில் அதிகம் உழைத்தவரும் அனுமனே, அதிகத் திறமைசாலியும் அனுமனே, பெரும்பெரும் சாதனைகளைப் புரிந்தவரும் அனுமனே! ஆனால் இராமனிடமிருந்து எந்தப் பலனையும் எதிர்பாராதவரும் அனுமனே! இராமனுக்குத் தொண்டு செய்ய பந்தப்பட்டிராத போதிலும் பிரேமையின் காரணமாகவே அடிமை செய்யப்புகுந்தவரும் அனுமான்தான். அனுமானுக்கு செயலெல்லாம் இராம காரியமே. அதனாலேயே நாரதர் போல மிகச் சில ரிஷிகள்போல என்றும் மரணத்தை வென்று இருக்கும் நிலையை எய்தியவர் அனுமனே ஆவார்.

ஸ்ரீ அனுமனை உருத்திரனின் அம்சம் என்பர். மோட்சத்திற்கான ஞானத்தைத் தரும் தட்சணாமூர்த்தியான சிவன், ஜீவர்களுக்கு பரமாத்ம அறிவைத்தரும் ஆச்சாரிய இடத்தில் அனுமனாக சகல கலைகளும் உணர்ந்தவனாக அவதரித்தார். குந்திதேவிபோல, அஞ்சனாதேவியும் ருத்திர மந்திரத்தை உச்சரிக்கவே ருத்திராம்சமாக அனுமன் பிறந்தார் என்பர். ருத்திர வீர்யம் வாயுவால் சுமக்கப்பட்டு அஞ்சனையை அடைந்ததால் "வாயுபுத்திரன்" என்றும் கூறுவர். அனுமன் சிறுவயதில் பழம் என நினைத்து இளஞ் சூரியனையே விழுங்கச் சென்ற வீரயவான். சிறுவயதுக் குறும்புகளால் முனிவர்கள் சாபத்திற்குள்ளாகி தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வலிமையைத் தானே அறியாமல் இருந்தார். இராமகாரியமாக சீதையைத் தேடச் செல்லும்போதே ஜாம்பவான் எடுத்துக்கூற எல்லாம் மீட்டுணரப் பெற்றார். சுக்ரீவனுடன் இருந்த அனுமனை "வில்லும் அம்பும் கொண்டு வரும் வீரர்கள் எவர் என்று அறிந்து வா" என்றான் சுக்ரீவன். ஓர் அந்தணர் வேடம் தரித்த அனுமான் (அப்போதும் இயற்கைக் குணத்தை விடாமற் தாவித் தாவி வந்தான் என்றார்- வால்மீகி) இராம- லட்சுமணர்களிடம் வந்து பேசினான். முதல் பேச்சிலேயே அவனை, அவனது சாமர்த்தியத்தை உணர்ந்து கொண்ட இராமர் "இவனிடம் (அனுமனிடம்) தவறின்றிப் பேசுங்கள், இவன் நான்கு வேதமுமுணர்ந்த பண்டிதன்" என்றார். அத்தோடு "அனும" என்று அன்பொழுக அழைத்த முதலே ஸ்ரீ இராமனின் அடிமையாகி விட்டான் அனுமன் என்று கூறப்படுகின்றது.

"திரிநேத்திர தசபுஜ அனுமன்" எனப்படும் எம்பெருமானின் வடிவம் செப்புப் படிவமாக உள்ளது. முக்கண் அனுமன் சிவ- விஷ்ணு அம்சமானவர். எம்பெருமானின் சிவ அம்சமான நெற்றிக்கண், மான், மழு, விஷ்ணுவின் சங்கு, சக்கரம், வில், வாள், இந்திரனின் வக்ராயுதம், கேடயம், யமனுடைய பாசம், சூலம் ஆகியவற்றையும் காணலாம். அனுமனிடம் எல்லா தெய்வ சக்திகளும் அடக்கம் என்பதையே- ஆனந்த மங்கலத்து அனுமன் விக்கிரகம் உணர்த்துகிறது. அனுமன் உபாசனை ஈடுஇணையற்றது என்பதையும் இது சொல்லாமல் சொல்கின்றதல்லவா? கல்லிலும், செப்பிலும் மட்டுமன்றி மரத்திலும்கூட அனுமன் வடிவங்களைக் காணலாம். அனுமனுக்கு ஐந்து முகங்கள் இருக்கின்றன. அனுமனது முகத்தைவிட மற்றை நான்கு முகங்களும் வராகர், வாமனர், ஹயக்ரீவர், ராமர் முகங்களாக உள்ளன. அத்துடன் பன்னிரண்டு கரங்கள் காணப்படும். அதிலே விதவிதமான ஆயுதங்களையும் கொண்டிருப்பர். அனுமன் வடிவங்கள் பொதுவாக "வீர ஆஞ்சநேயர்", "பக்த ஆஞ்சநேயர்" என இரு வகைப்படும். ஸ்ரீ ராமனை வழிபடுபவர்கள் அனுமனிடமும் பக்திகொண்டு உபாசிக்கவில்லை என்றால் அவர்களுக்குப் பலனில்லை என்றும் கூறுவர். ராம என்பது ர+அ+ம என்பதாக மூன்று அட்சரங்களின் கூட்டேயாகும். அனைத்து சுலோகங்களை விடவும் இந்த "ராம" நாமத்திற்கு எடை அதிகம் எனக் கூறலாம்.

ர,அ,ம என்கிற மூன்று அட்சரங்களில்

"ர" என்பது அக்கினி பீஜம்.

"அ" என்பது சூரிய பீஜம்.

"ம" என்பது சந்திர பீஜம் என்றும், மேலும் "ர" என்கிற அட்சரத்தை சுத்தமாக உள்ளுக்குள்ளே உச்சரிப்பதன்மூலம், அக்னி பீஜமான அந்த அட்சரம் நம் பாவங்களை எரிக்கின்றது. இவ்வாறே, "அ" எனும் சூரிய பீஜம் நமது அஞ்ஞான இருளை விரட்டி ஞான ஒளியைப் பாய்ச்சுகின்றது. "ம" என்கிற சந்திர பீஜம் நமது தாபங்களை நீக்கி அன்பைத் தண்ணெனப் பொழிகின்றது. மேலும் "ர" வினால் பாவம் எரிகின்றபோது கர்மங்கள் அழிந்து "ஸத்" ஆகின்றோம். "அ" வினால் ஞான ஒளியில் நம்மை நாமே அறிந்து "சித்" ஆகின்றோம். "ம" வினால் சந்திரிகையில் தாபம் தீர்ந்து "ஆனந்தம்" ஆகின்றோம். இவ்வாறு "ராம நாமம்" சச்சிதானந்தம் நல்குவதாக அமைகின்றது.

மேலும் வைணவ சம்பிரதாயம் அறிந்த பெரியோர்கள் இராமாயண பாராயணம் செய்யும் நேரத்தில் அங்கு அனுமனுக்கென்று ஓர் ஆசனம் வைத்து மானசீகமாக அனுமனை அங்கே அமர்த்திய பிறகே தம் பாராயணத்தை தொடங்குவார்கள். எங்கெல்லாம் ராமகதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகிறதோ அங்கெல்லாம் நான் ராம சரிதத்தைக் கேட்டுக் காத்துக் கொண்டிருக்கிறேன் என்று அனுமன் கூறியதாகக் கூறப்பட்டுள்ளது. துன்பத்தில் உதவுவதும் தீய சக்திகளை அழித்து பயத்தைப் போக்குவதும் அனுமனின் தொண்டு என்பதால் பக்தர்கள் அனுமனைப் பாராயணம் செய்வது நலமாகும். அவர் திருஉருவச்சிலை, படங்களை வழிபடும்போது ஸ்ரீ இராம பட்டாபிஷேகப் படம் முதலியவற்றில் இராமரோடு உள்ள படங்களே மிகவும் சிறப்பானவையாகும். அனுமரைத் தனியே தொழுவதை தன்னை ராம பக்தர் எனக் கூறிக்கொள்ளும் அவரே விரும்பமாட்டார் என்ற கொள்கையும் உண்டு. மேலும் மார்கழியில் அமாவாசையோடு சேர்ந்த மூல நட்சத்திரத்தில் வரும் நாளில் ஆஞ்சநேயர் அவதரித்தார். அன்று அவரது பாராயணம் தொடங்குதல் நலம். அத்துடன் ஸ்ரீ ராம நவமி, கேட்டை நட்சத்திர நாள், புதன், வியாழன், சனிக்கிழமைகளும் சிறப்பானவையே. துளசி, வெற்றிலை மாலைகள் இவருக்கு ஏற்ற மாலைகள் ஆகும். வெண்ணெய், வடைமாலை அவருக்கு விருப்பமான நைவேத்தியப் பொருட்களாகும்.

கலியில் பிரத்யட்ச தெய்வமாக விளங்கும் அனுமன் உபாசனைக்குரிய கருணைத் தேவன். அன்புக்கும், தொண்டுக்கும், வீரத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் அனுமனை உபாசிப்பதன்மூலம் இகபர சுகங்கள் கிட்டுவதைப் பெரியோர்கள் எடுத்துரைக்கின்றனர். ஏழரை நாட்டுச் சனியன் தொல்லை, அவதூறு, பயம், பில்லி, சூனிய உபாதைகள் போன்ற அல்லல்களுக்கு மருந்து அனுமன் உபாசனை:-

"அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்றாறாக ஆருயிர் காக்க ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவனெம்மை அளித்துக் காப்பான்"

(கம்பர்)

என்று கூறுகின்றது.

இவ்வாறு பஞ்சபூதங்களில் ஒன்றான வாயுபகவானின் பிள்ளையும், மும்மூர்த்திகளின் அருள் பெற்றவரும், மும்மூர்த்திகளில் ஒருவரான சிவபெருமானின் மூன்றாவது கண் பெற்றவரும், யாராலும், எப்பொருளாலும் அழிவு கிடையாது என எல்லோராலும் அருள் பெற்றவரும், ஸ்ரீமத் நாராயணனின் அவதாரத்தில் ஏழாவது அவதாரமான ஸ்ரீராம அவதாரத்திலே- "ராமனின் தாசனாக" இருந்து இராம காரியங்களை முறைப்படி செய்து வந்ததால் ஸ்ரீராம பிரானின் அருள் பெற்று "சிரஞ்சீவி" ஆனவருமான ஸ்ரீ ஆஞ்சநேயரை மனமார வணங்குபவர்களுக்கு தோஷம், பாவம், கஷ்டம், துன்பம் நீங்கி இவ்வுலகில் சௌபாக்கியர்களாக வாழ என்றும் துணை இருப்பார். ஆகவே ஆஞ்சநேய பெருமானை உள்ளன்புடன் தூய்மையாக வணங்கி என்றும் ஆஞ்சநேயரின் அருளைப் பெறுவோமாக.

ஓம் ஸ்ரீ ஆஞ்சநேய நமாய!
ஓம் ஸ்ரீ வாயுபுத்ர நமாய!!
ஓம் ஸ்ரீ ராம தூதாய நமாய!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணம் கூறும் தத்துவம்

செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள்

புராணங்களுள் சிறந்தது கந்தபுராணம். ஏன்? முருகப்பெருமான் அடியெடுத்துக் கொடுக்க கச்சியப்ப சுவாமிகள் பாடியது. அல்லாமலும் அவர் பாடிய பாடல் எழுத்து, சொல், கருத்துப் பிழைகளை முருகப்பெருமானே திருத்திச் சரிபார்த்த நூல். ஆகவே இது ஒரு தெய்வீக நூல்.

"கந்தபுராணம், அதியற்புத அதிமதுரச் செந்தமிழ்நூல்" என ஆறுமுகநாவலர் கூறியுள்ளார். கந்தபுராணம் சைவ சித்தாந்தக்கருத்துக்களை உள்ளடக்கியது. ஜீவாத்மாக்களில் உள்ள மும்மலங்கள் திருவருளின் துணைகொண்டு நீக்கப்பெற்று இறுதியாக இறைவனைச் சரணடைந்து ஆட்கொள்ளப்படுவதையே எடுத்துச் சொல்கிறது.

கந்தபுராணம் கூறுவது என்ன? திருவருளுக்கும் ஆணவத்துக்கும் இடையேயான சமர். முருகன்- திருவருள்; சூரன் முதலாய மூவர் மும்மலங்கள். கந்தபுராண ஆசிரியர், சூரன்- ஆணவம், சிங்கமுகன்- கன்மம், தாரகன்- மாயை எனக்குறிப்பிடுகிறார். ஆன்மா திருவருளை அடைய மாயை அகல வேண்டும். அடுத்து கன்மம் தொலைய வேண்டும். முருகன், சிங்கன் (கன்மம்) தாரகன் (மாயை) இருவரையும் வென்றுவிட்டார். எஞ்சியது ஆணவமே வடிவாய சூரன். அவனை அழிக்க வேண்டும். அசுரனை அழிக்கவெனத் தோன்றியவன் முருகன். சிவனார் தந்த ஆயுதம் வேல். அந்த வேலாயுதமே சூரனை அழிக்கப் போகிறது. ஆணவம் அழியாதது. சூரன் அழியா வரம் பெற்றவன். ஆகவே அவனின் வலிமையை (ஆணவத்தை அடக்க) வேண்டும். சூரனைச் சங்கரிக்கத் திருவுளங் கொண்டார் முருகப்பெருமான். சகாவரம் பெற்ற சூரபன்மன் மிகத் திறமையாகவே போரில் நின்றான். முருகப்பெருமானும் தன்னிடமுள்ள ஆயுதங்களை உபயோகித்து அசுரப் படைகளை அழித்தார். தனியனானான் சூரன். பல மாய வடிவங்கள் கொண்டான்; கடலில் ஒழித்தான். சூரனின் வலிமை குறைவதை உணர்ந்தார் முருகன். தன்வடிவை சற்றே காட்டினார். பணிந்துபோக விரும்பியும் மானம் தடுத்தது. மீண்டும் மாமரமாக முளைத்து வளர்கின்றான். முருகன் கைவேல் மாமரத்தை இரு கூறாக்கியது. மயிலும் சேவலுமாக மாறினான். மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் தனதாக்கிக் கொண்டார் முருகன். சூரன் அழியவில்லை.

சூரனாகிய ஆணவமலம் "வலிமை இழந்தநிலைதான்" சேவலும் மயிலுமாக முருகக் கடவுளை சரணடைந்துள்ளான். இங்கு சேவல் மயில் இரண்டும் நாதம் விந்துவாக காட்டப்படுகிறது.

அன்னை ஈந்த வேலினால், மாயமாக கிரௌஞ்ச மலையைத் தோற்றுவித்து அதன் பின்னே மறைந்து நின்றபோது கிரௌஞ்சமலையையே பொடிப் பொடியாக்கி தாரகனை அழித்தார் முருகப்பெருமான். இது ஆன்மாவில் எஞ்சி நின்ற சஞ்சித வினையைக் குறிக்கிறது.

ஞானவேல் எதனைக் குறிக்கிறது? இது முருகனின் ஞானசக்தி. அசுரர்களை அழித்து தேவர்களைக் காப்பதற்கு சிவன் கொடுத்தது. ஞானம் என்றால் அறிவு. அறிவு ஆழமானது; அகலமானது; கூர்மையானது. வேலின் அடிப்பகுதி ஆழமானது; இடைப்பகுதி அகலமானது; நுனிப்பகுதி கூர்மையானது. வேலுக்கு சமமான ஆயுதம் வேறில்லை.

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை”

ஆகவே நாம் எல்லோரும் முருகன் கைவேலை வணங்கி உய்தி பெறுவோம்.

வள்ளி தேவயானை திருமண தத்துவம் ஞானவடிவினனாகிய முருகனுக்கு இரு சக்திகளுண்டு. கிரியா சக்தி, இச்சா சக்தி; கிரியையைத் தூண்டுபவள் தேவயானை; இச்சையைத் தருபவள் வள்ளி. யாகாதி கிரியைகளைச் செய்வது கருமமார்க்கம். தேவயானையுடையது கற்பு மணம்; வள்ளிக்குரியது காதல் மணம். அசுரர்களை வென்று தேவர்களைக் காத்தமைக்கு பிரதியுபகாரமாக இந்திரன் தன் மகள் தேவயானையை யாகாக்கினி வளர்த்து அக்கினி சாட்சியாக தேவர்கள் மூவர்கள் காண முருகப்பெருமானுக்குக் கன்னிகாதானம் செய்து வைத்தான். இ∴து கிரியை வழி. பக்தர்கள் இறைவனைத் தேடிச்செல்லும் தத்துவம்

வேடுவ குலத்தில் பிறந்து வளர்ந்தவள் வள்ளி. ஏதும் செய்வது அறியாமல் முருகனையே நினைந்து பக்தி கொண்டவள். இது இச்சா மார்க்கம். வள்ளி தினைப்புனத்தில் பரண்மீது இருந்து காவல் புரிகிறாள். வள்ளியின் பக்குவ நிலையைக் கண்ட முருகன் வள்ளிக்கு அருள்புரிய திருவுளங் கொண்டார். வேட்டுருவம் கொண்டு வள்ளியை அணுகினார். வேடர் தலைவன் நம்பிராசன் வருகிறான். முருகன் வேங்கை மரமாக மாறினார். நம்பிராசன் போனதும் மீண்டும் வள்ளியை அணுகினார் கிழவடிவம் தாங்கி. முதியவர் பால் மனம் ஈர்க்க தேனும் தினைமாவும் தருகிறாள். பருக நீர் வேண்டும் வள்ளியைக் கவர இதுதான் சமயம் என்றெண்ணி நந்நீர்ச் சுனையைக் காட்டுமாறு அழைத்தார். முருகன் அண்ணன் விநாயகரை எண்ண, யானை ஒன்று எதிர்வரவே வள்ளி அதுகண்டு பயந்து முதியவரைத் தழுவிக் கொண்டாள். முருகன் தன் வடிவம் காட்டி, “உரிய நேரம் வருவேன்” எனக் கூறினார்.

தினைப்புனம் காவல் முடிந்தது. ஒரு நாள் இரவு யாரும் அறியாமல் வள்ளியைக் கூட்டிச்செல்ல, நம்பிராசன் முருகனை எதிர்த்துப் போரிட முருகன் தன்வடிவம் காட்டினார். நம்பிராசன் முருகன் திருவடிகளைப் பணிந்தான். பெருமான் வள்ளிநாயகியோடு நீலமயில் வாகனத்தில் நம்பிராசனுக்கு காட்சி தந்தார். சிவன், பார்வதி, தேவர்மூவர் காண நம்பிராசன் திருமண விழாவை நடாத்தி வைத்தான்.

வள்ளி முருகன்மீது பக்தி வைத்தாள். ஆனால் தேடிப்போகவில்லை. முருகப்பெருமானே வலிய வந்து ஆட்கொண்டார். வள்ளி பக்குவப்பட்ட ஆன்மா. முருகன் திருவருள். யாரும் அறியாமல் மனம் ஒன்றி நடந்தது வள்ளியின் களவு மணம். இப்போ முருகன் தேவயானை வள்ளி சமேதராகக் காட்சி தருகிறார்.

படிக்கப் படிக்க இனிமையான காவியம் கந்தபுராணம். அவசர உலகில் ஓயாத உழைப்பு; கண்கவர் களியாட்டம் கடவுளை நினைக்க நேரம் இல்லாவிடினும், கந்தசஷ்டி, ஐப்பசி வெள்ளி, தைப்பூசம் என்றால் முருகன் எண்ணம் வரும். அப்போதாவது சஷ்டிகவசம், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, கந்தபுராணம் முதலியவற்றைப் படித்தும் புராண படனங்களை பக்தியோடும் கேட்பதால் முருகன் அருள் பெறலாம். நிச்சயம் பலன் உண்டு.

“இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்றினிது மேவி
சிந்தையில் நினைந்தமுற்றிச் சிவகதியதனில் சேர்வர்
அந்தமில் அவுணர்தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந்தன்னைக் காதலித் தோதுவாரே”



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருக்கோலக்கா

-வல்வையூர் அப்பாண்ணா-

அன்னை அகிலாண்டேஸ்வரி ஊட்டிய ஞானப்பாலைப் பருகி, ஊறிய தமிழ்ப் பெருக்கால் திருஞானசம்பந்தர் உலகம் வியக்கும் தேவாரப் பாடலைத் "தோடுடைய செவியன்..." எனப் பாடத் தொடங்கினார். அன்றிரவு தோணியப்பரின் நினைவுடனேயே தூங்கிப்போன ஞானசம்பந்தக் குழந்தை மறுநாள் விடிந்ததும் திருக்கோயில் சென்று தோணியப்பரை வணங்கினார். இறைவன் திருவருள் உந்த அருகிலேயே உள்ள "திருக்கோலக்கா" செல்ல வேண்டும் என்கிற ஆசை எழுந்தது. திருக்கோலக்கா திருஞானசம்பந்தப் பெருமானின் திருத்தல யாத்திரையில் முதல் ஸ்தலமாகும். காவிரியின் வடகரை ஸ்தலங்களில் ஒன்றான கோலக்கா சீர்காழியிலிருந்து 1கி.மீ. தூரத்தில் உள்ளது. இத்திருக்கோயில் "திருத்தாள முடையார் கோயில்" என விசேடமாக அழைக்கப்படுகிறது. சிந்திப்பதற்கு முன்பாகவே கோலக்கா வந்துவிட்டது. இயற்கை எழில் கொஞ்சும் கிராமம். ஓலையால் வேயப்பட்ட வீட்டின் வாயில்கள் அனைத்தும் கூட்டிப் பெருக்கி அழகிய கோலமிட்டு இருந்தமை பார்க்கப் பரவசப்படுத்தியது. ஆடும், மாடும், சாணமும், வைக்கோற் போரும் என நாறுவீதமும் சுத்தமான கிராமத்து வாசனை வீசியது.

பெருக்கு ஓலிட்டு அலைபிறங்கும் காவிரிநீர்
பிரச மலர் தரளம் சிந்த
வரிக்கோல வண்டாட, மாதரார்
குடைந்து ஆடும் மணிநீர் வாவித்
திருக்கோலக்கா......

என இந்த ஊரைப்பற்றி சேக்கிழார் பெருமான் விபரிக்கிறார். திருஞானசம்பந்தர் திருக்கோலக்கா வந்து சேர்ந்தார். சப்தபுரீஸ்வரர், தாளேஸ்வரர், திருத்தாளமுடையார் என்றெல்லாம் அழைக்கப்படுகின்ற விடையேறு நாயகனைத் தரிசித்தார். கைத்தாளமிட்டுக் கொண்டே பாடத் தொடங்குகிறார்.

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்காவுளான்
சடையும் பிறையும் சாம்பல் பூச்சும்கீழ்
உடையும் கொண்ட உருவம் என் கொலோ

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழலார் கோலக்காவுள் எம்
அடிகள் பாதம் அடைந்து வாழ்மினே

சீர்காழிக் கொழுந்து பாடப்பாட, பிஞ்சுக் கரங்கள் தாளம் போட, ஆண்டவனின் அன்புப் பிள்ளையின் அம்புஜக் கரங்கள் தாள வேகத்தில் சிவந்துபோயின. இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்துணை நேரம்தான் பொறுத்திருப்பான் பரமேஸ்வரன். அவன் அருளாலே அஞ்செழுத்து (நமசிவாய) எழுதப்பெற்ற பொன்னாலான தாளம் பிஞ்சுக் கரங்களில் வந்தமர்ந்தது. தலைமீது தாளத்தை வைத்து வணங்கிய திருஞானசம்பந்தர் மீண்டும் தாளத்தைக் கைகளில் எடுத்து, அதைத் தட்டினார். பரமனார் தாளம் கொடுக்க, அம்பிகை அத்தாளத்திற்கு ஏற்ப ஒலியும் ஓசையும் கொடுக்கக் கணீரென தாளம் ஒலியெழுப்பியது. இந்த அதிசயத்தைப் பார்த்திருந்த அனைவரும் வியப்புற்றனர். வானவர் பூமாரி பொழிந்தனர். தாளம் கிடைத்த அந்த அற்புத நிகழ்சியினை சேக்கிழார் இவ்வாறு கூறுகிறார்.

கையதனால் ஒத்தறுத்துப் பாடுதலுங் கண்டருளிக் கருணை கூர்ந்த
செய்யசடை வானவர்தம் அஞ்செழுத்தும் எழுதியநற் செப்பொற்றாளம்
ஐயரவர் திருவருளால் எடுத்தபா டலுக்கிசைந்த அளவால் ஒத்த
வையமெலாம் உய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து வந்த தன்றே

ஞானக்குழந்தையின் திருப்பாதங்கள் ஸ்பரிசித்த "திருக்கோலக்கா" மண்ணில் நாமும் தயங்கியபடியே காலடி வைத்து, தாளம் பெற்ற அதிசய நிகழ்ச்சியினை மனதில் நிறுத்தி கோயில் வாசலுக்கு வருகிறோம். "ஆனந்த தீர்த்தம்" எனப்படுகின்ற ஸ்தல தீர்த்தக்குளம் கோயில் எதிரே உள்ளது. அண்மையில் திருப்பணி வேலைகள் நடந்து முடிந்து கோயில் புதுப்பொலிவு பெற்றிருப்பது தெரிகிறது. வாசற் கோபுரம் இல்லையாயினும், கோபுரத்தைத் தாங்கி நிற்க வேண்டிய கனத்த வாயிற் கட்டமைப்புக்கு மேலாக கிழக்குப் பார்த்தபடியான ஏழு கலசங்கள் உள்ள முகப்பு வாசல் உள்ளது. அந்த வாசலில் மூன்று சுதைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. நடுவே- இடபாரூடராக சிவனும், அம்பிகையும்; வலப்புறம்- பொற்றாளம் வழங்க சம்பந்தக் குழந்தை தன் பிஞ்சுக் கரங்களால் அதனைப் பெற்றுக்கொள்வது; இடதுபுறம்- இறையனார் வழங்கிய அத்திருத்தாளத்தினைத் தொட்டு அம்பிகை ஒலியும், ஓசையும் கொடுப்பது. இரு கரம்கூப்பி இடபாரூடரைத் தொழுது உள்ளே போனால் அருகே ஒரு கிணறு. இரண்டு பக்கங்களிலும் உள்ள சில கட்டிடங்களில் வலது பக்கக் கட்டிடம் ஒன்றில் வாகனங்கள் வைக்கப்பட்டிருப்பது தெரிகிறது.

அடுத்த இன்னொரு வாசல் முகப்பு சற்றே பழமையானது. (இதிலும் கோபுரம் இல்லை) ஒரு காலத்தில் இதுவே கோயிலின் பிரதான வாசலாக இருந்திருக்கலாம். இந்த வாசல் வழியாக உட்புகுந்து கிழக்காக வலம்வர சந்திரன், தேவார மூவர் உள்ளனர். தென்சுற்றின் ஆரம்ப மூலையில் ஒரு சிவலிங்கம் எதிரே ஒரு அதிகார நந்தியும் காணப்படுகிறது. இதன்பின்னர் இக்கோயிலின் அமைப்பு சற்றே வித்தியாசமாக உள்ளது. தெற்குச் சுற்றிலிருந்து மூலவர் சந்நிதிக்கு போவதற்கான ஒரு வாயில் தென்படுகிறது. அந்த உட்பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் விநாயகர், சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர் என வரிசையாகப் பிரகார மூர்த்தங்கள் உள்ளன. வடக்குச் சுற்றின் முக்கால்வாசி நீளத்திற்குச் சந்நிதிகள் எதுவுமில்லை. வடகிழக்கு மூலைக்கு அருகில் சனிபகவானுக்குத் தனியாக ஒரு சந்நிதி காணப்படுகிறது. அதே மூலையில் சுவாமியின் தீர்த்தக் கிணறு உள்ளது. மீண்டும் கிழக்குச் சுற்றில் வைரவரையும் சூரியனையும் வணங்கி கருவறையை நோக்கிச் செல்கிறோம். பெரிய மண்டபம், மண்டபத்தில் ஒரு பக்கமாக வைக்கப்பட்டுள்ள உற்சவத் திருமேனிகளில், தாளத்தைக் கையிலேந்தியபடி உள்ள திருஞானசம்பந்தரின் உற்சவத் திருமேனி அழகாகவும், அற்புதமாகவும் உள்ளது. தவறாது பார்க்கவேண்டியது அது. அருகே சீகாழியில் சித்திரைப் பெருவிழாவின் இரண்டாம் நாளில் "திருமுலைப்பால் விழா" நடக்கும்போது, இங்கே திருக்கோலக்காவில் "தாளம் தருகிற விழா"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுகிறது. வலதுபக்கத்தில் நடராஜர் சபை உள்ளது. நடராஜர் சபைக்கு முன்பாக நின்றபடி கருவறையின் உட்புறத்தை நோக்குகிறோம். அங்கே, சப்தபுரீஸ்வரர் எனும் அருள்மிகு திருத்தாளமுடையாரின் கம்பீர கொலுவிருப்பு கண்ணெதிரே தெரிகிறது. திருஞானசம்பந்தருக்குத் திருத்தாளம் கொடுத்ததால் "திருத்தாளமுடையார்" எனும் திருநாமம் பெற்றார். சதுர ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கத் திருமேனி சற்றே குள்ளமான தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் நிறைந்த பொலிவுடன் காட்சி தருகிறது.

இறைவன் சுந்தரரைத் திருவாரூருக்கு வரும்படிகூற, தில்லையிலிருந்து புறப்பட்ட சுந்தரர் சீர்காழி நகரை அண்மிக்கிறார். சீர்காழி சம்பந்தரின் அவதார ஸ்தலம் என்பதால் சீர்காழி மண்ணைத் தம் காலால் மிதிக்க அஞ்சி ஊரைச் சுற்றி வந்து தோணியப்பரை வணங்கிக்கொண்டு திருக்கோலக்காவினை அடைகிறார். திருக்கோலக்காவில் சம்பந்தருக்குப் பொற்றாளம் கொடுத்த ஈசனைச் சுந்தரர் பாடித் துதிக்கும் பாங்கினைப் பாருங்கள்.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பு
ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக்கு இரங்கும்
தன்மையாளனை என் மனக்கருத்தை
ஆளும் பூதங்கள் பாட நின்றாடும்
அங்கணன் தனை எண்கணம் இறைஞ்சும்
கோளிலிப் பெரும் கோயிலுளானைக்
கோலக்காவினில் கண்டு கொண்டேனே.

திருத்தாளமுடையாரைப் பணிந்து வணங்கி கோஷ்ட மூர்த்தங்களின் தரிசனத்திற்காக மீண்டும் ஒருமுறை பிரகாரத்தை வலம் வருகிறோம். விநாயகர், தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை என வரிசையாக கோஷ்ட மூர்த்தங்களைத் தரிசிக்கிறோம். பிரம்மா தலைப்பக்கமும், விஷ்ணு கால் பக்கமும் நிற்கும் லிங்கோற்பவரின் புதுமையான தோற்றம் வித்தியாசமாகவும் அருமையாகவும் இருக்கிறது. தாளேஸ்வரரான திருத்தாளமுடையாரை வணங்கித் திரும்பியபோது, அர்ச்சகர் நம்மை வழிமறித்து நிற்கும்படி பணிக்கிறார். கையில் ஒரு தாளத்தைக் கொண்டுவந்து எமக்குக் காண்பித்து விபரம் கூறுகிறார். "1970இல் நடந்தது இந்தச் சம்பவம். தன் ஊமை மகன் பேசும் சக்திபெற வேண்டும் என ஒரு தாயானவள் நேர்ந்து கொண்டாள். மகனும் சில நாட்களிலேயே பேசத் தொடங்க, 42 கிராம் சுத்த பவுணினால் செய்யப்பட்ட தாளத்தைக் கோயிலுக்குக் கொடுத்துள்ளார்" என்கிறார் அர்ச்சகர். ஆண்டவன் கிருபையை எண்ணி வியந்ததுடன், அர்ச்சகருக்கு நன்றிகூறி அம்பாள் சந்நிதி நோக்கி நகருகிறோம்.

தாளேஸ்வரரான திருத்தாளமுடையாரை வணங்கி, அம்மன் சந்நிதிப்பக்கம் வருகிறோம். இறைவனுக்கு இடதுபுறமாக கிழக்குப் பார்த்த திசையில் அம்பாள் சந்நிதி அமைந்துள்ளது. சிறிய முன் மண்டபத்தில் வலதுபக்கம் பள்ளியறை காணப்படுகிறது. நின்ற திருக்கோலத்தில் அருள் வழங்கும் அம்பிகைக்கு அருள்மிகு தொனிப்பிரதாம்பாள் என்பது வடமொழித் திருநாமம். அதையே தமிழில் "ஓசை கொடுத்த திருநாயகி" என்கிறார்கள். அம்பிகையின் அழகும் பொலிவும் உள்ளத்தைக் கவருகின்றன.

நன்கு பராமரிக்கப்பட்டு வரும் இத்திருக்கோயிலில் நாள்தோறும் நான்குகால பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. இதைவிட கார்த்திகைச் சோமவாரம், நவராத்திரி, சஷ்டி, சிவராத்திரி, பிரதோஷ காலங்கள் முதலானவை சிறப்பு விழாக்களாகவும் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைமாத வாராந்த நிகழ்வுகள்

04.01.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"மங்கள இசை"

வழங்குபவர்கள் :- T.M. வாசகர் குழுவினர்

---

11.01.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "மெய்ப்பொருள்"

வழங்குபவர் :- சுவாமி சித்ரூபானந்தா அவர்கள்

[ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை]

---

18.01.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

25.01.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

## ஞானச்சுடர் தைமாத வெளியீடு

வெளியீட்டுரை :- ஆறு. திருமுருகன் அவர்கள்

[தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்]

மதிப்பீட்டுரை :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

[அதிபர்]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/22/NEWS/2012

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org